சக்தி

மாத வெளியீடு

பொருள் அடக்கம்

பலிக்க வேண்டும் . . . . . தலையங்கம் 1
காலச் சூழல் . . . . குறிப்புகள் 2
லேசில் முடியுமா? . . . . . . ராஜாஜி 3
நீதி மறைந்தது ஏன் . வெ. சாமிநாத சர்மா 5
இதுதான் வாழ்க்கையா? . . . . . வ. ரா. 6
மகத்தான சுயநலம் . . . சுப. நாராயணன் 10
பிரிட்டிஷார் மனமாற்றம் . . . பியாரிலால் 13
மலேயா போகாதே! . . ஒய். எஸ். மேனன் 14
தொழில் . . . . . . கொத்தமங்கலம் சுப்பு 19
இக்கித் தியக்கம் . . . . நாரா 20
கிழங்கினம் . . . . மு. அருணசலம் 21
லட்சுமி . . . . துறைவன் 24
எழுத்தின் பிறப்பு . . . லா. ச. ராமாமிருதம் 29
உயிர் வளர்க்கும் மதம். மறை. திருநாவுக்கரசு 32
குடி கெடுக்கும் மதம் . . ம. சிங்காரவேலு 33
முந்நூறு ரூபாய் வீடு . . . . . 'நச்சன்' 34
சுதந்தரப் பழம் . . . . . . படங்கள் 37-44
துவேஷம் வேண்டாம் . . மகாத்மா காந்தி 45
அவள் முகம் . . . . "நவீனன்" 48
பஞ்சத்தைப் போக்க வழி . ஜே. ஸி. குமரப்பா 49
ஸிரியா, லெபனுன் . . . ஆர். எச். நாதன் 53
திட்டமும் செயல் அமைப்பும் நீலா மஜூம்தார் 57
வெகுமதி . . . . பிரேம் சந்த் 61
முதலாளிகள் பட்ஜெட். பெரி. சோமசுந்தரம் 69
இதுவா கலை? . . . . . . சு. விற்பன்னன் 73
புத்தக உலகம் . . . . . க. சு. அறிவோன் 77
பரீட்சை . . . . போ. குருசாமி 80

அணா 8

பார்த்திப ௵ பங்குனி ௴

மலர் : 12 இதழ் : 12

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
82857
சென்னை - 600 008



REGD. No. 1506
ASOKA

எம். கே. கிருஷ்ண செட்டி
அசோகா பாக்டரி - கோயமுத்தூர்

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: **மதுரை**

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் ரூ. 59,80,000

கிளைகள் : பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

பிரதம ஏஜெண்டுகள் :

எ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.

use KESHA-MITRA

HAIR-OIL

(VEGETABLE)

A LITTLE'S ORIENTAL BALM PRODUCT

அடர்த்தியான, கருகருத்த
நீண்ட கேசத்திற்கு

கேசமித்திரா

ஹேர் ஆயில்

வழுக்கை, பொடுகு, முதலியவற்றை
அறவே போக்குகிறது

எல்லா மருந்து வியாபாரிகளிடமும்
ஷாப்புகளிலும் கிடைக்கும்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
அண்ட் பார்மசூடிகல்ஸ் லிமிடெட்

11-12, முதல் லைன் பீச் :: சென்னை

உன்னத தயாரிப்புகள்!

மோஹன்ராம்

பெட்ஷீட்டுகள்
டவல்கள்

●

Stockists:

மனோஹரன் ஸ்டோர்ஸ்

181, கீழவாசல் :: மதுரை

தந்தி: 'Harantalky' போன்: நெ. 219

Chellarams
ESTABLISHED 18..
CHELLARAM GIANCHAND
THE OLDEST & MOST PROGRESSIVE HOUSE

FASHION SILK PALACE *now styled*

45, RATTAN BAZAAR, Madras

HARDAYAL

பழைய நாட் குடும்பம். சிறப்பாகத் தென் இந்தியாவிலும் பொதுவாக வெளியிலும் ஐம்பத்தைந்து வருடங்களாக செல்லாராம் கியான்சன்ட் அல்லது செல்லாராம்ஸ் என்று வழங்கிய கியாதிபெற்ற குடும்பத்தின் வழித் தோன்றல் இப்போது தனித் தொழில் செய்ய வந்திருக்கின்றார்.

ஹரிதயாள்

என்னும் பெயருடன் இந்தப் புது வியாபாரத் தொழில் 1946ஷ பெப்ரவரி மீ 14உ வியாழக்கிழமை பொது ஜனங்களுக்கு நன்றாய்ப் பழக்கமானதும் இதுவரை **"பாஷன் சில்க் பாலெஸ்"** எனப்படுவதுமான இடத்தில், அதாவது

சென்னை ரூட்டன் பஜார், 45-வது

இலக்கக் கட்டிடத்தில் தொடங்கி வியாபாரம் நடந்து வருகிறது. வியாபாரத் துறையிலும் வாடிக்கையாளரிடத்தும் பல வருடங்களாக நன்றாய் அறிமுகமான **ஹரிதயாள்** என்பவர் இந்தப் புது ஸ்தாபனத்தின் மூத்த பாகஸ்தர்.

இவருடைய நேரடியான அறிமுகப் பழக்கம்—புத்தப் புதிய தொழில் முறைகளைக் கையாளுதல்—வியாபாரத்துக்கு முதல்தரமான சரக்குகளைத் தருவித்தல்—பழைய ஸ்தாபகர் வகுத்த நேர்மையான வியாபார விதிகளை அடிப்படையாகக் கொள்ளல்—ஆகிய இத் திட்டங்களின் பயனாக வாடிக்கையாளர்கள் மிகவும் விரும்பக் கூடியதொன்று உருவாகிறது.

ஆதலால் இப்புது ஸ்தாபனம் பொது ஜனங்களிடம் வேண்டிக் கொள்வதாவது அவர்கள் வாடிக்கையை இந்த ஷாப்பில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதே.

ஹரிதயாள் HARDAYAL

டெலிபோன்: 3723
தந்தி: PALACE

45, ரூட்டன் பஜார்,
— சென்னை —

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

●

ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிறார்கள்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

பார்த்திப
மலர் 12

சக்தி

பங்குனி
இதழ் 12

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

பலிக்க வேண்டும்

பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூதர்களான இந்தியா மந்திரி லார்டு பெதிக் லாரன்ஸ், வர்த்தக மந்திரி சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஸ்ரீ ஏ. வி. அலெக்சாண்டர் ஆகிய மூவரும் மார்ச் 23-ம் தேதி இந்தியா வந்து சேர்ந்தார்கள்.

நாடெங்கும், இனி நடக்கப் போகும் பேச்சு வார்த்தைகளின் போக்கைப் பற்றியும், தூதின் சாதனை சாத்தியங்களைப் பற்றியும், முட்டுக் கட்டைச் சக்திகளின் பலா பலங்களைப் பற்றியும் பரபரப்பான ஹேஷ்யங்கள் கூறப்பெற்று வருகின்றன.

பிரிட்டிஷ் முதல் மந்திரியாயிருந்த எவரும் இதுவரை செய்யாத ஒரு காரியத்தை மேஜர் கிளமெண்ட் ஆட்லி செய்தார்: இந்தியா விடுதலை பெற வேண்டியதன் அவசியத்தை இங்கிலீஷ்காரர்களின் காமன்ஸ் சபையிலேயே, உள்ளத்தை உருக்கும் தெளிவான சொற்களில், வற்புறுத்தினார். பிரிட்டிஷ் சர்க்காரை மறைமுகமாக நடத்துவிக்கும் **டைம்ஸ்** பத்திரிகைகூட, இந்தியர்களுக்கு உடனே விடுதலை கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்று எழுதியிருக்கிறது.

ஏப்ரல் 2-ல் ராஷ்டிரபதி ஆஜாதும், 3-ல் அவர், பண்டித நேரு, சர்தார் பட்டேல் ஆகிய மூவரும் பிரிட்டிஷ் தூதர்களைப் பார்ப்பார்கள். காந்திஜி, அன்று மாலை, தூதர்களைச் சந்திப்பார். மறு நாள், காயிதே ஆஜாம் ஜின்னா சாகேப்புடன் பிரிட்டிஷ் மந்திரிகள் பேசுவார்கள்.

இன்னும் சில மாதங்களில், தற்காலிக இந்திய சர்க்கார் ஒன்று ஏற்படலாம். அரசியல் நிர்ணய சபை அமைக்கும் விஷயத்தில்தான் சற்றுச் சிக்கல் உண்டாகலாம். அரசியல் நிர்ணய சபை ஏற்பட்டதும், மத்திய நிர்வாக சபைக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதில் சிரமமிருக்காது. எப்படியும், இந்த வருஷ முடிவுக்குள்ளேயோ, மீறிப் போனால், இன்னும் இரண்டொரு வருஷத்திலோ இந்தியா இந்தியருக்கே சொந்தமாவது நிச்சயம்.

ருஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா மூன்றும் பிளவுபட்டுப் பிரிந்துபோய், மீண்டும் ஓர் அழிவுப் போர் நிகழாமல் தடுக்கவும், கீழ் நாடும் மேல் நாடும் சுமுகமாய் வாழ அடிகோலவும், உலக அமைதியின் அச்சாணியான இந்தியா சுதந்தரம் பெற்றாக வேண்டும்.

முந்தி மாதிரி நடக்காது என்று நம்முடைய பழைய நண்பர் கிரிப்ஸ் உறுதி கூறுகிறார். நாம் நம்புகிறோம். தூதர்கள் வரவு நல்வரவாக வேண்டுமென்று விரும்புகிறோம்.

காலச்சுழல்



வாழ்த்துகிறோம்: சக்தியின் நிர்வாக ஆசிரியரும், சக்தி காரியாலய சொந்தக்காரரும், சக்தி பிரஸ் மானேஜிங் டைரக்டரும், சண்டே டைம்ஸ் டைரக்டரும் ஆன திருவாளர் வை. கோவிந்தன் அவர்களுக்கும் அரிமளம் திருவாளர் ச. ராம. மு. அ. செல்லப்ப செட்டியா ரவர்கள் புதல்வி திருமதி வள்ளியம்மை அவர்களுக்கும் 20-3-46 புதன்கிழமை யன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் பல்லாண்டு வாழுமாறு அவர்களை நாம் வாழ்த்துகிறோம்.

கடன்காரப் பட்ஜெட்: 1946-47 வருஷத்தில் மத்திய சர்க்காரின் வருமானம் ரூ. 307 கோடியாகக் குறைந்துவிடும். செலவு 355 கோடியாகும். 48 கோடி துண்டு விழும். அமித லாப வரியை ரத்துச் செய்து, 75 கோடி ரூபாயை இழக்க என்ன அவசியம் வந்ததோ தெரிய வில்லை. பணக்காரர்களில் பலரும், பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் அனைவரும் இதைக் கண்டிக்கிறார்கள். மண்ணெண்ணெய் வரியைக் குறைப்பதால், ஏழை வீட்டில் விளக்கேற்றி வைத்து விட்டதாகச் சொல்லுவது அற்பத் தனம்.

சொந்தக் கணக்கு: சென்னை மாகாண பட்ஜெட், வழக்கம் போல், (62 லட்சம்) அதிக வரவு காட்டுகிறது. உணவுப் பரிகாரத்துக்கு 9 கோடி ஒதுக்கி யிருப்பது கடலில் புளி கரைத்த மாதிரிதான். மக்கள் வாழ்வைச் செம்மைப் படுத்த ஆக்கத் திட்டத்துக்கான செலவு ஒன்றையும் காணோம். ஆக்க வேலை செய்து கடன்படுவதுதான் நல்ல சர்க்காரின் லட்சணம். இப்போதுள்ள ஆலோசக கவர்னர் ஆட்சியில், இதைவிட என்னதான் எதிர்பார்க்க முடியும்?

உணவு போதுமா: சர் கிர்ஜா ஷங்கர் பாஜ்பேயும், சர் ஏ. ராமசாமி முதலியாரும் வாஷிங்டனில் உணவுக்காக உள்ளம் உருகும்படி மன்றாடிக் கொண்டே யிருக்கிறார்கள். ஆறு மாதத்தில் 5 லட்சம் டன் உணவாவது கிடைத்தாக வேண்டும். 12 கோடிப் பேரைப் பஞ்சப் பேய் இப்போதே பயமுறுத்தத் தொடங்கி விட்டது. 40 லட்சம் கேட்டதற்கு 24 லட்சம் டன் அரிசியும் கோதுமையுந்தான் தரமுடியும்போ லிருக்கிறது என்று ஜனாதிபதி ட்ருமான் இழுக்கிறார். இருந்தாலும், பூராத் தேவையையும் பூர்த்தி செய்ய முயல்வாராம். இந்தியாவுக்கு ருஷ்யா உதவலாம். சயாம்தான் உடனே உதவ முடியும். காலங் கடக்கு முன் வெளியுதவி வந்து, நாமும் தலைவர்கள் கூறும் யோசனைப்படி கட்டுப்பாடாய் இந்த நிமிஷம் முதலே நடந்து கொண்டால், நிலைமை அத்து மீறாமல் செய்ய வழி பிறக்கலாம்.

லேசில் முடியுமா ?

ராஜாஜி

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்மீது, பழக்கம் சுமத்தி யிருக்கும் சமூக மத சம்பந்தமான எல்லாக் குறைபாடுகளையும் நீக்குவதில் ஒத்துழைப்பதும் அதில் ஈடுபட்டு உழைப்பதும் காங்கிரஸ் திறந்து கூறிவிட்ட கொள்கை யாகும். இந்தியாவிற்குச் சுதந்தரம் கோருபவர்களே சமூக மதச் சீர் திருத்தத்திற்குப் பொறுப்பாளி கள் என்றும், தாழ்த்தப்பட்டோ ரின் அபிவிருத்தியில் காணும் மந்த கதியான முன்னேற்றத்திற் கும் அவர்களே காரணம் என் றும் வைத்துக்கொண்டாலும் சீர் திருத்த வாதிகளுக்கு இன்னும் அரசாங்க அதிகாரங்கள் அளிக் கப்பட வில்லை என்பதை மறந்து விடக் கூடாது—அமெரிக்காவில் நீக்ரோக்கள், தென்னாப்பிரிக்கக் குடியரசில் ஆப்பிரிக்கச் சுதேசி கள், நாகரிக ஐரோப்பாவில் யூதர்கள்—இவர்கள் விஷயமாக என்னென்ன செய்யப்பட் டிருக் கிறதோ, அதைவிட இந்தியா வில் தாழ்த்தப்பட்டோர் விஷய மாகச் சாதிக்கப்பட் டிருப்பது அதிகமென்றே சொல்ல வேண் டும். முதலாளித்துவச் சமூகத் தில் வறுமையில் ஏற்படும் விளைவு களுக்கு எல்லாம் இந்தியாவில் காங்கிரசின் கொடுமையோ, முட் டாள்தனமோதான் காரண மென்று கூற முடியாது.

"பழக்கத்தினால் ஏற்பட்டுள்ள சமூகக் குறை பாடுகளை எப்பேர்ப்பட்ட சட்ட பூர்வமான அடக்கு முறையைக் கொண்டும் போக்கி விட முடியாது.'' ஹிந்த் கித்தாப்ஸ் வெளியிட்டிருக்கும் அம்பேத்காருக்கு மறுப்பு என்ற நூலின் சாரம் இது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் மிகப் பெரும்பான்மையோர் மிகக் கேவலமான, சுகாதாரம் சிறிதுமற்ற வாழ்வு வாழ்வ தற்கு, எல்லை மீறிய அவர்களு டைய வறுமையும் முதலாளித் துவ அமைப்பில் அவர்களுடைய பொருளாதார நிலையின் நிர்ப்பந் தத்தால் ஏற்க நேரிடும் வேலை களுமே காரணமாகும் என் பதை எல்லோரும் ஒப்புக்கொண் டுள்ளனர்.

நல்ல நிலையிலுள்ள வகுப்பினர் வாழ்வையும் கெடுத்து விடாத படி, இவர்கள் நிலைமையை அபி விருத்தி செய்ய ஏற்ற ஓர் உருப் படியான கொள்கை வேண்டு மென்று ஸ்ரீமதி அன்னி பெசண்ட்டும் கூறியுள்ளார். தாழ்த்தப்பட்டோரிடம் பற்றுத லில்லாமையை வெளிக் காட்டிக் கொள்ளுதல் என்ற வாதத்தைத் தப்பர்த்தம் செய்துகொள்வது பெருத்த அநீதி யாகும்.

ஸ்ரீமதி அன்னி பெசண்ட் டையே தவறாக எண்ணிவிட்ட போது, காந்திஜிமட்டும் அதி லிருந்து எப்படித் தப்ப முடியும்?

"சுயராஜ்யத்திற்காக உயிர்ப் பவர், அஹிம்சாமூர்த்தி என் பதைவிட ஹரிஜனங்களின் ரக்ஷ கர் என்ற பெருமையைத்தான் காந்திஜி பெரிதும் மதிக்கிறார் என்பதை ஒவ்வொருவரும் அறி வர்'' என்று டாக்டர் அம்பேத் காரே தம்முடைய புத்தகத்தின் முகவுரையில் ஒப்புக்கொண் டுள் ளார்.

"தம் மனத்திற்கு மிகவும் பிடித்தமான ஒரு லட்சியத்திற்கு விரோதமாக, வேண்டுமென்றே காந்திஜி பாடு படுகிறார்" என்பதை நிலை நாட்டுவதற்காக அம்பேத்கார் அரும்பாடு படுவது விந்தைதான்!

1917 வரையில் காங்கிரஸ் தலைவர்கள்—தாதாபாய் நவுரோஜ், பத்ருடின் தயாப், உமேஷ் சந்திர பானர்ஜி, சுரேந்திரநாதர் போன்ற உத்தம சமூக சீர்திருத்த வாதிகள் உள்பட—சட்ட, அரசியல் கிளர்ச்சிக்கென ஆரம்பித்த இந்திய தேசியக் காங்கிரசின் தீர்மானங்களிலிருந்து மத சம்பந்தமான, அரை குறை மத சம்பந்தமான, எல்லாப் பிரச்சினைகளையும் ஒதுக்கியே வந்திருக்கின்றனர். சமூக மதப் பிரச்சனைகள் விஷயமாகத் தலையிடாத இந்தக் கொள்கை 1917-ல் மாற்றப் பட்டது.

தொன்று தொட்டு வரும் மதப் பழக்கம் காரணமாக இருந்து வரும் தாழ்த்தப்பட்டோரின் சமூகக் குறைபாடுகளைப் போக்கவேண்டும் என்ற காங்கிரசின் வேண்டுகோள் வெகு நாளாய் அலட்சியம் செய்யப் பட்டது. நீடித்த மத சமூகப் பழக்கங்களை எதிர்த்துப் போராடும் சீர்திருத்த வாதிகளுக்கு வரும் கஷ்டங்களைக் கொண்டு எந்த விதமான முடிவுக்கும் நாம் வந்துவிட முடியாது.

காங்கிரசின் அரசியல் இயக்கத்தோடு சமூக மத சம்பந்தமான சீர்திருத்தத்தையும் பிணைத்து, காந்திஜி காங்கிரசின் முழுப் போக்கையுமே மாற்றி விட்டார்.

பழக்கத்தினால் ஏற்பட்டுள்ள சமூகக் குறைபாடுகளை எப்பேர்ப்பட்ட சட்ட பூர்வமான அடக்கு முறையைக் கொண்டும் போக்கிவிட முடியாது. அபார சக்தி வாய்ந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தாலேயே இவ் விஷயத்தில் எதுவும் செய்ய முடியவில்லை.

சமூக மனச் சாட்சியால் மட்டுமே நிலைமை சீர்திருந்த முடியும் என்ற விஷயத்தில் நியாய பூர்வமான, சட்ட பூர்வமான நடவடிக்கைகளுக்கு ஒரு வரம்புண்டு.

ஜனநாயக சமூகத்தைப் பலாத்கார முறையில் சீர்திருத்துவதே அம்பேத்காரின் நோக்கம். இது சாத்தியமாகாது என்பது தெளிவு.

பொருளாதார விஷயங்கள் அபிவிருத்தியடைய வேண்டும். முதலாளித்துவ அடிப்படையில் இயங்கிக்கொண்டிருக்கும் நாட்டில் பார்லிமெண்ட் சட்டங்களைக்கொண்டு மக்களைச் செல்வர்களாகச் செய்வது எங்ஙனம் சாத்தியம்? ஒரு சமதர்ம அரசாங்கம், தேவையான மாற்றுகளைக் கண்டுபிடிக்கலாம். ஆனால், இந்தியாவில் ஒரு சமதர்ம அரசை ஸ்தாபிப்பதென்பது, தீண்டாதவர் விஷயமாகச் சீர்திருத்தம் கொண்டு வருவதைவிடச் சுலபமானது அல்ல.

தற்கால மோசமான நிலைமையின் அடிப்படையிலெழுந்த பிரத்தியேகச் சலுகைகளை அனுபவிப்பவர்களே சீர்திருத்தத்தை எதிர்க்கின்றனர். இந்த முக்கியமான பகுதியை நாம் பொறுமையோடு கடந்தாக வேண்டும்.

ரெக்ஸோனா

சரும அழகை உண்டாக்குகிறது

...சரும சுகத்தை பாதுகாப்பதன் மூலம்

சரும சௌந்தரியத்திற்கு சரும ஆரோக்கியமே உண்மையான அடிப்படை. ரெக்ஸோனா, சரும ஆரோக்கிய மேற்படும்படிச் செய்வதனாலும் சரும சுகத்தைப் பாதுகாப்பதனாலும், சரும அழகை உண்டுபண்ணுகிறதென்றே சொல்லலாம்.

இதை ரெக்ஸோனா எப்படிச் செய்கிறது? முதலாவதாக, ரெக்ஸோனாவில் கிருமி நாசினியாகிய ''கேடில்'' என்னும் கியாதிபெற்ற கலப்பு மருந்து இருக்கிறது. இம்மருந்து சருமத்திற்கு குணமளித்துப் போஷிக்கும் தைலங்கள் சேர்ந்தது. இரண்டாவதாக, இச்சோப்பின் தாராளமாக விரைவிலுண்டாகும் நுரை, சுகமளிக்கும் ''கேடில்'' மருந்தை சரும உபத்திரவங்கள் அடிக்கடி ஏற்படும் சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டுசேர்க்கிறது.

உங்கள் குடும்பத்தில் எல்லோரும் இந்த அழகான பசுமை வாய்ந்த ரெக்ஸோனா சோப்பைத் தினந்தோறும் உபயோகியுங்கள். மேலும், குழந்தைக்கு இச் சோப்பைப்போல குணமளித்துப் பாதுகாக்கும் மற்றொரு சோப் இல்லை என்பதை மறவாதீர்கள். ரெக்ஸோனா குழந்தையின் மெல்லிய சருமத்தைக் குளுமையாகவும், சுகமுடையதாகவும் செய்து காப்பாற்றுகிறது.

B.P. 29-50-40 TM REXONA PROPRIETARY LIMITED

CIBOL சைபால்

முகப்பரு, சேத்துப் புண், சொறி, சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்டபுண், கரப்பான் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

THE SOUTH INDIAN Mfg. Co., MADURA

மதராஸ் நகர், நெல்லூர், ஸீடீட், விசாகப்பட்டினம் ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள் :
ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், P. T. மதராஸ்

குண்டூர், கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களுக்கும், நிஜாம் சமஸ்தானங்களுக்கும் ஏஜண்டுகள்: சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா

மைசூர் சமஸ்தான ஏஜண்டுகள்: சேஷமஹால் பார்மஸி, பெங்களூர் ஸிடி.

நீதி மறைந்தது ஏன்?

வெ. சாமிநாத சர்மா

"பணக்காரர்களாய் உள்ளவர்கள், ஒரு கணத்தில் இறந்து போவதையும், இதற்கு முன் ஒன்றுமே இல்லாதிருந்தவர்கள் அந்தப் பணக்காரர்களுடைய சொத்துக்களுக்குஉடனேவார்சுதாரர்களாக வருவதையும் பார்த்த ஜனங்கள், செல்வமும் வாழ்வும் நிலையற்றவைகள் என்பதை உணர்ந்து, முடிந்தவரை எல்லாவற்றையும் அனுபவித்து விடுவதென்று தீர்மானித்தார்கள். சுகம் அனுபவிப்பதிலேயே இவர்கள் மனம் சென்றது. கண்ணியமாக உயிர் வாழ முடியுமா என்பதே நிச்சயமில்லாதிருக்கிற போது, அந்தக் கண்ணியத்திற்காக யார் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய விரும்புவர்? எது கண்ணியமான செயல், எதைச் செய்தால் உசிதமாயிருக்கும் என்பவைகளுக்குப் பதிலாக, ஒரு க்ஷணத்தில் சுகத்தை அனுபவிக்க வேண்டும், அதற்காக எந்தக் காரியத்தையும் செய்யலாம் என்ற மனோ நிலைமை ஏற்பட்டது. குற்றம் செய்கிறவன் கடவுளுக்கும் பயப்படவில்லை; மனிதன் இயற்றிய சட்டங்களுக்கும் பயப்படவில்லை. எல்லோரும் ஒரே மாதிரியாகச் செத்துப் போவதைப் பார்த்த ஜனங்கள், கடவுளைக் கும்பிட்டாலும், கும்பிடாமல் அலட்சியம் செய்தாலும் எல்லாம் ஒன்றுதான் என்று எண்ணினார்கள். மனித சட்டங்களுக்கு விரோதமாகச் செய்யப்படும் குற்றங்களுக்குத் தண்டனை விதிக்கப்படுமானால், அதற்காக யாரும் பயப்பட வேண்டியதில்லை. ஏனென்றால், அந்தத் தண்டனையை அனுபவிக்கக் கூடிய காலம்வரை உயிரோடிருப்பது என்ன நிச்சயம்?" என்று தூஸிடிடீஸ் என்ற சரித்திரக்காரன் பழைய கிரேக்க நிலையை வருணித்தான்.

இதன் காரணமாக ஜனங்களுடைய அன்றாட விவகாரங்களில் நீதி, ஒழுங்கு, ஒழுக்கம் முதலியவற்றைக் காண்பது அரிதாகிவிட்டது. அழிவு என்பது நிச்சயமாகத் தெரிந்திருக்கிற போது, ஏன் கிடைத்த மட்டில் சந்தோஷமாயிருக்கக் கூடாது, சுகத்தை அனுபவிக்கக் கூடாது என்ற நிலைமைக்கு வந்துவிட்டார்கள் ஜனங்கள். சீலமுள்ளவர்கள், செயல் புரிகிறவர்கள் மதிப்பிழந்து நின்றார்கள்; சொல்வன்மை யுடையவர்கள், செல்வம் படைத்தவர்கள் செல்வாக்குப் பெற்று வாழ்ந்தார்கள். விஷயம் எப்படி இருந்தாலும் 'நல்லதைக் கெட்டதென்றும், கெட்டதை நல்லதென்றும்' யார் சாதிக்கிறார்களோ அவர்கள் ஞானிகளாகக் கருதப்பட்டார்கள். போலித் தனமும் பகட்டும் அதிகமாயின. சுருக்கமாக, கிரேக்க நாகரிகத்தின் அஸ்திவாரம் நிலைகுலைந்து விடும்போல் இருந்தது. இதன் மத்தியில்தான் சாக்ரடீஸ் வாழ்ந்தான்; பிளேட்டோ பிறந்தான். இருவரும் சிறந்த தேசபக்தர்கள். தங்களை வளர்த்த கிரேக்க நாகரிகத்தை அழிவினின்று காப்பாற்றக் கங்கணம் கட்டிக் கொண்டார்கள்.

நெருக்கடி வேளைகளில் அலைப்புண்டு தவிக்கும் மக்களுக்கு மகான்கள் உதவுகிறார்கள். காந்திஜியைப் பெற்ற நம்மைப் போல், பிளேட்டோவைக் கிரேக்கர் பெற்றார்கள். அரசியல் என்ற நூலில் ஓர் ஏடு இது.

இதுதான் வாழ்க்கையா?

வ. ரா.

பிரசங்கம் செய்வதற்காக, மேடையில் ஏறி விட்டால், நம்மவர்களில் பெரும்பான்மையோர் நிலைதவறிப் போய்விடுகிறார்கள். கூடியிருப்பவர்களைக் குஷிப்படுத்த வேண்டுவது தங்கள் கடமையெனக் கொண்டு, கண்டதையெல்லாம், பொருத்தமில்லாமல் பேசுகிறார்கள். விஷயத்தை ஊன்றிக் கவனித்து ஆராய்ந்து முடிவுக்கு வர மனமில்லாதவர்கள் நுனிப்புல், மேய்வதுதான் இயற்கை. இப்படித்தான், சேலம் பிராமண மகாநாட்டில், ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் செய்திருக்கிறார். இதைப் போலவே, ஸர் பி. டி. ராஜன் வேறொரு சந்தர்ப்பத்தில் செய்திருக்கிறார்.

மேடையின் மேல் ஏறினதும், இவர்களுக்கு உற்சாகம் உண்டாகிவிடுகின்றது. உடனே, நமது முன்னோர்களைப் பற்றியும், நமது நாட்டின் பண்டைக் காலப் பெருமையைப் பற்றியும் உன்னத நாகரிகப் பண்பைப் பற்றியும் வாசாமகோசரமாகப் பேசத் துவங்கி விடுகிறார்கள். கூட்டம் எதற்காகக் கூடுகிறது? செத்தவர்களைப் பற்றிப் புகழுரை கேட்கவா? தற்போதுள்ள சமுதாய நிலைமையை ஆராய்ந்து, நிலைமை சிக்கலாகவும் ஆபத்துக்குள்ளானதாகவும் இருந்தால், அதற்கு மாற்றுத் தேடுவதற்காகவே கூட்டம் கூடுகிறது.

"நமது முன்னோர்களின் பெயரைச் சொல்லிக்கொண்டு, உலகத்தில் நாம் பிச்சை கேட்க வேண்டுமா? நமது முன்னோர்களின் பெருமையைப் பாடி, நமது சொந்தச் சிந்தனா சக்தியை நாம் இழக்க வேண்டுமென்பதுண்டா? இதுதான் வாழ்க்கையா?"

உண்மையான பிரச்சினையைப் பற்றி யோசிக்க மனமில்லாமலோ, அல்லது திறமையில்லாமலோ, அல்லது சோம்பல் மிகுதியினாலோ, மேடைப் பிரசங்கிகளும் மற்றவர்களும் நமது முன்னோர்களைப் பற்றிய புகழுரையில் தாவிக் குதித்துவிடுகிறார்கள்.

நமது முன்னோர்கள் என்று சொல்லும் பொழுது, இவர்கள் எந்தக் காலத்திய முன்னோர்களைக் குறிப்பிடுகிறார்கள் என்பது தெரிவதில்லை. நேற்று இறந்த நாராயண தாசும் நமது முன்னோர் ஆகி விடுகிறார்; சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே மறைந்த நம்மாழ்வாரும் நமது முன்னோர்தான். சமண சமயத்தைச் சேர்ந்த ஒரு முன்னோரை, தற்காலச் சைவர்கள் தங்கள் முன்னோர் என்று ஏற்றுக் கொள்ளுவார்களா? நாயன்மார்களைத் தங்கள் முன்னோர்கள் என்று தற்காலத்திய தமிழ் வைஷ்ணவர்கள் ஒப்புக் கொள்ளுவார்களா? நமது முன்னோர்கள் என்ற சொல்லை, தமிழ்க் கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் எந்த அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளுவார்கள்? எனவே, முன்னோர்கள் என்ற சொல்லைச் சமுதாயமாகப் பிரயோகம் செய்து, கேட்பவர்களின் மனத்தைக் குழம்பச் செய்வதில் பயன் இல்லை. முன்னோர்களின் பரம்பரையில், தீண்டாமல் ஒதுக்கி

வைத்திருந்த ஹரிஜனங்கள் எப்படிப் பெருமை கொள்ள முடியும்? எனவே, முன்னோர்கள் என்று சொல்லி, தங்க முலாம் பூசுவது ஏய்ப்பு வித்தை யாகும்.

இப்பொழுது துணிப் பஞ்சமும் உணவுப் பொருள் பஞ்சமும் ஏற்பட்டிருக்கின்றனவே, அவற்றுக்கு விமோசனம் உண்டா என்று கேட்டால், கேள்விக்குப் பதில் சொல்லாமல், நமது நாட்டில் டாக்கா மஸ்லின் இருந்த கதையைப் பேசி மழுப்பலாமா? நமது முன்னோர்கள், தேவர்களும் பொருமைப்படும்படியாக, அறுசுவை நிறைந்த உணவைத்தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள் என்று பெருமையுடன் பேசினதால், தற்போதைய உணவுப் பஞ்சப் பிரச்சினை தீர்ந்துவிடுமா?

இந்த மாதிரிதான், மேடைப் பிரசங்கிகள் செய்துவிட்டு, தங்கள் கடமையை ஆற்றிவிட்டதாக எண்ணிக்கொள்ளுகிறார்கள். நமது முன்னோர்கள் பெருமையுடன் வாழ்ந்தது உண்மையாகவே இருக்கட்டும். அவர்கள் சந்ததியில் தோன்றின நாம், ஏன் அடிமைகளாகவும், அகதிகளைப் போலவும் வாழ வேண்டும் என்று கேட்டால், அன்னியர் ஆட்சி, காலக் கோளாறு, உலகச் சக்திகளின் விபரீதப் போக்கு என்று பொருத்தமும் உண்மையும் இல்லாதவைகளை அடுக்கிக் கொண்டே போவார்கள். சுதந்தரர்களாகவும், சூரர்களாவும் நமது முன்னோர்கள் வாழ்ந்திருந்தால், அவர்கள் சருக்கி விழுந்து, அன்னியர்களுக்கு ஏன் ஆட்பட வேண்டும்? இதற்கு நேரே பதில் சொல்ல மாட்டார்கள். சரித்திர சம்பவத்துக்கு நாம் என்ன செய்யலாம் என்று நமது வாயை மூடப் பார்ப்பார்கள்.

இது வித்தையாகும்; இது வித்தகமாகும். இது விமோசனத்துக்கு வழி ஆகாது.

நம்மவர்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பும் ருசியும் இல்லை என்பது உலகப் பிரசித்தமான விஷயம். நம்மவர்களுக்கு ஆச்சரியமான பரலோகப் பார்வை இருக்கிறது என்று நம்மைத் தட்டிக் கொடுத்துவிட்டு, அன்னியர்கள் யாவரும் நம்மிடம் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விடுகிறார்கள். பொன் போட்டால் பொன் விளையக் கூடிய மண்ணைச் செல்வமாகக் கொண்டது இந்த நாடு. அப்பேர்ப்பட்ட நாட்டிலே உணவுப் பஞ்சம் ஏற்பட்டது என்றால், அது மக்களின் முட்டாள் தனத்தைத்தானே தெளிவாகக் குறிப்பிட முடியும்? நம்மவர்கள் ஏன் யோசிக்கும் திறமையை இழந்தார்கள்? இப்பொழுதிருக்கும் தலைமுறையில் இந்தியர்கள் நன்றாக யோசிக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், குருவியின் தலையில் பனங்காயைச் சுமத்தினது போல, சிக்கலான பிரச்சினைக்கு மேல் சிக்கலான பிரச்சினையாக, நம்மவர்களின் மேல் பிரச்சினைகள் வந்து குவிந்து கவிந்துகொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் யார்? நமது மூதாதைகள். அன்னியர் ஆட்சிக்குக் காரணம் யார்? நமது மூதாதைகள். ஹிந்து முஸ்லீம் சிக்கலுக்குக் காரணம் யார்? நமது மூதாதைகள். நாகரிகப் பண்பு சிறிதும் இல்லாத தீண்டாமைக்குக் காரணம் யார்? நமது மூதாதைகள். கசப்பையும் கலவரத்தையும் திகைப்பையும் திண்டாட்டத்தையும் உண்டாக்கி

வரும் ஜாதி வேற்றுமைகளுக்கு நீங்களும் நானுமா காரணம்? நமது மூதாதைகள்தான்.

இல்வாழ்க்கையை, இன்பமே இல்லாத வாழ்க்கையாகச் செய்தது நானா, நீங்களா? நாமல்ல. நமது பெருமைதாங்கிய மூதாதைகள்தான். வாழ்க்கையில் வெறுப்பையும் பயத்தையும் உண்டாக்கியவர்கள் யார்? மண்ணாசை கூடாது என்று சொன்னவன் நானா? பெண் ஆசை கூடாது என்று உபதேசம் செய்து, ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே மனக்கசப்பை உண்டாக்கியது யார்? நானா? பொன்னாசை கூடவே கூடாது என்று சொல்லி, பணத்தைப் பேய் என்று வர்ணித்து, நமது நாட்டார்களைத் தரித்திர நாராயணர்களாகச் செய்தது நானா?

நமது முன்னோர்களின் அசட்டுத்தனத்தால் உண்டான பாப மூட்டைகளைச் சுமப்பவர்கள் நாம் என்பதை நீங்கள் ஒரு நாளும் மறக்க வேண்டாம். நீங்களும் நானும் இன்றைக்கு அடிமைகளாகவும் அற்பர்களைப் போலவும் அன்றாடம் காய்ச்சிகளாகவும் வாழ்ந்து வருவது நமது விருப்பத்தின் பயனாகவா? இல்லவே இல்லை. அது நமது மூதாதைகள் நமக்காக விட்டு விட்டுப் போன சீதனமாகும், அருந் தனமாகும். இப்பேர்ப்பட்ட மூதாதைகளை, மேடையில் எதற்காகப் போற்ற வேண்டும்? அவர்களைத் தூற்ற வேண்டும் என்று நான் சொல்ல வில்லை. பழைய பஞ்சாங்கத்தை, புகமூரைச் சுருதியில், பொய்யாகப் படிப்பதில் என்ன பயன் என்று நான் கேட்கிறேன்.

காயம் பொய்யாம்! அது காற்றடைத்த பையாம்! மாயனார் குயவன் செய்த மண்ணின் பாண்ட ஓடாம்! நீரில் குமிழி போன்றதாம் யாக்கை! அது நிலை இல்லாததாம்! படைப்பே ஒரு மாயத்தோற்றமாம். பிறவி என்பது பந்தமாம்! அது முறைக் காய்ச்சல் போன்ற ஒரு நோயாம்! பிறக்காமலிருக்க வேண்டுமாம்! பெண்ணாகி வந்த ஒரு மாயப் பிசாசை நம்பவேண்டாமாம்! சேலை கட்டிய மாதர்! ஐயோ! மனத்தால் கூட ஸ்மரிக்கப்படக் கூடாதவர்களாம்! அழிந்து போகிற உலகத்தில், அழியாத பொருள் எது என்று தர்க்கம் சொல்லுகிறார்கள். பட்டு உடுத்தினால், பாசம் அதிகரிக்குமாம்! குழந்தையைத் தழுவி முத்தமிட்டுக் கொஞ்சினால், பந்தம் கெட்டிப்பட்டு விடுமாம்! வீடு சதமில்லையாம்! ஆகவே, குச்சு வீட்டிலிருந்தால் என்ன? மச்சு வீட்டிலிருந்தால் என்ன? வெட்ட வெளியான ஆகாயத்தின் கீழ் குடியிருந்தால்தான் என்ன? பரமனடியே கதி என்று வாய் வேதாந்தம் பேசி, வாழ்க்கையைக் கெடுத்த நமது மூதாதைகளைப் பற்றி, நாம் அதிகமாகக் கவலைப்பட வேண்டியதில்லை என்பது என் கருத்து.

வாழ்க்கையிலே வெறுப்பு ஏற்படுமாகில், கவிதையும் காவியமும் தோன்றுமா? கலைகள் எவ்வாறு செழிக்க முடியும்? வானை முட்டும்படியான மாளிகைகளை, யார் கட்டத் துணிவார்கள்? ரோடு எதற்காக? மாடு எதற்காக? உழக்குத் தானியம் இருந்தால் போதாதா என்று அசட்டுத் திருப்தி அடையும் மனிதர்களுக்கு ஏராளமாகப் பயிர் செய்ய வேண்டும் என்ற ஆவல்

ஏற்படுமா? நாக்கை வளர்க்கக் கூடாது என்று கட்டளை பிறந்த பின்னர், சமையலில் ஆராய்ச்சி செய்து, ருசியும், புஷ்டியும் உள்ள ஆகாரங்களைக் கண்டு பிடிக்க, யாருக்கு ஊக்கம் பிறக்கும்?

நாடு சதமில்லையாம்! எனவே, நாட்டைப் பற்றிய கவலை நமக்கு எதற்காக? நாட்டைப் பற்றிக் கவலைப்படாத மக்கள், அதைக் காப்பதற்கு வழி தேடுவார்களா? கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்று உளறிக் கொண்டிருந்தால், 'இவர்கள் சாதுக்கள் போலிருக்கிறது. இவர்களுடைய நாட்டில் ஆக்கிரமிப்புச் செய்யக் கூடாது. அது தகாத காரியம்' என்று அன்னியர்களின் மனச்சாட்சி அவர்களை உறுத்துமா? வாழ வகை தெரியாத மடச் சாம்பிராணிகள் என்று நமக்குப் பட்டம் சூட்டி விட்டு, நம்மை அடிமைகளாகச் செய்து, நம்மை நாகரிகப்படுத்துவதாக உலகத்துக்குப் பறைசாற்றுவார்கள் அன்னியர்கள். இந்த நிலைமைதானே நம்மவர்களுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது?

நம்மவர்கள், நாலா விதத்திலும் திக்கற்ற கபோதிகள் ஆனார்கள். இந்தக் கபோதி நிலைமைக்குக் காரணம் ஏதாவது சொல்ல வேண்டாமா? முன்னை வினைப் பயன் என்று சலித்துக்கொண்டு சொல்லுகிறார்கள். 'நம்முடைய பூர்வ ஜன்மாந்தரப் பலனை நாம் அனுபவித்துத்தானே ஆக வேண்டும்' என்று பக்தர்களைப் போல, போலித் தத்துவம் பேசுகிறார்கள். பூர்வ ஜன்மம் ஒன்று இருந்தது என்று யாருக்குத் தெரியும்? அதை ருசுப் படுத்த ஏதேனும் அத்தாட்சி இருக்கிறதா? அப்படியே பூர்வ ஜன்மம் ஒன்று இருந்ததாகவே வைத்துக் கொள்ளுவோம். அந்த ஜன்மத்தில் செய்த வினைகள், இந்தப் பிறப்பில்கூட, வேட்டை நாய்களைப் போலத் துரத்த வேண்டுமென்பதுண்டா? ருசுவில்லாதவைகளையும் ருசுப்படுத்த முடியாதவைகளையும் பற்றித் 'தொண தொண' வென்று பேசிக் காலம் கழிப்பதில் என்ன பிரயோசனம்?

நம்மவர்களின் வாழ்க்கையை, பல வகைகளிலும் உருப்படி இல்லாமல் நமது முன்னோர்கள் செய்து விட்டார்கள் என்று நான் ஏன் சொல்லக் கூடாது? வாழ்க்கையை அடியோடு செப்பனிட்டாலொழிய, நமக்கு விமோசனம் கிடையாது என்று நான் ஏன் சொல்லக் கூடாது? பழமையின் பெருமையைப் பற்றிப் பேசுவதால், நமது தற்போதைய பிரச்சினைகள் தீரா என்று நான் ஏன் சொல்லப்படாது? நமது முன்னோர்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு, உலகத்தில் நாம் பிச்சை கேட்க வேண்டுமா? நமது முன்னோர்களின் பெருமையைப் பாடி, நமது சொந்தச் சிந்தனை சக்தியை நாம் இழக்க வேண்டுமென்பதுண்டா? இதுதான் வாழ்க்கையா? யோசித்துப் பாருங்கள். நானும் அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன். எல்லோரும் கலந்து, வாழ்க்கை என்பது இன்னதுதான் என்று நிர்ணயம் செய்வோம். குறியில்லாத வாழ்க்கை பாழ்; நெறி இல்லாத வாழ்க்கை பயனற்றது. இன்பமில்லாத வாழ்க்கை சாரமற்றது. அறிவுத் தெளிவு இல்லாத வாழ்க்கை மரக்கட்டை போன்றது. வாழ்க்கை மாண்பு கொண்டது என்பதை மறக்க வேண்டாம்.

மகத்தான சுயநலம்

சுப. நாராயணன்

தன்னைத் தானே காத்துக் கொள்ள வேண்டும் என்கிற உணர்வுதான், மனிதனுக்குள்ள அடிப்படையான உணர்வுகள் அனைத்துள்ளும் முதன்மையானது, மிக்க பலமானது. இதற்கு அடுத்த படியாக முக்கியத்துவம் வாய்ந்த உணர்வு காம விழைவு தன் இனத்தைப் பெருக்குவதன் மூலம், தனித்த முறையில் தான் அழிந்துபட்டாலும், தன் இனம் கிளை வெடித்துக் கொண்டே போய், நெடுகிலும் வாழ்ந்து வர ஆண் பெண் இணை விழைவு உதவுவதால், இதுவும் தற்காப்பு உணர்வின் கிளைக் கூறு, துணைக் கூறுதான். இந்த இரண்டு உணர்வுகளையும் அடிப்படையாகக் கொண்டே இதர உணர்வுகள் நம் உள்ளத்தில் பல படியில் இடம் பெறுகின்றன.

எல்லா விஷயமும், எல்லாருக்கும், எல்லாக் காலத்திலும் ஒரே மாதிரி படுவதில்லை. உடல் நிலை, உள்ளத்தின் நிலை, சூழ் நிலைகளைப் பொறுத்து விஷயங்களின் முக்கியத்துவம் கூடிக் குறையும். அற்ப விஷயங்கள் அற்ப மாறுதலால் மாறுபட்டுப் போகும். அடிப்படையான விஷயங்கள் அடிப்படையான மாறுபாடுகளாலேயே மாறும். அடிப்படை விஷயங்களை அற்பமாகவும், அற்ப விஷயங்களை அடிப்படையாகவும் கருதிக் காரியம் செய்யப் புகுவதால்தான் தவறுகள் ஏற்படுகின்றன. தவறுகள் இல்லாமல் செய்ய முயல்வது சரிதான். ஆனால், தவறுகளே நிகழாமல் செய்ய முடியவே முடியாது. இதுவரை முடியவில்லை. இனி முடியுமோ, என்னவோ, சந்தேகந்தான். எல்லாரும் இயந்திரங்களாக மாறினால்தான் ஒரே விதமான போக்கு சகலரிடத்தும் இருக்க முடியும். பாலும் தேனும் வழிந்தோடும் உம்பர் உலகத்தைச் சிருஷ்டிக்க எத்தனையோ முயற்சிகள் நடந்தாயின. இவை பூர்த்தியாகாதது நல்லதுதான்.

மனிதன், சேர்ந்து வாழும் ஒரு சமூகப் பிராணிதான். ஆனால், எண்ணற்ற மனிதப் படைப்பில் எண்ணற்ற தனிச் சிறப்பியல்புகள் இருப்பது எவ்வளவு அற்புதமான விஷயம்! வாழ்க்கைச் சந்தையில் ஓடி ஆடித் திரிந்து, மல்லிட்டுப் போரிட்டு, அழுது, சிரித்து, அன்பு பூண்டு, காதல் செய்து, பற்பல காரியங்களைப் பற்பல மாதிரியில் பற்பலர் ஆற்றி வருவதனால்தான் வாழ்வு ரசிக்கிறது.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பது" நல்லது. இதற்காக முயலுவதும் நல்லது. ஆனால், எந்த முயற்சியும் பூராவாக நிறைவேறிவிடுமா? நினைத்த மாத்திரத்தில் ஒருவனை மற்றவன் கெடுத்துவிட முடியாது. நினைத்த மாத்திரத்தில் ஒருவனை மற்றவன் உயர்த்திவிடவும் முடியாது. நீங்கள்தான் பார்த்து வருகிறீர்களே, இதுவரை யாராவது—எவ்வளவு பெரியவனாகத்தான் இருக்

எல்லாரும் சுயநலத்தைக் கண்டிக்கிறோம். ஆனால், எல்லாரிடத்தும் அது இருந்து வரத்தான் செய்கிறது. காரணம் என்ன?

கட்டும், எப்படிப்பட்ட மகானுய்த்தான் இருக்கட்டும்— நன்மையையோ, தீமையையோ, நினைத்தது நினைத்தபடியே செய்ய முடிந்திருக்கிறதா?

சிந்திக்கலாம், திட்டம் போடலாம். அதை நிறைவேற்றலாம். ஆனால், போட்ட திட்டம் எழுத்துக்கெழுத்து கச்சிதமாய் நிறைவேற முடியாது. அது அவசியமுமல்ல. அடிப்படையில் வெற்றி கண்டால் போதும். சில்லறை மாறுதல்களை நாம் சட்டை செய்ய வேண்டியதில்லை. ஆனால், இன்று சில்லறை விஷயமாகப் படுகிறது நாளை அடிப்படை விஷயமாக மாறி விடுவதுமுண்டு. அதிலேதான் ஸ்வாரஸ்யம் அதிகம்.

மனித சமூகம், தனித்தனியாய் இயங்கிக்கொண்டு, தன்னளவில் பரிபூரணத்துவம் வாய்ந்த மனிதக் கூறுகளைக் கொண்ட ஒரு சந்தை. நம்முடைய சௌகரியத்துக்காக இதை அப்படி அப்படியே சலனமின்றி நிறுத்திவைக்க முடியாது. நம்முடைய சுயநலத்தின் தீவிரத்தைப் பொறுத்து, வாழ்க்கைப் போரில் நாம் கொள்ளும் பங்கு கூடவோ குறையவோ செய்கிறது. நாம் விரும்புவது அற்பப் பொருளானால், அதற்குப் போட்டி அதிகமிராது. அப்படி இருந்தாலும், நம்மைப் போன்ற அற்பச் சுயநலமிகளோடுதான் நாம் போராட வேண்டிவரும். நாம் விரும்புவது மிகப் பெரிய பொருளானால், அங்கேயும் அதிகம் பேர் போட்டிக்கு வர மாட்டார்கள். ஆனால், போட்டியிடுகிற சொற்பப் பேர் படுபேர் வழிகளாயிருப்பார்கள். மகத்தான சுயநலமிகளாயிருப்பார்கள். இவர்களோடு போரிடுவது மிகவும் சிரமம். ஆனால், இந்தப் போராட்டத்தில் வென்றவனுக்கும் கீர்த்தி, தோற்றவனுக்கும் கீர்த்தி.

மகத்தான தியாகிகள் மகத்தான சுயநலமிகள். தன் ஒருவனைப் பற்றி மட்டும் சிந்தித்து, தன் ஒரே ஒருவனுடைய நலத்துக்காக மட்டும் பாடுபடுகிறவன் பிச்சைக்காரத்தனமான சுயநலமி. தன் குடும்பத்துக்காகவும், தன்னைச் சார்ந்தவர்களுக்காகவும் பாடுபடுகிறவன் சாதாரணச் சுயநலமி. உலகமே தன்னுடையது, உலகத்தார் அனைவரும் தன்னைச் சார்ந்தவர்களே என்று எண்ணி; அவர்களுக்காகப் பாடுபடுகிறவன் மகத்தான சுயநலமி.

சுயநலத்தால் பிறர் நலம் பாதிக்கப்படுமே என்பார்கள். பிறருக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ, விரும்பியோ, விரும்பாமலோ பாதகம் செய்யாமல் நம் நலத்தைக் காத்துக்கொள்ள முடியவே முடியாது. எல்லாரும் ஏக காலத்தில் இன்புற்றிருக்க முடியாது. அவரவருடைய முறை வரும். மகத்தான சுயநலத்தால் பெரும் பாலாருக்கு நலம் விளையும். அற்பத் தனமான பொல்லாங்கும் விளையாது.

காந்திஜியின் மகத்தான சுயநலம் உலக ஏகாதிபத்தியங்களைப் பாதிக்கிறது. என்னுடைய சுயநலம் என்னைச் சுற்றி யுள்ளவர்களைப் பாதிக்கிறது. தன்மையில் வேற்றுமை யில்லாவிட்டாலும், ஆழத்திலும், பரப்பிலும் இருக்கும் மகத்தான வேற்றுமையால், சுய நலத்தின் பண்படாத ஆரம்ப நிலையை நாம் பழித்துக் கூறுகிறோம். அதே சுய நலத்தின் பண்பட்டு விரிந்து பரந்துபோன

நிலையைத் தியாகம் என்கிறோம். கைம்மாறு கருதாமல் செய்வது தியாகம் என்கிறோம். கைம்மாறு என்றால், பணம், காசு, சொத்து, சுகம் மட்டுந்தானா? உடல் சம்பந்தமான கைம்மாறை விட, ஆத்மீக — மன — சம்பந்தமான கைம்மாறு எவ்வளவோ பெரியது. என்ன செய்தாலும், மறு பயன் வந்தே தீரும். கொடாமல் பெறுவதும், பெறாமல் கொடுப்பதும் இல்லவே இல்லை. சர்வத்தையும் துறந்தவர் அடையும் மன—ஆத்மீக—இன்பத்தில் ஒரு தினைத்துணைகூடச் சர்வமும் பெற்றவர் அடைய முடியவில்லையென்றால், யார் தியாகி, யார் சுயநலக்காரர்?

வேண்டுமென்றாலும், வேண்டாமென்றாலும், சுய நலம் இருக்கவே செய்கிறது. அது திருட்டுத்தனமாய் இருந்து வரத் தேவையில்லை. அதைப் பண்படுத்தி மகத்தான சுயநலமாக ஆக்க நாம் முயலவேண்டும். சுயநலம் உச்ச நிலையை எட்டும்போது—மகத்தான சுயநலமாக ஆகும்போது—வேறொரு மகத்தான பண்பாகிய தியாகம் செய்கிற நன்மையை இதுவும் செய்யவே செய்யும்.

மகத்தான காமம், காதலாகிறது. மகத்தான கொலை யுத்தமாகிறது. மகத்தான சுரண்டல் ஏகாதிபத்தியமாகிறது. மகத்தான பித்தலாட்டம் வியாபாரமாகிறது. மகத்தான சூழ்ச்சி ராஜதந்திரமாகிறது. மகத்தான ஆடம்பரம் கௌரவமாகிறது. மகத்தான துவேஷம் தேச பக்தியாகிறது. மகத்தான சண்டித்தனம் அஹிம்சை நெறியாகிறது. மகத்தான குறும்புத்தனம் நகைச்சுவை யாகிறது. மகத்தான பொய் கவிதை யாகிறது. அப்போது, மகத்தான சுயநலம் தியாகமாகாதா, என்ன?

*

கொடுத்துவிடுங்கள்

நாம் இந்தியாவில் நிலைத்திருப்பதற்கு இந்தியர்களிடையே உள்ள வேறுபாடுகளையே நம்பியிருக்கிறோம் என்ற சந்தேகத்திற்கு நாம் இனி மேல் இடமளிக்கவே கூடாது. இந்தியா சுதந்தரமடைய வேண்டுமென்பதே பிரிட்டன் விருப்பம். அரசாங்கம் இந்தியரின் கைக்கு மாறுவதில் தாமதமேற்பட்டாலும், புதிய அரசியல் சட்டத்தை இயற்றுவதற்காக ஸ்தாபனத்தை அமைக்கும் வேலை இழுத்துக் கொண்டே போனாலும், அது பிரிட்டனுக்கு மிகப் பெரிய ஏமாற்றமாகவே இருக்கும். ஸ்ரீ ஆட்லி மிக அழகாகப் பேசினார். பிரிட்டிஷ் பொது மக்களின் அபிப்பிராயம் மாறிவிட்டது. கிழக்கில் வெள்ளம் கரைபுரண்டோடுவதை நாம் நன்கு உணருகிறோம். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பா லிருக்கும் பிரிட்டிஷ் சர்க்காரின் தலையீடில்லாமல், இந்தியர்களுக்காக இந்தியர்களே அரசாங்கம் நடத்தும் சுதந்தரம் வேண்டுமென்று இந்தியா கோருவது, நியாயம். இயற்கை என்பது மட்டிலுமல்ல, அது தடுக்க முடியாதது. இதைக் கோருபவர்கள் ஆவேசங்கொண்டு நிற்கிறார்கள்; இடையூறுகளை அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள்; சில விஷயங்களில் உடனடியான நன்மையைக் குலைக்கக்கூடத் துணிந்து நிற்கிறார்கள். அது ஈடேறுவதைத் தடுக்க நமக்கு உரிமை யில்லை.''

— மான்செஸ்டர் கார்டியன்

வெஸ்டெண்ட் கடிகாரங்களின் இணையற்ற உழைப்பை நீங்கள் உணர்ந்ததுண்டா

நீண்ட காலம், நிற்காமலும், தொடர்ச்சியாகவும், உழைப்பதே, கடிகாரத்தின் குறிப்பிடத்தக்க தனிப்பெருமை. கடிகாரம் சிறியது, பெரியது என்ற அதன் தரத்துக்குவந்தது போல், வருடத்திற்கு அல்லது இரண்டு வருடத்திற்கு ஒருமுறை சுத்தம் செய்யவேண்டுவது தவிர, வெஸ்டெண்டு கடிகாரங்கள் வாழ்க்கை பூராவும் சரியான காலங் காட்டும் திறமையுடையது.

நேர்த்தியான உலோகங்களின் இணைப்புடன் அமைக்கப்பெற்ற சிறந்த கடிகாரங்கள் தான், தங்கள் சொந்தக்காரர்களுக்கு சிறப்பாக சேவைசெய்ய முடியும். ஆகையினால்தான் நிகரற்ற வெஸ்டெண்டு கடிகாரங்களை பெரும்பாலோர் உபயோகிக்கின்றனர்.



கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாகவே, இந்தியாவில் உபயோகிக்கப்படும் சிறந்த கடிகாரங்களை தயாரிப்பவர்கள் என்ற பெருமை எங்களுக்கு உண்டு.

நியூ காலிபர் "A-2"

ரோல்ட் கோல்ட், ... ரூ. 89

வெஸ்டெண்ட் வாட்ச் கம்பெனி

பம்பாய் — கல்கத்தா

WEST END WATCH Co.

BOMBAY **CALCUTTA**

2000 வருஷங்களுக்குமுன்
முன்னோர்கள் சந்தணத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தணத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தணத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனுண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.
மைசூர்
சந்தண சோப்
சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே
மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

பிரிட்டிஷார் மனமாற்றம்

பியாரிலால்

பார்லமெண்ட் அங்கத்தினர்களுக்குக் கடிதங்கள் எழுதி, இந்தியப் பிரச்னேயின் முக்கியத்துவத்தையும், அதனை உடனே தீர்க்க எல்லாவித முயற்சியும் எடுக்க வேண்டியதன் அத்தியாவசியத்தையும் பற்றி நாங்கள் வற்புறுத்தி யுள்ளோம்.

நிலைமையைச் சமாளிக்க உள்ள ஒரே வழி, நாட்டை அதன் மக்களாகிய உங்களிடம் ஒப்படைத்து விட்டு "இந்தியாவை விட்டு வெளியேறுக" என்ற மிக்க நேர்மையான திட்டத்தைப் பூர்த்தி செய்துவைக்க எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக்கொள்வதுதான்...

நான் நேசிக்கும் மக்களுக்கு எதிராக ஆயுதந் தாங்க வேண்டி வந்தால், மேன்மை தங்கிய மன்னர்பிரான் படையினன் என்ற முறையில் என் நிலைமை என்ன? அவ்வளவு தூரம் அறிவு கெட்டுப்போய், அத்தகையதோர் உத்தரவை யாரேனும் இடுவரேல், நான் அதற்குக் கீழ்ப்படியக் கண்டிப்பாய் மறுத்து விடுவேன் என்று எங்கள் தொகுதிப் பார்லமெண்ட் அங்கத்தினருக்கு நான் அறிவித்ததோடு, எங்கள் நிலைமையைத் தெளிவாக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் நான் அவரைக் கேட்டுக் கொண்டேன். ஓர் ஏகாதிபத்தியப் போரில் ஈடுபடுவதற்காக நாங்கள் ராணுவத்தில் சேரவில்லை...நான் அவ்வாறு போரிட மாட்டவே மாட்டேன்.

"பிரிட்டிஷார் பலரின் உள்ளத்தில் மாறுதல் ஏற்பட்டுவருகிற தென்பதற்கு ராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் காந்திஜிக்கு எழுதியுள்ள இந்தக் கடிதமே அத்தாட்சி."

மக்களிடையே மிகுந்த படபடப்புக் காணப்படுகிறது. அது சரியே. ஆங்காங்கு நிகழும் பல்வேறு குழப்பங்களும் அதன் அறிகுறிகளே யாகும. கலகங்கள் தவறானவை. அவற்றால் நன்மை விளையப் போவதில்லை. அதற்கு மாறாக, நம்முடைய லட்சியத்தின் நேர்மையை அது கெடுப்பதோடு, பிறருடைய அனுதாபத்தையும் நமக்குக் கிட்ட வொட்டாமல் செய்து விடும். சம்பந்தப்பட்டவர்கள் அறிவுடனும் பெருந்தன்மை யுடனும் நடந்து, கும்பல்களின் பலாத்கார மான ஆட்சி விரைந்து வருமாறு நிலைமை கெட்டு விடாமல் பார்த்துக் கொள்வார்களென்று மனப் பூர்வமாய் நம்புகிறேன்...

இப்படி எழுதுவதனால் எனக்கு ஆபத்து எதுவேனும் ஏற்படுமாயின், அதனை ஏற்கத் தயாராயிருக்கிறேன். என் மனத்தில் பட்டதை அப்படியே வெளியிட்டுவிட்டேன். இங்கும் இங்கிலாந்திலும் உங்களுக்கு நல்வாழ்வு கூறும் நண்பர் பலர் எங்களில் இருக்கிறார்கள். தனியொருவன் உருப்படியாகச் செய்யக் கூடியது அதிகமில்லை. ஆனால், பிரச்னைகளுக்குத் துரிதமாக, சமாதான முறையில், முடிவு காணத் தீவிரமாக யார் வேலை செய்தாலும் சரி, அவரோடு என்னால் இயன்ற அளவுக்கு நான் மகிழ்ச்சியோடு சேர்ந்து ஒத்துழைப்பேன்.

மலேயா போகாதே!

ஒய். எஸ். மேனன்

வெகு காலத்துக்கு முன்பிருந்தே மலேயாவின் மீது இந்தியர்களுக்கு மிக்க கவர்ச்சி இருந்து வந்திருக்கிறது. ஆயிர வருஷங்களுக்கு முன்பு, உலகின் இந்தப் பகுதியில் இந்தியர்கள் குடியேறி வாழ்ந்து வந்ததாகப் புதை பொருள் ஆராய்ச்சி நிரூபிக்கிறது. மலேயாவின் சுதேசிகள் மலாய்க்காரர்கள். பார்வைக்கு நேப்பாள மக்களைப் போலிருப்பார்கள். மங்கோலிய இனமும் இந்திய இனமும் கலந்த தேசிய இனத்தவர். இந்தியப் பாங்குதான் அதிகமாயிருக்கும்.

மலேயாவின் விஸ்தீரணம் 53,240 சதுரமைல். வேல்ஸ் பகுதியைச் சேர்க்காவிட்டால், இங்கிலாந்தைவிடச் சற்றுப் பெரியதே. இங்கே தனித் தனியாய்ப் பத்து அரசாங்கங்கள் இருக்கின்றன.

1937, டிசெம்பர், 31-ம் தேதி எடுத்த கணக்குப்படி, மலேயாவின் மொத்த ஜனத் தொகை ஐம்பத்தொரு லட்சத்து முப்பத்தேழாயிரத்து எழுபத்து நாலு பேர். இவர்களில், 21,69,072 பேர் மலாய்க்காரரும் மலாய-ஆசியாக்காரரும். 21,14,195 சீனர். ஏழு லட்சத்து ஐம்பத்து நாலாயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஒன்பது பேர் இந்தியர். நகரங்களில் சீனர்கள்தான் அதிகம். புதிதாக மலேயாவுக்கு வருகிறவர்கள் மலேயாவைச் சீன தேசம் என்றே நினைத்து விடுவார்கள்.

அறுபது வருஷத்துக்கு முந்தி மலேயாவில் ரயில்வேக்களோ, ரஸ்தாக்களோ அதிகமில்லை. ஆறுகள்தான் போக்கு வரத்து வழிகள். மலாய்க்காரர்கள், லேசிலே புதுமைப் போக்கை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் பழமை விரும்பிகள். "தீரா ஆப்பா" (பரவாயில்லை) என்று சொல்லிக் கொண்டு, சும்மா இருப்பதே சுகம் என்று வாழ்க்கை நடத்துகிறவர்கள். அரசியல், அவர்களுக்குப் பிடிக்காது. நாட்டை யார் ஆண்டாலும் சரிதான். நாட்டின் செல்வத்தை யார் சுரண்டினாலும் அக்கறை இல்லை. இதையெல்லாம் சுல்தான் பார்த்துக் கொள்ள விட்டு விடுவார்கள். மலேயாவில் ஏராளமாய் ஈயம் இருந்தும், இவர்கள் அதைப் பயன் படுத்திக் கொள்வதில்லை. ஏதோ, சொற்பத் தொகையை மொத்தமாக வாங்கிக் கொண்டு, சீனர்களிடம் அதை ஒப்படைத்துவிட்டார்கள்.

உஷ்ணமும், மழையும் நல்லபடியாயுள்ள மலேயா, பூமி வளமுடைய செழிப்பான நாடு. அரிசி, தேங்காய், பனைமர எண்ணெய், கரும்பு, காப்பி, தேயிலை, ரப்பர் முதலியவை முக்கியமான

வயிற்றுப் பாட்டுக்காக நாம் எங்கே வேண்டுமானாலும் போகலாமா? இதனால் நம்முடைய மானம் கப்பலேற வில்லையா? மலேயாவில் நம் மக்கள் படும் பாட்டை உருக்கமாக விளக்கி, இந்தியாவும் உலக விவகாரமும் என்ற சஞ்சிகையில் கட்டுரையாளர் எழுதியதன் சாரம் இங்கே தரப்பெற்றிருக்கிறது.

உற்பத்திப் பொருள்கள். ஈயம், காடு பூராவும் கிடைக்கிறது. இவ்வளவும் இருந்தும், கூலி ஆட்கள் அங்கே இல்லை. மலேயச் சுதேசிக் கூலிகள் சரியானபடி அகப்படமாட்டார்கள். இதற்கு இந்தியாவும், சீனாவும் உதவிக்கு வந்தன.

போன நூற்றாண்டுக் கடைசி வருஷங்களில், இந்தியாவிலிருந்து மலேயாவுக்கு ஏராளமாகக் கூலிகள் கிளம்பிப் போனார்கள். தேயிலைத் தோட்டங்களுக்கு ஒப்பந்தக் கூலிகள் பேசி அனுப்புகிறமாதிரி இவர்கள் போனார்கள். 1880 முதல் 1904 வரை, வருஷா வருஷம் சராசரி 20,000 பேர் மலேயாவுக்குப் போனார்கள். கூலி ஒப்பந்த முறையை "ராட்சச முறை, பாபகரமானது, மோசடியானது, பலத்தைக் கொண்டு மட்டுமே கட்டாயமாக இது நடத்தப்பட்டு வருகிறது, நீதியற்றது, இதை அனுமதிக்கிற தேசத்துக்கு மாறாத இழுக்குத் தேடக் கூடியது" என்று ஸ்ரீ ஜி. கே. கோகலே கூறினார்.

நல்ல வேளை, 1910-ல் இந்த ஒப்பந்த முறை ஒழிக்கப்பட்டு, இதற்குப் பதிலாகக் கங்காணி முறை நடை முறைக்கு வந்தது.

கங்காணி என்றால், அவன் கூலி பிடிக்கும் சர்க்கார் ஏஜண்டு என்று பொருள். கங்காணிகள் என்னென்னவோ ஆசை வார்த்தை காட்டி, ஏழை எளியவர்களை—ஆண், பெண் இருவரையும், குழந்தைகளையும் கூடத்தான்—வலைவீசிப் பிடித்து, அயல் நாட்டில் கொண்டு போய், அடிமைகள் மாதிரி சர்க்காரிடம் ஒப்புவித்துவிடுவார்கள். கூலிகளை நன்றாய் நடத்த வேண்டும், இவர்களுக்கு வசதி பண்ணிக் கொடுத்துப் பாதுகாத்து வர வேண்டும், சம்பளம் முதலிய விஷயத்தில் நியாயமாய் நடத்த வேண்டும் என்றெல்லாம் சட்டம் இருக்கிறது. ஆனால், சட்டம் நடைமுறைக்கு வருவதே இல்லை. 1911 முதல் 1920 வரைக்கும் வருஷா வருஷம் சராசரி 90,000 பேர் மலேயாவுக்குக் கங்காணிக் கூலியாகப் போயிருக்கிறார்கள்.

கூலிகளுடன், இந்திய வர்த்தகர்களும், படித்த மத்தியதர வகுப்பினரும் தோட்டங்களில் வேலை தேடி மலேயாவுக்கு வந்தார்கள். சர்க்கார் உத்தியோகங்கள் இந்தியர்களுக்குக் கிடைக்காமல் இருந்தது விநோதமே. இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லலாம். சம்பளம் குறைவு. யாழ்ப்பாணத் தமிழர்கள்தான் அதிகமாகச் சர்க்கார் உத்தியோகங்களைப் பார்த்து வந்தார்கள். சீனர்கள் பெரும்பாலும் வர்த்தகர்கள். மலாய்க்காரர்களுக்குப் படிப்பு இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்தும், இலங்கையிலிருந்தும் வந்த தமிழர்களுக்குச் சர்க்கார் உத்தியோகங்கள் கிடைத்தன. தங்கள் பதவியைப் பிறர் பற்றிக்கொள்ள இவர்கள் இடங்கொடுக்க மாட்டார்கள். அதனால், நம்முடைய இந்தியர்களில் பெரும்பாலர் ரப்பர்த் தோட்டங்களில்தான் குமாஸ்தா வேலை பார்த்து வந்தார்கள். முதலில், இவர்கள் சொற்பப் பேர் தான். 1925-ல் தோட்டங்களில் வேலை பார்த்தவர்கள் பெரும்பாலும் இந்தியர்கள்தான். வக்கீல்கள் பலர் பின்னால் வந்து சேர்ந்தார்கள். அப்புறம், தொழில் நிபுணர் பலர் வந்தார்கள். போலிஸ்காரரில் பேர்பாதிப் பேர்

சீக்கியர். காவல்காரர்கள் பூரா வும் சீக்கியர்தான்.

ஒவ்வொரு நகரத்திலும் பார்க் கக் கூடிய இன்னொரு வகுப்பார் நாட்டுக்கோட்டைச் செட்டி யார்கள். இவர்கள் ரொக்க லேவாதேவிக்காரர்கள். அடுத் தடுத்த வீடுகளில் ஒன்ருகச் சேர்ந்துதான் இவர்கள் வசிப் பார்கள். முடிந்தால், ஒரே தெரு வில்தான் இருப்பார்கள். இவர்க ளுடைய வாசஸ்தலந்தான் தொழில் ஸ்தலமும். சொற்ப நிலபுலனுள்ள மலாய்க்காரர்க ளுக்கும், சீனத் தொழில்காரர் களுக்கும், நிலச் சொத்து ஈட் டின்மேல், அதிகமான வட்டிக் குக் கடன் கொடுத்து வந்தார் கள். ஆனல், ஜாக்கிரதையாய்த் தொழில் நடத்திய பாங்கிக்காரர் கள் பணந்தர மறுத்தபோதெல் லாம், இவர்கள் பண உதவி செய்து மலேயா செழிக்க வழி திறந்து விட்டார்கள். மலேயா வில் கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் முதல் போட்டிருக்கிருர் கள். தொழில் முறையில், சீனர் களுடைய பெரிய பெரிய ரப்பர்த் தோட்டங்கள் இவர்களில் சிலர் கைவசமா யிருக்கின்றன. இது, பயிரிட்ட மொத்த ஏக்கராவில் நாலு சத விகிதம் இருக்கு மென்று மதிக்கப்படுகிறது.

மலேயாவிலுள்ள இந்தியர்களில் 70 சதவிகிதம் பேர் தென்னிந் தியர்கள். பெரும்பாலர் தோட் டங்களிலே வேலை பார்க்கிருர் கள். ரயில்வே, சுகாதார சபை, பொதுஜன சேவை இலாக்கா இவைகளிலும் பலர் வேலை பார்த்து வருகிருர்கள்.

1937-ல், பயிரான மொத்த ரப்பர்த் தோட்ட விஸ்தீரணம் 3,302,170 ஏக்கர். இதில் 2,026,348 ஏக்கர் எஸ்டேட்டு கள். 1905-ல் 50,000 ஏக்கர்தான் இருந்தது என்ருல், எவ்வளவு தீவிரமாக வளர்ச்சி ஏற்பட் டிருக்கிறது என்பது புலனுகும்.

மலேயாக் கூலிகள் சட்டம் இந்தியாவிலுள்ள சட்டத்தை விட மேலானது. தோட்ட முத லாளிகளுக்குத் தமிழர்கள் மேல் தான் பிரியம். ஏன்? தமிழர்கள் பணிவுள்ளவர்கள். அப்பாவிகள். பன்னெடுங் காலமாகச் சமூக, பொருளாதாரத் துறைகளில் அவர்கள் பிறருக்குக் கட்டுப் பட்டே வாழப் பழகிவிட்டபடி யால், அழிக்க முடியாதபடி அவ் வளவு ஆழமாய் அடிமை வடு அவர்கள் மனத்தில் பதிந்து விட் டது. இதை எளிதில் போக்க முடியாது. இவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று தோட்ட முதலாளிக்குத் தெரியும். நிர்த் தாட்சணியமாய் இவர்களை அவன் நடத்துவான். கிடைத் தது சரியென்று தந்ததை வாங்கி, பட்டினி கிடந்து மிச்சம் பிடித்து இந்தியாவிலுள்ள தங்களுடைய குடும்பங்களுக்குப் பணம் அனுப்புவார்கள்.

சீனக் கூலிக்கு நாள் சம்பளம் ரூ. 1-8-0 முதல் 2-4-0 வரை. தமி ழனுக்கு 10 அணு முதல் 11 அணு வரைதான். இவ்வளவு தாரதம் யம் ஏன் என்று கேட்டால், தமி ழனுக்கு உபரியாக ஆஸ்பத்திரி, வீடு வாசல், பிரசவம் முதலிய பலவிதமான செலவுகள் செய்ய வேண்டி யிருக்கிறதாகவும், சீன னுக்கு அவன் சம்பளத்தோடு கணக்குத் தீர்ந்தது என்றும் தோட்ட முதலாளி சொல்லு கிருன்.

தமிழனுடைய கூலியை அதி கப்படுத்தினல், அவன் சோம்

யேறியாகி விடுவானும். இந்த விநோதமான விவாதத்தை 1925-ல் வெளியான தோட்ட முதலாளிகள் சங்க அறிக்கை கூறுகிறது.

சீனக் கூலிகளை ஒப்பந்தம் செய்வதில்லை. அதனால், சம்பள நிர்ணயம் கிடையாது. சேர்ந்து காரியம் முடிப்பதிலும், தொழிலாளர் சங்கம் அமைத்து வேண்டியதைச் சாதித்துக் கொள்வதிலும் இவர்கள் படுசூரப் பேர்வழிகள். ரப்பர் விலை ஏற ஏற இவர்களுடைய கூலியும் ஏறிக் கொண்டே போகும். மறியலும் செய்வார்கள். தமிழரிடம் ஒற்றுமை யில்லை. ஒன்று சேரமாட்டார்கள். விதி விதி என்று பேசி, என்ன கொடுமைப் படுத்தினாலும் சகித்துக் கொள்வார்கள்.

ரப்பரிலும், ஈயத்திலும் கொள்ளைப் பணம் வருகிறது. உலகிய உற்பத்தியில் 33 சத விகிதமும், ரப்பரில் 40 சத விகிதமும் அமெரிக்காவுக்குப் போகின்றன. 1930-ல் அமெரிக்காவில் ஏற்பட்ட வியாபார மந்தம் மலேயாவை மிகக் கடுமையாய்ப் பாதித்து விட்டது. ரப்பர் விலை படுபாதாளத்துக்குப் போய் விட்டது. 1,90,000 பேர் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பி வைக்கப் பட்டார்கள்.

உழைத்துச் சலித்து, வாடிப் போனவர்களை யெல்லாம், சாறு பிழிந்த எலுமிச்சைத் தோல் மாதிரி இந்தியாவில் கொண்டு வந்து தள்ளுவதை எதிர்த்துப் பெரிய வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. பயன் என்ன? மலேயாவிலேயே வாழ்ந்து, அதைத் தாய் நாடாகக் கொண்டு விட்டவர்களை அங்கேயே வாழும்படி விட்டு விடுவது தானே நியாயம்?

மலேயாவிலேயே பிறந்து வளர்ந்த பல இந்தியர்கள் மலேயாவை விட்டுப் போக மறுத்தார்கள்.

மலேயாத் தோட்ட முதலாளிகள் படுபேர் வழிகள். இவர்களில் பலர் மாஜி கவர்னர்கள். இங்கிலாந்திலுள்ள கலோனியல் சர்க்கார் இவர்கள் சொல்லுக்குச் செவி சாய்த்துத்தான் தீரும். இதனால், இவர்கள் இட்டது சட்டமாய் இருந்து வந்தது. 1934-ல் கூலி ஏற்றுமதி மீண்டும் தொடங்க ஏற்பாடு நடந்தது. ரப்பர் விலையும் உயர ஆரம்பித்தது.

1922-ல் இந்திய எமிகிரேஷன் சட்டம் நிறைவேறியதும், மலேயா இந்தியர்களின் நலனைக் கவனித்து வரும் பொருட்டு, இந்திய சர்க்காரின் ஏஜண்டு ஒருவர் மலேயாவில் நியமிக்கப்பட்டார். இவர் ஒன்றும் செய்ய முடியாது. நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவுதான். இருந்தாலும், இவரது முயற்சியால் 1936ல் முதல் முதலில் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் மலேயாவுக்கு வந்து போக முடிந்தது. இவர் வந்து, இந்தியர்கள் நிரம்பச் சௌக்கியமா யிருப்பதாகச் சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

மலேயா அரசியலில் இந்தியர்களுக்குச் சிரத்தை இல்லை. என்றென்றும் அவர்கள் அன்னியர்கள்தான்.

மேற்கொண்டு இந்தியர்களை மலேயாவுக்கு அனுப்புவதில்லை என்று 1938-ல் இந்திய சர்க்கார் தடை விதித்தது. தோட்ட முதலாளிகள் கதி கலங்கினார்கள். டில்லியில் தலையணை மந்திரம் நடந்தது.

பலிக்க வில்லை. தடை தடைதான். இந்தியர்களுடைய நலனைப்பேணு வதற்கு நிபந்தனை கோரி இந்தியர் சார்பாக டில்லிக்குத் தூதுக் கோஷ்டி போயிற்று. கடைசியில், இந்த விஷயத்தைச் சென்னை சர்க்கார் கவனித்து வருவதென்று முடிவாயிற்று. குறிப்பிட்ட அளவு பேர்தான் மலேயாவுக்குப் போகலாம். நினைத்தபடி கூலி பிடிக்க முடியாது.

மலேயா வெகு வேகமாக வளர்ந்து விட்டது. ஈயம், ரப்பர் லாபம் எல்லாம் சீனருக்கும் பிரிட்டிஷாருக்குந்தான். நாட்டின் வர்த்தகம் அன்னியர் கையில் இருந்து வந்தது. அப்படி இருந்தும், சுதேசிகள் நன்மைக்காக நாடாள்வதாகப் பிரிட்டிஷார் சொல்லுகிறார்கள்.

மலாய்க்காரர்கள் என்றென்றும் ஒதுங்கி வாழப் போவதில்லை. அவர்கள் விழிப்படைந்து விட்டார்கள். அரசியல் பிரக்ஞை பெற்று வருகிறார்கள். அன்னியர் வருவது அவர்களுக்குச் சம்மத மில்லை. எதிர்க்கத் தொடங்கி விட்டார்கள். நாட்டில் பாதிக்கு மேல், காடு கரைதான். அங்கே நாம் உரிமை கொண்டாட எவ்வித நியாயமும் இல்லைதான். இந்தியர்கள் ஏழைப் பஞ்சைகள். வயிற்றுப் பாட்டுக்காக எங்கே வேண்டு மானாலும் போகத் தயார். இவர்கள் சென்ற இடமெல்லாம்—டிரினிடாட், பிஜி, தென் ஆப்பிரிக்கா, இலங்கை, பர்மா, மலேயா—எங்கும் தகராறுதான். ஆரம்பத்தில் அந்தந்த நாட்டு மக்களுடன் நாம் ஓர் ஏற்பாடு செய்துகொண் டிருந்தால், இந்த வம்பெல்லாம் வந்திருக்குமா?

நாம் கூலிக்காரர்களாக வெளிநாடு செல்வதால், நம்முடைய மானம் போய்விடுகிறது.

ஆகவே, நாம் பிற நாடுகளுக்கு வேலை தேடிப் போவதை நிறுத்திக் கொள்வதுதான் நல்லது என்று தோன்றுகிறது.

✲

சீனத்துப் பேச்சு

ஒரு சீனச் சர்வ கலாசாலையில் டாக்டர் வால்டர் வில்லியம்ஸ் பேசிய போது, விளக்கிக் கூறுபவர், அவர் பேச்சைச் சீனக் குறியீடுகளின் மூலம் மொழிபெயர்த்துப் பலகையில் எழுதி வந்தார். தான் பிரசங்கம் செய்த நோத்தில் பெரும்பகுதி நேரம் அந்த மொழிபெயர்ப்பாளர் பலகையில் ஒன்றும் எழுதாமலே சும்மா நின்றுகொண் டிருந்ததை அவர் கவனித்தார். பிரசங்க முடிவில், அதன் காரணத்தை வினவிய போது, "பிரசங்கி ஏதாவது விஷயத்துடன் பேசும் போதுதான் நாங்கள் எழுதுவோம்" என்று புன்முறுவலுடன் பதில் வந்தது.

காதல் பித்தம்

காதல் வயமாவதால், ஒரு பெண்ணின் கவர்ச்சி அதிகரிக்கிறது. ஆனால், காதல் வயப்படும் ஆணோ உலகினர் கண்ணில் மதிப் பிழந்து விடுகிறான். நண்பர்களைத் தொணதொணக்கிறான். பிற மாதரின் நகைப்புக்கு அடிக்கடி அவன் இலக்காகிறான். மனிதன் அளவுக்கு மீறிய ஒருமை யுள்ளம் படைத்தவனதலால், காதலில் அவன் தன்னையே மறந்து விடுகிறான். சில சமயம், அவனுடைய தீவிரப் போக்கு அவனை ஓர் அசடாகக் கூட ஆக்கிவிடுகிறது. தன் காதல் கற்பனை செய்துள்ள பெண்ணின் உருவம் ஒன்றையே அவன் காண்கிறான்.

— சூசான் எர்ட்ஸ்

தொழில்

கொத்தமங்கலம் சுப்பு

வித்திலே கரிய நிறப் பாகல்—அது
விடிவெள்ளி போலவே முளைவிடுதல் பாரும்
முத்திலே வரிபடர்ந்தாற் போலே—அந்த
முளையிலே செந்நிறம் இலையெலாம் பச்சை
கொடியிலே வெள்ளியப் பூச்சு—பூத்துக்
குலுங்குகிற பூவெலாம் குளிமஞ்சள் ஆச்சு
பழத்திலே செவ்வானம் தோணும்—இதைப்
படைக்கின்ற பிரமனும் தொழிலாளி காணும்

மழையாலே துயர்கொண்ட ஆயர்—மந்தை
மாடாடு காக்கவே மலைகுடைபி டித்தான்
இழையாலே நெய்யாத சேலை—கோடி
எடுத்தெடுத்துக் கொடுத்துப்பெண் மானத்தைக் காத்தான்
ஓயாது அவதாரம் எடுப்பான்—இந்த
உலகத்தைக் காக்கவே கடல்மேலே படுப்பான் (அந்த
மாயாவி தனையிந்த வையம்—தேடி
வணங்குவதும் வாழ்த்துவதும் தொழிலாலே கண்டீர்

ஈமவெளி தனிலாடும் ஈசன்—தேவி
எங்கள்உமை அம்மையுடன் ஆடும்நட ராசன்
காமனையுங் கண்ணால் எரிப்பான்—ஒலக்
கடல்தந்த நஞ்சையும் கண்டம் தரிப்பான்
கனிஉதிர உலுக்கிவிட்ட மரம்போல்—தானே
கண்டபொருள் அத்தனையும் கவிழ்த்துச் சிரிப்பான்
தனிமுதலும் தானாகி நிற்பான்—அந்தச்
சங்கார மூர்த்தியும் தொழிலாளி கண்டீர்

ஆக்கவுங் காக்கவும் நீக்கவும் பற்பல
அற்புதஞ் செய்வர்தொ ழிலாளி—இவர்
அத்தனை பேருக்கும் நித்தமும் சோறிடும்
அன்னையிப் பூமிமு தலாளி
ஆக்கிக்கொ டுத்திடும் பானையெ னத்தகும்
அன்னை நம் மிந்தியர் தம்பூமி—இதை
அள்ளிப்ப ரிமாறும் ஆப்பையைப் போன்றவர்
ஆகும்தொ ழில்செய் யும்சாமி

அதனால்

குண்டுகளைச் செய்வாரும் வேண்டும்—கஞ்சி
குடிக்கவய லுழுவாருங் குறையாமல் வேண்டும்
தண்டெடுக்கும் சிப்பாயும் வேண்டும்—குளிரச்
சங்கீதம் பாடிடும் வித்வானும் வேண்டும்
கட்டுதுகில் நெய்வாரும் வேண்டும்—நெஞ்சம்
கனிந்துருகக் கவிமாரி பெய்வாரும் வேண்டும்
எட்டிரண்டு சொல்வாரும் வேண்டும்—இங்கு
எழிலான தொழிலாளி எல்லோரும் வேண்டும்

இக்கித் தியக்கம்

நாரா

ஈண்டுச் சொல்லப் புக்கு செய்தி என் நுதலிற்றெனின், க்—ச்—ட்—த்—ப்—ற், ங்—ஞ்—ண்—ந்—ம்—ன் என்னும் ஒற்றாட்சியில் அண்மிய சில் யாண்டுகளாக வழக்காற்றிற் பிறங்கா நிற்கும் பிழை நெறிபற்றி நுதலிற்றென்க. தமிழ் மொழியில், சொற்கள் கோவை பெற்ற சொற்றொடராதற்கு உதவுகிற நெறி முறை தான் இலக்கணம். வேற்றுமைப் புணர்ச்சி, வேற்றுமை யல்லாத புணர்ச்சி என்ற இரண்டு வகைப் புணர்ச்சி நெறிகளால் சொற்கள் சேர்ந்து கூடுகின்றன.

சொல்கள் தனி தனியாக நின்றால், அவைகளை விட்டு விட்டு தான் ஒலிக முடியும். எல்லாரும் இயல்பாக பேச கூடுமா? முடியாது. அப்படியே, எல்லாரும் இயல்பாய் எழுத முடியாது. இதை கவனிகாமல், இந்த ஹாலதில் கண்ட கண்டபடி வரம்புமீறி எழுதி கொண்டு வருகிறார்கள்.

ஆரம்பதில் இப்படி எழுதினவர்கள் கொஞ்சம் லஜ்ஜைபட்டார்கள். பின்னால், குளிர் விட்டு போச்சு. தலை தெறிகும் வேகதில் எழுதி தள்ள வேண்டிய நிர்பந்தம் தினசரி பதிரிகைகளுகு ஏற்பட்டு விட்டவுடன், தமிழில் உள்ள ஒற்றுகளெல்லாம் ஒவ்வொன்றாய் கழன்று விழ தொடங்கி விட்டன. சில தமிழ் பைதியங்கள் "இப்படி தமிழை கெடுகலாமா?" என்று கூச்சல் போட்டார்கள். இக்—இத்—ஆணிகளை கழற்றும் பணியில் ஈடுபட்டவர் தொகை நாளுகு நாள் பெருகி விரிந்ததால், நிலைமை மீறி போச்சு. புரூப் திருத்த சில பத்திரிகைகளில் பண்டிதர்களை முன்பு வைதிருந்தார்கள். அந்த ஹெட்ட பழகம் இப்போதுக் குறைந்துக் கொண்டு வருகிறது. சிலர், பச்சாத்தாப்பத்துடன், நழுவிய இக்—இத்—களை இடம்ம் மாறி சொருகுக்கிறார்கள்.

இந்த ஹாலதிலேச் சிலப் பேர்கள் நிஜம்மாகவே சொல் ஆக்ஷியில் திறமைப் பெற முயல்ச்சிகிறார்கள். சும்மாச் சொல்ல ஹூடாது. கண்ணுக்கு காக்ஷியான புடவைக்களை ஸ்த்ரீக்கள் எபடி விரும்புக்கிறார்களோ, அதேப்போல் கோர்வையாய் எழுத பலத் தமிழ் சிரோன்மணிக்களுக்கும் அபிமானிக்களுக்கும் இஷ்ட்டந்தான். ஆனால், இக்—இத்—இல்த் பாவம் ரொம்ப ரொம்பிவிட்டது. அதனால்த்தான் பாவமாய் எழுத வழித்தேடி தியங்குக்கிறார்கள்.

அதனாலே, தலையிலே புள்ளியேயிலலாமல எழுத ஒனறிரணடு இயககம ஆரமபிகக வேணடும. அலலது, இக— இத— சரியாய போட ஒரு இயககம ஆரமபிக வேணடும. நீஙகள எநத கடசி?

இந்த ஒற்று விஷயத்தில் நம்மிடையே ஒற்றுமை வளர வேண்டும். இல்லாவிட்டால், ஒற்றொழிப்பு இயக்கம் ஒன்றையாவது தொடங்க வேண்டும்.

*

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!

சருமப் பாதுகாப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார் வசந்தா. அதனால், லக்ஸ் சோப்பை உபயோகிக்கிறேனென்றும், சருமப் பாதுகாப்பை அது ஆச்சரியகரமாக குறைக்கிறதென்றும், தன் சருமத்தை யாதொரு அப்பழுக்குமின்றிக் காப்பாற்றுகிறதென்றும் அவர் கூறுகிறார். அழகு படுத்தும் இந்த கீர்த்திபெற்ற சோப்பின் நுரை சருமத்தை உண்மையாகவே மிருதுவாகவும், மழமழப்பாகவும் செய்து காப்பாற்றுகிறது.

லக்ஸ் டாய்லட் சோப்

LTS. 133-50-40 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

இந்தியன்
பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
நார்த் பீச் ரோட், மதராஸ்

●

மதராஸ் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், மவுண்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாகம், எழும்பூர்

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட - மூலதனம் ரூ. 68,71,800

செலுத்தப்பட்ட மூலதனம் - - - ரூ. 44,42,662

ரிஸர்வ் நிதி - ரூ. 49,50,000

டிபாஸிட்ஸ் (31-12-45) - ரூ. 13½ - கோடிக்குமேல்

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்

செக்ரெடரி :

N. கோபால அய்யர்

1872-ல் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த 73-ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மக்களால் உபயோகிக்கப்பட்டும், புகழப்பட்டும் வருவதுமான

மதுரை
M. காதர் சாஹிப் & ஸன்ஸ்

—"யானை மார்க்"—

- சந்தனாதித் தைலம்
- அரைக்கீரை தைலம்
- மிளகாய்த் தைலம்

குளிர்ச்சி, கூந்தலழகு, ஆரோக்கியம் தருபவை

- நாஷனல் பிளவர் டஸ்ட்

(உடுப்பு, ரிக்கார்டு பெட்டிகளில் அந்து, பாச்சை முதலியவைகளை அணுகவொட்டாமல் பரிமள வாசனை தரக்கூடியது)

மற்றும் வாசனைப் பாக்கு, தசாங்கம், ஸ்னொ பவுடர், ஊதுவத்திகள், சந்தன பில்லைகள், சந்தன பவுடர், பன்னிர் வகையராக்களும் கிடைக்கும்

சரக்குகள் வாங்கும்பொழுது எமது 'யானை' டிரேட் மார்க்கை கவனிக்க கோருகிறோம்

M. KHADER SAHIB & SONS.,
Manufacturing Perfumers
MADURA

கிழங்கினம்

மு. அருணாசலம்

தமிழ் நாட்டிலே, பழங்காலம் முதல் பலவகைக் கிழங்குகள் முக்கிய உணவுப் பொருளாக இருந்து வருகின்றன. பழைய இலக்கியங்கள் எத்தனையோ கிழங்கு வகைகளைக் குறிப்பிடு கின்றன. மலையில் வாழ்ந்த மக்களுக் குரிய தொழில், கிழங்கு அகழ்தல் என்று இலக்கண நூல் கள் சொல்லுகின்றன. முக்கிய மான சில வகைக் கிழங்கினங் களைக் கீழே காணலாம். இவ் வகைகள், பின்வரும் காய்கறிக் கிழங்குகளுக்கு மட்டு மன்றி, எல்லாக் கிழங்குகளுக்குமே பொருந்தக் கூடிய பாகுபாடா கும்.

வள்ளிக் கிழங்கு: மலை வளத் தில் சிறப்பானது வள்ளிக் கிழங்கு; பாரியின் மலையிலே, 'கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே' என்கிறார் கபிலர். வள்ளிக் கிழங்குகள் யாவற்றுக் கும் நீர் வளமும் நில வளமும் அதிகம் வேண்டும்.

மேற்குக் கரையில் இவை அதி கமாய்ப் பயிராகின்றன. இவற் றில் பல வகைகளுண்டு. எல்லாம் கொடிகளாக வேலிகளிலாவது மரங்களின் மேலாவது படரும். வருஷமொருமுறை ஆடி அல்லது கார்த்திகை, மாசி மாதங்களில் பயிரிடலாம். கொடி வளர்ந்து முற்றிக் கிழங்குகள் தக்க பருவ மடைந்தபின், இலைகள் பழுத்துக் கொடி காய்ந்து போகும். அதைப் பிடுங்கி எறிந்துவிட்டுக் கிழங்காக எடுத்து வைப்பதுவழக் கம். கிழங்குகளில் முளையுள்ள பாகத்தை மட்டும் நாலங்குல நீள அகல உயரமுள்ளதாக நறுக்கி எடுத்து நடவும். மற்றக் கிழங்கு களைப் போலன்றி, இவற்றுக்குப் பெரிய குழிகள் வேண்டும். நாலடி ஆழமும் மூன்றடி நீள அகலமும். மணல் பாங்கான கலப்பு மண் போட்டு நிரப்பவும். நன்கு மடித்துப்போன மாட் டுச் சாணமும் தழை எருவும் கலந்து போடலாம். அதிக நிழ லில்லாத வேலிகளின் ஓரத்தில் நாலடிக் கொன்றுகப் பயிரிட லாம்.

சர்க்கரைவள்ளி: தரையில் கொடி போலப் படர்வது. கணுக்கள் தோறும் பூமியில் வேர் விடும். எந்த மண்ணிலும் பயிராகும். களிப் பில்லாத உர முள்ள மணல் பாங்கான நிலத் தில் முழுத்துக் கொரு பங்காகப் போடவும். இரண்டு கணுக்க ளோடு ஒரு சாணளவில் கொடி களை நறுக்கி எடுத்துப் பாதி மண்ணில் மறையும்படி ஊன்ற வும். பயிரிடும் காலம் வைகாசி— ஆடி மாதங்கள். ஆறு மாதத்தில் கிழங்கு வெட்டலாம். சிறு செடி களாக, தரையில் வேர் விடாத படி வளரச் செய்தால், கிழங்கு கள் பெருக்கும். கொடி படரு மிடம் நெடுக வேர் விட்டால், ஒவ்வோர் இடத்திலும் சிறு

கிழங்குகளைச் சாப்பிட்டும் உயிர் வாழலாம் என்பது, இன்று சர்க்கார் கண்டு பிடித்து விட்ட புதுச் செய்தியல்ல. சக்தி காரியால யத்தார் வெளியிட்டிருக்கிய காய்கறித் தோட்டம் என்ற நூலில் வரும் இந்தப் பகுதி, விஷ யத்தை விளக்குவதோடு, வழி காட்டவும் செய்கிறது.

கிழங்குகளே உண்டாகும். அடிக்கடி தண்ணீர் விட்டுக் கொத்திக் களை யெடுக்கவும். அதிக மழை ஏற்றதல்ல; மழை குறைவா யிருப்பினும், போது மான அளவு தண்ணீர் பாய்ச்சி ஞல் போதும். இலை பழுக்க ஆரம்பித்தவுடன், தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தி, கிழங்கு வெட்டத் தொடங்கலாம்.

கிழங்குகள் அரையடி முதல் ஓரடி நீளம் வரையில் இருக்கும். இரண்டு நுனிகளும் குறுகி, நடுவில் அகன்று, உருண்டு இருக்கும். வெள்ளைத் தோல் சிவப்புத் தோல் என இருவகை உண்டு. இது மிக்க இனிப்பானது; இத ஞலேயே இதற்கு ஆங்கிலத்தில் 'இனிப்பு உருளைக் கிழங்கு' (ஸ்வீட் பொட்டேட்டோ) என்றபெயர் வழங்கப்படுகிறது. கிழங்கின் உட்புறம் வெண்மை யாய், மணல் போல், மாவுப் பொருளா யிருக்கும். மலிவா னது; ஏழை மக்களுக்குச் சாதா ரண உணவு. பெருத்த அளவில் புன்செய் நிலங்களில் முக்கியப் பயிராகவே சாகுபடி செய்யப் படுகிறது. இதனை வேக வைத்தும், சுட்டும், கறி சமைத்தும் உண்ணலாம்.

மரவள்ளிக் கிழங்கு: ஆறடி, எட்டடி உயரம் வளரக் கூடிய அடர்த்தியான செடி. இதன் தண்டு, ஓரங்குலம் அல்லது இரண்டங்குலக் கனத்தில் மரம் போல், கடினமா யிருக்கும். எந்த நிலத்திலும் பயிராகும். மணல் பாங்கான நிலமிருந்தால் மிகவும் நல்லது. ஆற்றுப் படுகை யிலே நன்ருய்ப் பயிராகிறது. மேல் கரை நாடுகளில், நீர் வளம் மிகுதியா யிருப்பதால், தென்னை மர நிழலில் கூட எளிதில் பயிரா கிறது. வெய்யிற் பாங்கான பிர தேசமே ஏற்றது.

தரைக்கு மேலுள்ள செடி யின் மத்திய பாகத்தை நான்கு அங்குல நீளமுள்ள துண்டுக ளாக நறுக்கி ''விதை''யாக உபயோகிக்கலாம். நிலத்தை நன்ருய் ஆழமாய் உழுது, சாணி எருவிட்டு, ஓரடி உயரம் உள்ள வரப்புகளை இரண்டு முழத்துக் கொன்ருக அமைக்க.வேண்டும். மேலே சொல்லப்பட்ட கிளைத் துண்டுகளை இந்த வரப்புகளில் முழத்துக்கொன்ருக ஊன்றலாம். நில வளத்தைப் பொறுத்து, இன் னும் அதிகத்தூரத்திலும்நடலாம். நடுகிற கிளை, மண்ணுக்கு மேலே அரை அங்குலம் நீட்டிக்கொண் டிருந்தால் போதும். இலை விட்டுத் தளிர்க்கும் வரையில் மண் ஈரமாகவே இருக்க வேண் டும். எந்தக் காலத்திலும் பயி ரிடத் தொடங்கலாம். களிமண் நிலத்தில் பலன்தர ஒரு வருஷ மாகும். மணல் நிலத்தில் ஒன்பது மாதத்துக் கெல்லாம் தயாரா கும். தரையில் வெடிப்புக் கண்டால், கிழங்குகள் முற்றி விட்டன என்று அர்த்தம். கறை யான், பெருச்சாளி முதலிய வற்ருல் கிழங்குக்குச் சேதம் ஏற்படுவதுண்டு. தண்ணீர் ஏராளமாய்ப் பாய்ச்ச வேண்டும்.

கிழங்கிலே மாச் சத்து மிகுதி. இதனுல், ஏழை மக்களுக்கு இது அரிசி போலுள்ள சாதா ரண உணவாகவே இருக்கிறது. கிழங்கு வெட்டின சில நாளைக் கெல்லாம் உண்ண வேண்டும்; இல்லாவிட்டால், கிழங்குத் தன்மை கெட்டு, விஷம் பொருந் தியதாகும். வெட்டி எடுத்த கிழங்கை ஈர மண்ணில் செருகி வைத்திருப்பதும் உண்டு.

கிழங்கை, வேகவைத்தும், சுட்டும் தோலை நீக்கி உண்ணலாம். வியாபார முறையிலே, உண்பதற்கான பலவகை மாவுகள் செய்ய இந்தக் கிழங்கு உதவுகிறது. உருளைக் கிழங்கை வறுவலுக்கு நறுக்குவது போல் இதையும் மெல்லிய துண்டுகளாக நறுக்கி ஈரம்போக நன்றாய் உலரவைத்து எடுத்து வைத்துக் கொண்டால், வருஷ முழுவதிற்கும் பயன்படும். வறுவலுக்கு ஏற்றது. சர்க்கரைப் பாகிலே கலந்து பலகாரங்கள் செய்வதுண்டு. மாவாக்கிப் பல வகையில் உபயோகிக்கலாம். மாவும் வற்றலும் நெடுநாள் இருக்கும். ஏழை மக்கள் பலவிதமாக இதை வற்றல் முதலியன போட்டுப் பக்குவப் படுத்தி, வருஷ முழுவதும் உபயோகிப்பதற்காகச் சேமித்து வைத்துக் கொள்வார்கள்.

கருணைக் கிழங்கு: மிகப் புராதனமான கிழங்கு வகை. முன் வருஷம் வெட்டி எடுத்த கிழங்குகளின் முளைகளைத் தனியே வைத்திருந்து, அடுத்த வருஷத்துக்கு உபயோகிக்கவும். தோட்டத்தை உழுது, நிறைய எருவிட்டு, இரண்டடிக்கு ஒன்றாக நடவும். இடையே மிளகாய் முதலியவற்றை நடலாம். சில நாளில் முளைத்து வளரும். அடிக்கடி கொத்திக் களையெடுக்கவும். செடியின் தண்டும் இலைகளும் அழகாயிருக்கும். முழ உயரம் ஒரே கிளையாக வளர்ந்து, அதற்கு மேல் ஒரே இடத்திலிருந்து பல கிளைகளாகக் கிளைக்கும். செடி மூன்றடி வரை உயர்ந்து வளரும். ஒன்பது மாதத்தில் கிழங்கு முற்றிப் பக்குவமடையும். அப்போது, செடிகள் பழுக்க ஆரம்பிக்கும். பழுத்தவுடனே நீர் பாய்ச்சுவதை நிறுத்தி, பாத்தியைக் காயப் போட்டு வைத்திருந்து, கிழங்குகள் வெட்டி எடுக்கலாம். கிழங்குகளெல்லாம் அதிகம் காறலுள்ளவை; புதிய கிழங்குகள் மிக அதிகக் காறல். புளியாலும் உஷ்ணத்தாலும் காறல் ஓரளவுக்கு நீங்கும். மூல வியாதியை ஒழிக்குமென்று சொல்லப்பெறும். "மண் பரவு கிழங்குகளில் கருணையன்றிப் புசியோம்" என்பது ஒரு சித்தர் பாடல். காறாக் கருணை என்பது இதில் சிறப்பான ஒரு வகை.

✻

வாய் மூடிச் சூத்திரம்

பேராசிரியர் ஐன்ஸ்டைனை ஒருவர் பேட்டி கண்டார். "வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்குச் சிறந்த சூத்திரம் என்ன?" என்று அவர் ஐன்ஸ்டைனைக் கேட்டார்.

ஐன்ஸ்டைன் புன்னகை புரிந்துவிட்டுப் பின்வருமாறு கூறினார்:

"ஏ என்பது வாழ்க்கையில் வெற்றியைக் குறிக்கிறது. அதற்குச் சூத்திரம் இதுதான்: எக்ஸ், ஒய், இஜெட் இந்த மூன்றும் சேர்ந்தால் ஏ உண்டாகும். எக்ஸ் என்பது உழைப்பையும், ஒய் என்பது விளையாட்டையும் குறிக்கும்."

"இஜெட் எதைக் குறிக்கிறது?" என்று வந்த ஆசாமி கேட்டார்.

"பேசாமல் உன் வாயை மூடிக் கொண்டிரு—என்பதை அது குறிக்கிறது" என்று ஐன்ஸ்டைன் சட்டென்று பதில் கூறினார்!

— வால்டேர் விஞ்செல்

லட்சுமி

துறைவன்

அன்று சாந்தி முகூர்த்தம்.

மாலை நெருங்க நெருங்க, என் இதயம் மட்டுக் கடங்காமல் துடிக்க ஆரம்பித்தது. மேலெல்லாம் பதறியது. இடியும் மின்னலும் ஆட்சி செய்யும் நள்ளிரவில், ஆந்தைகளின் அலறல் இதயத்தை அதிரச் செய்யும் கனந்த காரக் காட்டில், தனியாகச் செல்லும்போது எழும் கொடிய உணர்ச்சி மேலிட்டது. அடுத்த அறையில் சிரிப்பும் விளையாட்டுமாகச் சீட்டாடும் நண்பர்களது இரைச்சல் வேறு என் நிம்மதியைக் கலக்குகிறது. வருகிறவர், போகிறவர்களெல்லாம், சின்னஞ் சிறுமியர் கூட, கடைக் கண்ணால் என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போகிறார்கள். அவர்களை யெல்லாம் பளீரென்று அறைந்து விடலாமா என்று தோன்றுகிறது. ஓயாமல் "டிக் டிக்" என்று, நெருங்கி வரும் கோர ஞாபகத் தீயில் நெய் வார்க்கும் கடிகாரத்துக்கும் என்னிடம் இரக்கம் பிறக்கவில்லை. உலகமெங்கும் சோகப் பூச்சைப் பூசிவரும் இரவு, என் மனத்தில் பதிந்து ஒளிவிடும் பார்வதியின் அன்புச் சித்திரத்தையும் அழித்துவிட முயல்கிறதா?

என் நெஞ்சில் என்றோ இடம் பெற்று விட்டாள் அவள்! அவளை மணக்கக் கொடுத்து வைக்காத பாவி நான். கல்கத்தாவுக்குப் போய் விட்டாள் அவள். கடிதம் கூட இல்லை. இல்லையென்றால், அன்பு உலர்ந்துவிடுமா? பிரிவிலும் மறைவிலும்தானே காதல் தளிர் விடுகிறது. தளிர்த்துத் தழை விட்டு, மலரச் சித்தமான பார்வதியை மணந்தா லல்லவோ, என் மனத் தென்றல் சாந்தியடையும்! பார்வதிக்காக என் மனத்தில் ஒரு தூய வெண்பனி படர்ந்த இமயச் சாரலையும், பசுங் கொடிகள் குழையும் தபோவனத்தையுமே சிருஷ்டித்துக் கொடுத்திருக்கும் எனக்கா, இந்தப் புது மணப் பெண்ணால் சாந்தி ஏற்பட்டுவிடப் போகிறது? இனிமேல் ஒரே ஒரு சாந்திதான் உண்டு. அதைக் கொடுப்பதற்கும் மறுக்கிறானே ஈசன்!

ஐயோ பாவம்; என்னை மணப்பதாக எண்ணி இறுமாந்து, தன்னை மறந்து அங்குமிங்கும் நடமாடும் ஒரு ஜடவஸ்துவைக் கல்யாணம் செய்து கொண்ட பெண்—அவள்தான் லட்சுமி—என்ன செய்வாள்? என்னைத் தான் பண்ணிக் கொள்வதாக அவள் சொல்லிப் பிடிவாதமா செய்தாள்? என்னவோ, கல்யாணம் நடந்துவிட்டது, கருவானில் சுருளும் மின்னல் போல. இன்று, தான் பெறப் போகும் புதிய இன்பத்தைப் பற்றி அவள் உள்ளம் என்னென்ன கனவு வலைகளைப் பின்னிக்கொண்டிருக்கிறதோ, யார் கண்டது? கல்யாணத் தன்றுதான் கடைக்

அவன், பார்வதியை விரும்பினான். லட்சுமியோ, தன் அத்தான் சந்துருவை விரும்பினாள். சந்துருவைப் பார்வதி அடைந்து விட்டாள். அவனும் லட்சுமியும் சாந்தி முகூர்த்தத் தன்று...

கண்ணுல் எத்தனை ஆவலோடு பார்த்தாள்! நான் தப்பித் தவறி அவளைப் பார்த்துவிடும் பொழுது, அவளது இதழ்க் கடையில் உதய மாகிய முறுவலும் நாணமும் தான் எத்தகைய மகிழ்ச்சியைப் பிரதிபலித்தன! பாவம், பேதைப் பெண், என் இதய வேதனையை எவ்வாறு அறிவாள்? அறிந்தால், என்ன ஏமாற்றம், எவ்வளவு வருத்தம் அடைவாளோ? அவளை நினைக்கையில், விஞேதமான ஒரு பரிவு ஏற்படு கிறது. என் இதயத்தில் அவளுக் கும் இடமிருக்கிறது. ஆனுல், அவள் நினைக்கும் இடமில்லையே அது! அந்தச் சொர்ண பீடத்தில் பார்வதி யல்லவா தனிச் சுடர் விடுகிருள்! இன்னும் சற்று நாழிகையில், சயனக் கிருஹத் துள் நுழைய வேண்டும், கூண்டி லடைபடும் மிருகத்தைப் போல. ஈச்வரா, லட்சுமிக்கு என்ன பதில் சொல்வேன்! அவள், படித்த பெண்ணுயிற்றே!

திரள் திரளாக எழும் சிந்தனைச் சிக்கலில் பட்டுத் தத்தளித்து மெய்ம்மறந்து போன என்னை, சேகரின் கரங்கள் தொட்டன. திடீரென்று திரும்பினேன். "அடேயப்பா, என்ன அவசரம்! கற்பனைக் குதிரையில் கந்தர்வ லோகம் சென்று திரும்பி ஞயா?..." என்ருன் நகைத்துக் கொண்டே.

கல்லூரி நண்பர்கள் என்ற வர்க்கத்துக்கே, சமய சந்தர்ப்ப மறியாத பரிகாசப் பேச்சு தனி யுரிமை போலும்.

ஜன்னல் வழியாகப் பாய்ந்த பால் வெள்ளிக் கிரணங்கள் சேகரின் முகத்திலே படர்ந்தன.

"நீ சொல்வது நிஜம். என் கற்பனைக் குதிரை வாழ்க்கை என்ற ஆற்றில் கரைந்து போய் விட்டது" என்றேன் அமைதி யாக. ஆனுல், உள்ளத்தில் மட் டும் பிரளயப் புயல் குமுறிக் கொண்டிருந்தது.

"என்னடா அசடு! உளறு கிருய்?......எழுந்திரு. ஸ்னனத் தைப் பண்ணிவிட்டு வா. நாழி கையாகிறது" என்று சொல்லி விட்டுப் போனுன் சேகர். அவன் மறையுமட்டும் "நாழிகை யாகிறது" என்ற சொல் என் காதில் ஒலித்துக்கொண் டிருந் தது.

எழுந்து ஜன்னலை மூடினேன். அறையை இருள் விழுங்கியது.

சயன அறைக்குள் நுழைந்த போது, என் இதயம் "பக்" கென்று நின்றது, கண் ஒளி மங் கியது, கால் தள்ளாடியது. இயந் திரம் போல் கட்டிலருகே சென் றேன். மல்லிகை மணத்தை அணிந்துகொண்டு உலவிய தென் றல், சன்னலின் வழியாகப் பாய்ந்த பால் நிலவொளியில் தவழ்ந்தது. நிமிர்ந்து நோக்கி னேன். கண்ட காட்சி என்னைத் துணுக்குறச் செய்தது. மின் னற்கொடியை அலங்காரம் செய்துவிட்டது போல் அன்று தோன்றிய லட்சுமியா இது? முகமெல்லாம் ஏன் இப்படிச் சிவந்து போயிருக்கிறது?

அடுத்த கணம், என் உடலையே உலுக்கி அதிரச்செய்த ஒரு பொருமல் வந்தது. அவள் விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள். என்ன அதிசயம் இது!

"லட்சுமி, ஏன்?...ஏன் அழு கிருய்?" என்று திகைப்புடன் கேட்டேன். விவரிக்க முடியாத ஒரு புதிய அன்பு பிறந்தது அவள் மேல்.

அழுகை ஓயவில்லை. கட்டிலில் பாய்ந்து, மெத்தையிற் புரண்டு விளையாடிய நிலவொளியில், அவள் கண்களி னின்றும் வெண் முத்துக்கள் உதிர்ந்தன.

"லட்சுமி!" என்றேன் சாவதானமாக. என் சிந்தனைகள் எங்கெங்கோ அலைந்தன. "என்னைப் போல்தானா நீயும்?"

முகத்தை மூடியிருந்த அவள் தளிர்க் கரங்கள் விலகின. அவள் என்னைப் பார்த்தாள். கண்கள் கோவைப் பழமாக இருந்தன. ஆனால், துணிகரத் தோற்றமளித்தன—வாழ்க்கைப் புயலை எப்படியாவது எதிர்த்து விடுவது என்று கங்கணங் கட்டிக்கொண்டவை போல.

"எனக்கு நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே" என்றாள்.

"புரிந்து கொள்ளத்தானே இங்கு வந்திருக்கிறோம், லட்சுமி. உன் உள்ளத்திலும் பழைய நினைவுகள் என்ற புற்றீசல்கள் அரிக்கின்றனவா?"

தலையை அசைத்தாள். அவள் கண்களி னின்றும் மளமள வென்று நீர்த் துளிகள் உதிர்ந்தன.

திடீரென்று நிமிர்ந்து என்னை நோக்கினாள். மங்கிய—ஆனால் உருக்குப் போன்ற உறுதியான-குரலில் பேசினாள்:

"என் மனசி லிருப்பதையெல்லாம் உங்களிடம் இன்று சொல்லிக்கொள்ளப் போகிறேன். சொல்லாவிட்டால், இதயம் வெடித்துவிடும் போலிருக்கிறது. என்னை நீங்கள் மன்னிக்கத்தான் வேண்டும்."

லட்சுமியின் துணிச்சலை என் உள்ளம் ஆச்சரியத்தோடு வரவேற்றது. "நானும் என் மனசில் உழலும் வேதனைகளையெல்லாம் உன்னிடம் சொல்ல வேண்டுமென்றுதானே இங்கு வந்தேன்!" என்றேன். எங்கள் இருவர் உள்ளமும் ஒன்றையே நினைத்திருக்கிறது. இது என்ன ஒற்றுமை!

புஷ்பம் விரித்த மெத்தையில், ஓர் ஓரத்தில் அமர்ந்தேன். மறு கோடியில் லட்சுமி அமர்ந்தாள். ஸ்வர்ண விக்ரகம் போலிருந்த அவள் அழகை, துக்கம் இன்னும் நன்றாய் எடுத்துக் காட்டிற்று.

"அத்தானைத் தெரியுமோ, இல்லையோ?" என்றாள்.

"தெரியும்; சந்துருவைத் தானே சொல்கிறாய்? அவன் தான் சென்ற வருஷமே கல்கத்தாவுக்குப் போய் விட்டானே."

"கல்கத்தாவுக்குத் தன்னோடு ஓர் இளம் பெண்ணின் இதயத்தையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான்."

"அவன் விரும்பினானா?"

"என்னவோ, தெரியாது. ஆனால், ஒன்று நிச்சயம். அவள் அவனை வரித்து விட்டாள்."

எனக்கு உடல் புல்லரித்தது. என்ன தீரமான பெண்ணடா இவள்!

"பிறகு?"

"அவனும் என்மீது அன்பு கொண்டிருப்பதாகத்தான் தோன்றியது. லீவுக்கு வரும் போதெல்லாம் என்னுடன் எவ்வளவோ பிரியமாகத்தான் நடந்து கொண்டான். ஆனால், கடைசியில்......"

"மறுத்துவிட்டானா?"

"மறுத்து விட்டால்தான் அல்லல் இல்லையே?"

"...ம்..."

"ஒரு கடிதம் எழுதினேன், என் உள்ளத்தையெல்லாம் கொட்டி. அதற்குப் பதிலே இல்லை. கல்கத்தாவில் இருக்கும் அவன் எங்கே! கர்னாடக லட்சுமி எங்கே?"

"ஏன்! நீ தான் இண்டர் மீடியட்......"

"ஆனால், அவனுக்கு பி. ஏ. பெண் வேண்டுமாம். டென்னிஸ் ஆடத் தெரியவேண்டுமாம். அவனோடு சரிசமானமாக உட்கார்ந்துகொண்டு சாப்பிட வேண்டுமாம்."

"இவ்வளவு செய்யமுடியாதா உன்னால்?"

"ஏன் முடியாது?"

"பிறகென்ன, லட்சுமி!"

"பிறகென்னவா? இளங் காதல் வாழ்க்கையை, கனவு விளையாட்டாக மதிக்கும் வாலிபர்கள் இருக்கும்போது, நம்பிக்கை, காதல் உறுதி என்ற நிழலில் நிற்கும் என்னைப் போன்றவர்கள் என்ன செய்வது! பணத்தை விதைத்து 'மனைவி' என்ற பொருளைப் பயிரிடும் தகப்பனார்கள் வேறு இருக்கிறார்கள். எங்கப்பா ஐயாயிரம் ரூபாய் ரொக்கத்திற்கு எங்கே போவார்?"

"அட பாவிகள், ஐயாயிரமா? சந்துரு ஒன்றும் சொல்லவில்லையா?"

"ஏன் சொல்லவில்லை. 'ஆறு யிரம் வேணு'மென்றான்." இப்படிச் சொல்லும்போது லட்சுமிக்கு நாக் குழறியது. "மேலும் ......அவனுக்குக் கல்கத்தாவில் வேறு லட்சுமி அகப்பட்டு விட்டாள்!"

முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு விம்மினாள்.

"...ம்... நீ என்ன செய்தாய்?"

"மறுபடியும் அத்தானுக்குக் கடிதம் எழுதினேன்."

"பதில் என்ன?"

"பதிலா?" என்று சொல்லிக்கொண்டே, கோவென்று கதறினாள் லட்சுமி. வெளியே இருள் படர்ந்தது. சந்திரன் மேகங்களுக்குள் முழுகினான். அறையில் எரிந்த தீபம் பரிதாபமாகத் துடித்தது.

"என் கடிதத்தை எரித்த கரியை வைத்து அனுப்பினான்" என்றாள். என் மனம் பதைபதைத்தது. சந்துருவின் செய்கையை என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.

அழுகை நின்றது. அதுவரை மௌனமாக இருந்தேன். லட்சுமி மறுபடியும் நிமிர்ந்தாள். அவள் கண்களில் ஒரு புது ஆவேசம் மிளிர்ந்தது. "அதனால் மனமுடைந்து விட்டேனா? சந்துரு—என் சொந்த அத்தான்—பிக்ஷா பாத்திரத்தில் கல்லைப் போட்டான். சரி, பிராப்தம் அவ்வளவுதான் என்று மனக் குமுறலை அடக்கினேன். வாழ்க்கை வெள்ளத்தை எப்படியும் எதிர்த்து நீந்துவது என்று திடமாகச் சங்கல்பம் செய்துகொண்டேன். உங்களைக் கல்யாணத்தன்று பார்த்தபோது எனக்கு

ரொம்பவும் பெருமையாகத்தான் இருந்தது. கல்யாணம் ஆன பிறகு, இரண்டு பேருமாய்க் கல்கத்தாவுக்குப் போய்வர வேண்டும் என்று கூட எண்ணிக் கொண்டேன். ஆனல்...''

"ஆனல் என்ன, லட்சுமி!'' என்றேன் ஆத்திரத்தோடு. லட்சுமியின் இளகிய குரல் என் கண்களில் நீரை வருவித்தது.

"சாயங்காலம், நீங்கள் இருந்த கோலம் என்னைப் பொசுக்கிவிட்டது'' என்று சொல்லிக் கொண்டே விம்மினுள்.

"கடைசியில், சந்துரு யாரைப் பண்ணிக் கொண்டானும்?''

"பார்வதியை.''

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. என் பார்வதியும் கல்கத்தாவுக்குத் தானே போயிருக்கிருள்!

"எந்தப் பார்வதியை? மஹாலிங்கய்யர் பெண்...?''

"ஆமாம். அவள் செய்த பாக்கியம்...என், இப்படி நடுங்குகிறீர்கள்?''

"அவள்...என் பார்வதி, லட்சுமி! என் பார்வதி!'' என் கண்கள் சுழன்றன. மனத்தில் ஒரே குழப்பம். லட்சுமி, ஆவேசம் கொண்டவள் போல் எழுந்து, என் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விசிக்க ஆரம்பித்தாள்.

என் மனத்திலிருந்து ஒரு பெரிய பாறாங் கல்லை இறக்கி விட்ட மாதிரியிருந்தது.

"அழாதே, லட்சுமி. அழாதே ...எழுந்து உட்கார்...இதோ, இந்தப் பாலைச் சாப்பிடு'' என்றேன்.

✲

ஆங்கிலேயர் பண்பு

ஆரம்பித்து விட்ட சண்டையைப் பயங்கரமாகவும் விடாப் பிடியாகவும், வெற்றி காணும்வரை நடத்திச் செல்வது ஆங்கிலேயர் பண்பு. இதில் காலத்தையோ, செய்யவேண்டிவரும் தியாகங்களையோ அவர்கள் லட்சியம் செய்வதில்லை. எத்தகைய முறைகளையும் கையாண்டு வென்று விடுவார்கள். ஆங்கிலேய மக்களிடமும் அவர்களுடைய தலைவர்களிடமும் இந்தப் பண்புகளிருக்கும் வரை, அவர்கள் உலகத்திலேயே மிகுந்த மதிப்பு வாய்ந்த நேசக் கட்சியினராகக் கருதப்படுவார்கள்.

— அடால்ப் ஹிட்லர். (மெயின் காம்ஃப்)

சுயமரியாதைக்காரர்கள்

பிராமணன் தன்னுடைய உயர்ந்த பரம்பரை வழக்கத்தையும், அறிவியல், அறவியல் சுடரொளியையும் தன்னுடன் வைத்திருப்பதை விட்டுவிட்டு, பச்சையாய் (எழுத்துக்கு எழுத்து உண்மையாய், வெறும் சொல்லழகுக்காக அல்ல) நடுச் சந்தையில் "கசாப்புக்காரனேடும், ரொட்டிக் காரனேடும் போட்டியிட்டான்.''... தம்முடைய கௌரவத்தையும், சுயமரியாதையையும் பழிப்புக் கிடமின்றிச் செய்யப் பிராமணர்கள் கவலையெடுத்துக் கொள்வதானல், அவர்கள் சர்க்கார் ஊழியத்தை நாடக் கூடாது.

—சேலம் பிராமணர் மகா நாட்டில் சர். சி. பி. (ஹிந்து)

சேல்ஸ் டிப்போ :— 158-B, பிராட்வே, ஜி. டி., மதருஸ்

ஹொன்னப்ப பாகவதர், T. R. ராஜகுமாரி,
N. C. வசந்த கோகிலம், U. R. ஜீவரத்னம், T. S. பாலையா
மற்றும் பலர் நடித்தது.

எழுத்தின் பிறப்பு

லா. ச. ராமாமிருதம்

முதலென்றும் நடுவென்றும் முடிவென்றும் அளவின் வரையற்று, முன் பின் இனி எனக் காலத்தின் வரையற்று, அங்கு இங்கு என இடத்தின் எல்லையற்று, அப்படி இப்படி எனும் இயல்பும், உண்டு இல்லை எனும் இயங்குதலு மில்லாது, உருவின்றி, பிரிவின்றி, ஏகமாய், உயிர் பிறக்கு முன்னர், உலகம் உற்பவிக்கு முன்னர்—

எங்கும் பிரம்ம மயம்.

பிறகு—

வானம், வானத்தின் முழு நீலம், பூமி, புனல், புல் பூண்டு, செடி கொடி—

பரம், பல்வேறு விதமாய்ப் பரிணமிக்கும் பல்வேறு உருவங்கள் உண்டாயின.

பின்னர்—

ஒன்று இரண்டாயிற்று. ஏகமாய்த் துலங்கிய பிரம்மம், சக்தியும் சிவனுமாய்ப் பிரிந்தது.

பிரம்ம ஐக்கியத்தினின்று சக்தி வெளிப்பட்டதும், அவள் வீசிய ஒளியையும் ஒயிலையும் கண்டு, சிவன் திகைத்தான். கேவலம்,நரனின் நாறும் வாயால் எடுத்துரைக்கும் அழகல்ல அது. தரையளவு புரளும் மயிரும், அக்கருணை யொழுகும் விழியும், தீட்டிய மூக்கும், புன்னகையிலேயே படிந்த வாயின் வார்ப்பும், இளமையின் மணங் கமழும் உடலும், துடி நடையும், ஒடி யிடையும்—பக்குவ நிலையின் பரி பூரணத்தை ஒருவாறு அனுமானிக்க முடியுமேயன்றி, வார்த்தையால் வரையறுக்க முடியாது.

கனவொழுகும் கண்களுடன். இடையிடையே சிவத்தைத் திரும்பி நோக்கியபடி, தன்னைச் சுற்றி விளங்கும் சிருஷ்டியை வியந்த வண்ணம் சக்தி நடந்தாள். அவளை வியந்த வண்ணம் சிவன் அவளைத் தொடர்ந்தான். சக்தியின் சாயல் பட்ட இடமெல்லாம் உணர்வும் உயிரும் பெற்று மலர்ந்தது. செடி கொடிகள்மேல் அவள் பார்வை சென்றதும், இலைகள் ஆடின. பூக்கள் கட்டின. அவள் கண்கள் வியப்புடன் வானேக்கியதும், வர்ணங்கள் பிறந்து வான வில் அமைந்தது. தென்றல் அவள் கன்னத்தை வருடியது. அவள் கனத்தைத் தரை தாங்கியதும், அதன் கடினம் குழைந்து அடிகள் புதைந்த விடத்தில் ரேகை படிந்த சுவடுகள் எழும்பின.

இம்மாதிரி நடை பழகிய பின்னர், சக்தி ஒரு தென்னை மரத்தடியில், அதன் கிழே அதன் மட்டைகள் தொட்டுக்கொண்டு, தண்ணீர், அடிமணல் பளபளக்க, ஓடும் ஓர் ஓடையருகில், களைப்புற்றவள் போல் சாய்ந்தாள்-அவள் அருகில் சிவன், காணாததைக் காணும் பரவசபயத்துடன் பதுங்கினன். அவள் அழகைப் பருகப் பருக, அவனுள் அடை

அறிவு மயமான சிவன், உணர்ச்சி மயமான சக்தியின் எழிலில் மயங்கியவுடன் ஒலி பிறந்தது. சிவ சக்திக் கூடலில் பிறந்த வடிவந்தான் எழுத்து. கூட்டில் ஊடல் புகுந்து......

பட்டுத் திணறும் அன்பு வெள்ளம் புரண்டு, பொங்கி, மடையுடைந்து, உள்ள எழுச்சி வேகம் மீறி, வாய் வழி வெளிப்பட்டது. உலகத்தின் முதலொலி பிறந்தது. உணர்ச்சியின் உருவே ஒலியாகும். அன்பே சிவம்.

இவ்வன்பு வெள்ளத்தின் உடைப்பில் சிவன் வாயினின்று உதிர்ந்த நாதவிசித்திரங்களை என்னென்று சொல்வது? இச் சமயம் பிரணவம், வேதம், கீதம், இன்னும் என்னென்ன பொக்கிஷங்கள் உதித்தனவோ? தன்னைப் புகழ்ந்தவாறு சிவன் இழைக்கும் இன்பத்தில், சக்தி இழைந்தாள். தன்னருகில் தேரை உராய்ந்து தொங்கிய ஒருமட்டையில் ஓர் ஓலையை நகத்தால் கீறிய வண்ணம். அவள் தன்னை இழந்தாள். உவகையில் அவள் அழகு பன்மடங்கு பூரித்தது.

உலகமே தன்னை மறந்த இந்தத் தனி நிலையின் வேளை எந்நேரம் நிலைத்ததோ?—ஒரு வண்டு அதைக் கலைத்தது. ஆனந்தத் தேனைக் குடித்துவிட்டு, ரீங்காரித்துக் கொண்டே வந்து, சக்தியின் கன்னத்தில் மோதியது. அக் குறுகுறுப்பில் அவள் தோள் அசைந்து, மயிர் சரிந்தது ; ஓடை நீரில் தோய்ந்து அமிழ்ந்து கனத்தது. அக் கனம், அவள் தலையை இழுக்கவே, அவள் திரும்பி, தன் நிழலை, தன் அதி அற்புதமான அழகின் நிழலைக் கண்டுவிட்டாள். 'தான்' எனும் செருக்குப் பிறந்து, அக் கணமே அவளுள் புகுந்தது. தன்னால்தானே எல்லாம்? சிவன் தொழுவதும் தன்னைத்தானே? — தானில்லாவிடில் எல்லாம் சூன்யம்தானே!— துள்ளியெழுந்து, கையைக் கொட்டிக் கலகல வென நகைத்துக் கொண்டே சக்தி ஓடி மறைந்தாள். அவ்வினிய சிரிப்பில் கக்கிய விஷம், சிவத்தின் உடலையும் உள்ளத்தையும் ஓர் உலுக்கு உலுக்கியது. தன் லயிப்பில், என்ன நடந்ததென்றும் அறியாது, திகைப்புடன் அவளைக் கூவிக்கொண்டே சிவன் தொடர்ந்தான்.

அன்று ஆரம்பமாகிய அவ்வேட்டையில் அவள் அடைந்த ஆனந்தம் அவளுக்குத்தான் அற்புதம்.எட்டியும் எட்டாது நின்று, இல்லாத சங்கடமெல்லாம் இழைத்தாள் அவள். அவள் வெறி - நகை அவன் முகத்தில் புகைந்து விஷங் கக்கியது. அவன் துரத்தத் துரத்த,அவள் கொடூரம் கொந்தளித்தது. அவன் உயிர் துடித்தது.

இப்பொழுது, அவன் வாயினின்றும் செயலினின்றும் எழுந்த ஓசைகள் சரியாயில்லை. ஆசையின் தோல்வியால் இதயத்தினின்று எழுந்த அனல் மூச்சில் புயல்கிளம்பி மண்ணும் விண்ணும் சுழன்றன. குலைந்த ஆண்மையின் கோபத்தில் தொண்டையிலிருந்து வீறிட்ட அலறலில், வானம் மின்னல் வெட்டியது. பூமி அதிர்ந்து, அங்கங்கே வெடித்தது. துயரந்தாளாது கண்ணில் துளித்த அழல் நீரில், மழை தாரை தாரையாய்ச் சொரிந்தது. உலகம் இருண்டது. மரக்கிளைகளை அலைத்து, காற்றுக் குலுங்கி அழுதது. இத்தனைக்குமிடையில், இக் குழப்பத்தைக் கிழித்துக் கொண்டு அவள் ஏளனச் சிரிப்பு ஒலித்தது.

வேடனை நோக்கி விலங்கு நகைக்கும் இவ்வேட்டை எவ்வளவு காலம் நடந்ததோ?

சிவனுக்கு உடலும் உள்ளமும் தளர்ந்துவிட்டன. அயர்வு ஆளை அழுத்தியது. பார்வை மங்கியது. தள்ளாடித் தள்ளாடி வந்து, ஒரு தென்னை மரத்தடியில் அதன் மட்டைகள் தொட்டுக்கொண்டு, அடிமணல் பளபளக்க ஓடும் ஓர் ஓடையருகில், உருண்டு மல்லாந்து விழுந்தான். வானத்தில் முழுநீலம். எங்கும் மாலையசதியின் அமைதி. மனத் துயரை அழுது தீர்க்கவும் உடலில் சக்தியில்லை. நிலை குலைந்த பார்வை, முகத்தைக் குறுகுறுத்துக்கொண்டு தொங்கும் தென்னை மட்டைமேல் ஓடி, அதில் ஒன்றிரண்டு பழுப்பு ஓலைகளின் மேலிருந்த கீறல்களில் பதிந்தது.

பெண்மையின் சிறு குறும்பில் சக்தி கீறிய கீறல்கள் அவை! அவள் குணம், கோளாறுபடுமுன், அவளும் தானும் திளைத்திருந்த ஆனந்த நிலையின் அடையாளம்.

ஐயோ! அந்த ஆனந்தத்தை அனுபவிப்பானேன்! அதற்கடுத்து இரண்டாய்ப் பிரியாது நின்ற நிலையில் நின்றிருந்தால்—ஆம், துன்பமும் இன்பமும் அற்ற கிராமயம்தான் சரி—

மனமும் உடலும் மறுபடியும் திடங் கொண்டன. தீர்மான சித்தத்துடன், சிவன் எழுந்து தவத்தில் அமர்ந்தான். மனப் புயலை அடக்கியதும், எண்ண அலைகள் குலைய ஆரம்பித்தன. நினைவை ஒரே வழியில் நிறுத்தி, தன்னைத்தான் சிந்தித்து, தன்னில் தான் ஆழ்ந்தான். நினைவு செத்ததும், நிம்மதி பிறந்தது. இம் மோன நிலையில், களிப்பின் வெறியுமில்லை, துன்பத்தின் துடிப்புமில்லை. புண்ணில் தைலமிட்டது போன்றிருந்தது, இவ்வமைதி.

தன்னைத் தேடி வரும் சிவனைக் காணாது, தன்னழகை இன்னும் பதின்மடங்கு அதிகரித்துக்கொண்டு வந்தாள் சக்தி.—வந்து, நீரோடையருகில், யோகத்தில் வீற்றிருக்கும் மூர்த்தியைக் கண்டாள். இனிய வார்த்தைகளையும், மனத்தைச் சோரங் கொள்ளும் செய்கைகளையும் காட்டி, அவரை எழுப்ப முயன்றாள். அவள் பிரயத்தனங்களெல்லாம், பாறையில் மோதும் அலைகளின் வியர்த்தமாயின. நச்சுக் கக்கும் அவள் நகையின் கவர்ச்சி குலைந்தது. அவள் மோக வலையின் பின்னல்கள் அறுந்து பீத்தலாயின. அவரைச் சுற்றிச் சுற்றி நடமாடி வருவாள். குறுமுலையழுந்த அவர் தோள்களைத் தழுவினாள். அவர் கண்கள் மெல்ல மலர்ந்து அவளை நோக்கின.

தன்னுள் தானே நிறைந்து, தானே எல்லாமாய்த் தெளிந்த, ஆண்மையின் அசாத்திய சக்தியை, அந்தக் கண்களுள் அவள் கண்டாள். அதில் தன் வலிமையின் எல்லையையும் முதன் முதலாய்க் கண்டாள். அவள் ஆணவம் ஒடுங்கி அடங்கியது. அறிவு தெளிந்தது. கடைசியில், சக்தியும் சிவத்தின் வயத்தளானாள்.

பிறகு, பகவானவர், தன் தோல்வியின் அடையாளமாகவோ என்னவோ, ஆணையும் பெண்ணையும் படைத்து, அவர்களுக் கென்று வாழ்க்கையையும் பிறப்பித்தார். பிறகு, தான் பெருக்கிய ஒலியின் உருவாய், சக்தி ஓலையில் கீறிய கீறல்களை ஆதாரமாய்க்கொண்டு, எழுத்தை எழுதினார்.

எழுத்துப் பிறந்த கதை இதுதான்.

உயிர் வளர்க்கும் மதம்

வித்துவான்—மறை. திருநாவுக்கரசு

கேள்வி: சமயங்கள் ஏன் ஏற்பட்டன?

விடை: எவ்வுயிர்க்குந் துணையாய் நிற்கும் கடவுளை வணங்கி நலமடையவே சமயங்கள் ஏற்பட்டன.

கே: அப்படியானல், மதங்கள் பலவானதேன்?

வி: இறைவனருள் பெற்ற மெய்ஞ் ஞானிகள், தத்தம் நாட்டின் கல்வி, அறிவு, ஒழுக்கம், வழக்கம் விருப்பங்களுக் கேற்றபடி, பழங் காலத்தில் மதங்களை மேற் கண்ட காரணத்திற்காக ஏற்படுத்தினரே யன்றி, சச்சரவிடுவதற்காக ஏற்படுத்தின ரல்லர். வெள்ளையர் ரொட்டி தின்பதும், தமிழர்கள் சோறு தின்பதும் தமக்குள் சண்டை போடுதற்கல்ல. அவரவர் நாட்டின் விளைபொருள்கள் கோதுமையும், அரிசியுமே யாதலால், அவற்றை உட்கொள்ள லாயினர்.

கே: இன்றைக்கு உணவும், உடையும், உறையுளுமே (வீடு) வேண்டும்! மதம் எதற்கு?

வி: இம் மூன்றும் நிறைய உடையவர்களில் கோடிக்கணக்கான மக்கள் அளவில்லாத துன்பங்களை அடைகிறார்களே! காரண மென்ன? அறிவும் நல்லொழுக்கமும் தரும் சமய வாழ்க்கையை அவர்கள் கைவிட்டமையே யன்றே? இந்த உண்மையை உணர்ந்த மகாத்மா காந்தியடிகள், "உடலை வளர்ப்பது உணவு; உயிரை வளர்ப்பது சமயம்" என்கிறார். இத்தகைய சமய வாழ்க்கையைக் கைக் கொள்ளா விட்டால், மக்கட் கூட்டமே அழிந்துவிடும்!

கே: எல்லா மதங்களும், கடவுளை யடையும் வழிகளே என்றால், குறிப்பிட்ட ஒரு மதத்திற் சொல்லப்படும் நெறி முறைகளை மட்டும் நாம் ஏன் பின் பற்றல் வேண்டும்?

வி: நாம் ஏன் நம் தாய் தந்தையர் வளர்க்கும் வழியில் வளர வேண்டும்? வேறு தாய் தந்தையர் சொற் கேட்டு அவர்கள் வீட்டிலிருந்து, ஏன் வளரக் கூடாது? ஒரு தாய் தந்தையரைப் பின்பற்றினல்தான் நாம் நன்மை அடையலாம். அது தான் இயற்கை. ஒரு வழியில் சென்றால்தான் ஓர் ஊரை அடைதல் முடியும். அதுபோல, ஒரு சமயத்து நெறிகளைப் பின்பற்றினல்தான் நன்மை யடைதல் முடியும். எல்லாப் பெரியோர்களும் இப்படித்தான் செய்திருக்கின்றார்கள்.

கே: அப்படியானல், மற்றச் சமயங்களை அசட்டை செய்யலாமா?

வி: செய்தல் கூடாது. ஒரே கடவுள்தான் எல்லா மதங்களிலும் விளங்குகின்றார். ஆதலால், பிற மதங்களை இகழ்வது கடவுளை இகழ்வதாகும். பிற மதங்களை மதிப்பதும், அவற்றின் நல்ல கருத்துக்களைப் பாராட்டுவதும் தன் மதத்தை உயர்த்துவதாகும். இதை மறக்கலாகாது.

கண்பர், இந்து சமய அற நிலையப் பாதுகாப்புக் கழகத்தின் பிரசாரகர். மறைமலை அடிகள் மகன். சைவமந் வினவிடை என்ற அவரது நூலில் ஒரு பகுதி இது.

குடி கெடுக்கும் மதம்

ம. சிங்காரவேலு செட்டியார்

மனிதனுக்குப் பழக்கமே விசேஷம். தெய்வம் என்று சொல்வதும் பழக்கம். அந்த வார்த்தையைக் கேட்டு வணங்குவதும் பழக்கம். தூப தீபங்கள் ஏந்துவதும் பழக்கம். தெய்வங்களுக்கெனக் கோவில், குளங்கள் கட்டுவதும் பழக்கமே யாகும்.

மதங்களில் அபிமானம் உள்ளவர்கள் இந்தப் பழக்க வாசனையால் "கடவுள்" என்ற பதம் எதைக் குறிக்கிறது என்று விசாரிப்பதில்லை. அந்த வார்த்தையை விசாரிக்கப் புகுந்தவர்களை "நாஸ்திகர்", "சண்டாளர்" என்று ஏளனம் செய்கிறார்கள். தன் குணத்திற்கும், தன் அறிவிற்கும், தன் அனுபவத்திற்கும், தன் நடை உடை பாவனைக்கும் தக்கவாறு, தான் கற்பித்த கடவுளுக்குக் குணத்தையும், அறிவையும், அனுபவத்தையும், நடையுடை பாவனைகளையும் மனிதன் அமைக்கிறான்.

இக்கதைகளை நம்பியே பாமர ஜனங்களுக்குப் பில்லி, சூனியம், பேய், பிசாசுகளின் மேல் நம்பிக்கை விழுந்திருக்கிறது. நோய்களுக்குச் செய்ய வேண்டிய பரிகாரங்களைச் செய்து தீர்த்துக் கொள்ளாமல், தெய்வங்களாலும், பேய் பிசாசுகளாலும் நோய்கள் உண்டாகின்றன என நம்பி, அந்தத் தேவதைகளுக்குப் பூசை, பலி முதலிய உபயோகமற்ற காரியங்களைச் செய்து, நோய்களைப் போக்கிக் கொள்ளாமல் சாகின்றனர்.

பேதி, வயிற்றுப் போக்கு, விஷ சுரம், பாரிசவாய்வு, வயிற்று வலி, சீத பேதி, இழுப்பு, ஜன்னி, பித்தப் பினத்தல் முதலிய நோய்கள், சாதாரணமாகச் சிற்சில விஷக் கிருமிகளால் உண்டாகின்றன. அந்தப் பூச்சிகளைக் கொன்றவுடன் நோய் நீங்கிவிடும். ஆனால், இதனை அறிந்தவரும் அறியாதோரும் முனீஸ்வரனுக்குப் பூசையும், மாரி அம்மனுக்குப் பிரார்த்தனையும் செய்து, நோயை அதிகரித்துக் கொள்கின்றார்கள். இல்லாத கடவுளுக்கு, இல்லாத குணங்களெல்லாம் உள்ளதாகக் கற்பித்துக் கடவுள் இதைச் செய்வார், அதைச் செய்வார் என்று மூட நம்பிக்கையைக் கொண்டு, பல பயனற்ற மந்திர தந்திரங்களில் பணத்தை வியர்த்தமாக்கி, அநியாயமாக மடியும் மக்களை என்னவென்று அழைப்பது?

பக்தனைப் போலவே கடவுளும் அமைக்கப் படுகின்றாரே ஒழிய, கடவுளுமில்லை, கடவுளுக்குக் குணமுமில்லை. மூட பக்தியால் பாமர மக்களுக்கு விளையும் கெடுதிகள் யாவும், மதஸ்தர்களும், மத பக்தர்களும் முன் கட்டிய பொய்க் கதைகளாமெனவறிக.

தோழர், தீவிர நாஸ்திக வாதி, வக்கீல், அறிஞர், வான சாஸ்திரி. பிரபலமான தொழிலாளர் தலைவர். சமீபத்தில் காலமாகி விட்டார். அவரது கடவுளும் பிரபஞ்சமும் என்ற நூலில் வரும் ஒரு பகுதி இது.

மூந்நூறு ரூபாய் வீடு

'தச்சன்'

சகல வசதியும் உள்ள, தற்கால வீடு ஒன்றை ஒரே நாளில் கட்டி முடிக்க முடியும் என்று சொன்னால், நீங்கள் நம்புவீர்களா? மாட்டீர்கள். ஆனாலும், "ஒரே நாள் வீடு" கட்டி முடிக்கக் கூடியதுதான் என்று ஹைதராபாத் இன்பர்மேஷன் பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்று கூறுகிறது. முல்கி கைத்தொழில் கண்காட்சியைப் பார்க்க வந்த ஆயிரக் கணக்கானவர்கள், இப்படி ஒரே நாளில் வீடு கட்டப் பெறுவதை நேரே கண்டார்கள். இந்த வருஷம் நடைபெற்ற கைத்தொழில் கண்காட்சியில், எல்லார் கவனத்தையும் அதிகமாக இழுத்த காட்சிப் பொருள்களில்



"ஒரே நாள் வீடு" ஆசுப் படம்

இந்தச் சிமிட்டிக் கட்டிட நிருமாணமும் ஒன்று. ஏழைகள் வசதியாய் வாழ்வதற்கு மிகப் பொருத்தமான இந்த வீடு மளமளவென்று தம் கண் முன்னரே சன்னஞ் சன்னமாய் உருவெடுத்துக் கடைசியில் ஒரு முழு



கிராமத்தான் வீடு

வீடாய் ஆனதை ஏராளமான பேர் வந்து பார்த்தார்கள். இந்த வீட்டின் நிர்மாண ஆசு போட்ட பெருமை ஹைதராபாத் நகர அபிவிருத்திச் சபையைச் சாரும்.

ஹைதராபாத்தை அழகிய நகரமாக்குவதற்காகவே நகர அபிவிருத்திச் சபை ஏற்படுத்தப் பெற்றது. அவலட்சணமாய், நெருக்கிக்கொண்டு நிற்கிற வீடுகளை அகற்றி, நகரத்துக் கழிவு இடங்களைத் துப்புரவு செய்வது என்றது, தன்னுடைய குறிக் கோளை அடைய அபிவிருத்தி சபை போட்டிருந்த திட்டங்களுள் ஒன்று. நகரத்தில் ஆயிரம் ஆயிரம் வீடுகளை அது ஏற்கெனவே கட்டி முடித்திருக்கிறது. சொற்ப வருவாய் உள்ளவர்களுக்காக இவை ஏற்பட்டன. இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த மாதிரி வீடுகள் என்று சொல்லப் பெறும்

"வீடு பேற்று"க்காக நீங்கள் காத்திருக்கத் தேவையில்லை. நீங்களே சொந்தமாய் வீடு கட்டிக்கொள்ள வழி காட்டும் இந்தக் கட்டுரையை ஹிந்துப் பத்திரிகையின் அனுமதியுடன் இங்கே வெளியிடுகிறோம்.

இவை ஒவ்வொன்றின் விலையும் ரூ. 2,000. மாத வாடகை ரூ. 10-8-0.

கிராம மக்களுக்காகப் புது முறையில் மாதிரி வீடுகளை அமைக்க இந்தச் சபையார் போட்டிருக்கும் திட்டங்கள்தான் மேலே சொன்னவைகளை விட மிக முக்கியமானவை. இந்தத் திட்டங்கள் மலிவான செலவில், சுகாதார வசதியுடன், சுக வாழ்வுக்குரிய முறையில் வீடு கட்டி



வீடும், தோட்டம் தூரவும்

யமைக்க உதவும். இந்த மாதிரி வீடுகளை ஒரே நாளில் கட்டி முடிக்கலாம். தச்சன், ஆசாரி, செங்கல், சுண்ணும்பு, கல் எவையும் தேவை யில்லை. வேண்டியவை எல்லாம் மணல், சரளைக் கல், சல்லிக் கல் அல்லது கூழாங் கல், சிமிட்டி, கதவு, ஜன்னல் இவைதான். 250 கன அடி அளவு கல்லும், 180 கன அடி அளவு மணலும், 35 மூட்டை சிமிட்டியும், 53 சதுர அடிக் கதவுகளும் ஜன்னல்களும் இருந்தால், வீட்டைக் கட்டி முடித்து விடலாம். தொழிற் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் இருந்தால்தான் காரியம் நடக்கும் என்பதில்லை. அவர்கள் இல்லாமலே வேலையை முடித்து விடலாம்.

வெறும் சிமிட்டியாலான கெட்டிக் கட்டிடந்தான் இது. வசிக்க ஓர் அறை; சமையலுக்கு ஓர் அறை; ஒரு தாழ்வாரம்; அவ்வளவுதான். சுவரும் கூரையும் கெட்டிச் சிமிட்டியாலானவை. தளம் சுமார் ஓர் அடி ஆழமிருக்கும். பன்னிரண்டு மணி நேர உழைப்பில் வீடு கட்டி முடிந்து விடும். இன்னும் பதினெட்டு நாளில் சிமிட்டி முதலியன உலர்ந்து விடும். இருபதாவது நாளில் வீட்டில் குடியேறி விடலாம். ஒரு முந்நூறு ரூபாயிருந்தால், சுகாதார முறையில், எலித் தொல்லை யில்லாமல், சுத்தமான ஒரு வீட்டை நீங்கள் கட்டி யமைத்துக் கொண்டு விடலாம். நாள் பட நாள் பட இந்த வீடு பலம் குன்றாமல், வலுப் பெற்றுக் கொண்டே வரும்.

மேலே குறிப்பிட்ட பத்திரிகையில் கட்டுரை எழுதிய ஆசிரியரே ஒரு கட்டிடம் அமைத்திருக்கிறார். யுத்தத்துக்கு முந்திய பொதுஜன வேலை இலாக்காவின் விலைப் பருவப்படி தளவாடச் சாமான்களின் விவரம் கீழே தரப் பெற்றுள்ளது :

	ரூ.	அ.	பை.
250 கன அடித் தளக்கல் ரூ. 15 வீதம்	37	8	0
180 கன அடி மணல் ரூ. 8 வீதம்	14	6	8

35 மூட்டை சிமிட்டி ரூ. 2-8 வீதம்	87	8	0
கூலி	44	0	0
53 சதுர அடி ஜன்னல், கதவு ரூ. 1 வீதம்	53	0	0
இட அமைப்பு, வாடகை, பொருத்திச் சேர்த்தல்	65	0	0
மொத்தம்	301	6	8

இந்த வீடுகளில் நீர்ப் போக்கி யுள்ள ஒதுங்கு மிடங்களும் உண்டு! இதைக் கேட்க உங்களுக்கு ஒரே ஆச்சரியமா யிருக்கிறதா, என்ன? கிராமங்களிலும், ஏன், நகரங்களிலும்கூட, ஆண்களும் பெண்களும், வயல் புறங்களையும், தெருச் சந்து வழிகளையுமே ஒதுங்கு மிடங்களாக உபயோகித்து வருகிறார்கள். இதனால், சுகாதாரக் கேடு விளையும். தொத்து நோய் பரவும். சிறு குடும்பத்தினருக்குப் போதுமானபடி, பத்தே பத்து ரூபாய்ச் செலவில் நீர்ப் போக்கி வசதியுள்ள ஒதுங்குமிடங்களை அமைத்துக் கொள்ள நகர அபிவிருத்திச் சபையார் ஒரு வழி முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கிராமத்தில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே இதை அமைத்துக்கொள்ளலாம். இரும்புக் குழாய்க்குப் பதில் மூங்கில் குழாயை உபயோகித்துக் கொள்ளலாம். இரண்டு மண் குதிர் வேண்டும்; இரண்டு தொட்டி வேண்டும். அப்புறம், கழிவுநீரை வழிந்தோடப் பண்ணக் கரைவாக அமைந்த ஒரு சிமிட்டி மேடை வேண்டும். இவ்வளவுதான். வேலை முடிந்தது.



கிராமங்களில் ஒதுங்குமிடம் கட்டலாம்

✲

"சுகமாய் வந்து சேர்ந்தோம்."
டாக்டர் (மிஸர்ஸ்) சலீம், லெஃப்டனன்ட் கர்னல் லட்சுமி, கர்னல் ஐ. எஸ். பாவா 19-3-46ல் இந்தியா வந்து சேர்ந்தார்கள்

நிருபர்கள் பேட்டிக்குப் பிறகு

சென்னை, அடையாற்றில்



ரெஜினால்டு சோரன்சன்

ஸ்ரீ வி. வி. கிரி:
சென்னை சட்ட சபைக்குப்
போட்டியின்றித் தேர்ந்
தெடுக்கப்பெற்றார்.





"வாருங்கள், வாருங்கள் நேத்தாஜி! சௌக்கியந்தானே!"

"வேறு வழியே இல்லை! சுதந்தரம் கொடுத்துத்தான் ஆகவேண்டும்!"

... ஸ்ரீ நிக்கல்சன்

மத்திய சட்ட சபைக் காங்கிரஸ் கட்சி அ

ணை சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ருர்

ஸ்ரீ. டி. பிரகாசம் (போட்டியின்றி)

ஸ்ரீ ருக்மிணி லட்சுமிபதி
(சென்னை நகரம்)

ஸ்ரீ லட்சுமி சுந்தர ஐயர்
(சேரமாதேவி)

சென்னை மாகாண ஆளும் சக்திகள்

ஸ்ரீ எல். கிருஷ்ணசாமி பாரதி
(திண்டுக்கல்)

ஸ்ரீ ஆஞ்சனேயலு அம்மாள்
(கடலூர்)





''எல்லாரும் ஓர் இனம்.'' — ஸ்ரீ கிருஷ்ணா ஹத்தி சிங்கும், மகள் மிஸ் ரிதாவும், தமக்கை ஸ்ரீ விஜயலட்சுமி பண்டிட்டும்.

'' அவசரப்படாதீர்கள்! இப்போதுதானே வந்து சேர்ந்திருக்கிறோம். திறந்த உள்ளத்துடன் வந்திருக்கிறோம். உறுதிமொழிகளை நிறைவேற்றுவோம். வெறுங் கையோடு திரும்பமாட்டோம்.''

-சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்

சுதந்தர தூதர்கள் வந்தனர்

இந்தியா மந்திரி லார்டு
பெதிக் லாரன்ஸ்

கடற்படை மந்திரி
ஸ்ரீ ஏ.வி. அலெக்சாண்டர்

பழம் கிட்டுமா?

லாகூர் கல்லூரி மாணவிகள் விளையாட்டு



துவேஷம் வேண்டாம்

மகாத்மா காந்தி

துவேஷம் தலைவிரித்தாடுகிறது. ஆத்திர மடைந்த தேசிய வாதிகள் இதைச் சந்தோஷமாகப் பயன் படுத்திக் கொள்வார்கள். பலாத்காரத்தை உபயோகித்துச் சுதந்தரத்தைத் துரிதப்படுத்த அவர்கள் முயலுவார்கள். எந்தச் சமயத்திலும், எந்த இடத்திலும் அது தவறானது என்று கூறுகிறேன். நம் விடுதலைப் போராட்டத்தில், உண்மையும், அஹிம்சையுமே நமது கொள்கை என்று உலகுக்குக் கூறிவருகிற நாம், அவ்விதம் செய்வது மிகவும் தவறானது. அது நம் தகுதிக்கு ஏற்றது மல்ல. துவேஷத்தை அன்பாக மாற்ற முடியாது என்று அவர்கள் வாதிக்கிறார்கள். பலாத்காரத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் அதைத்தான் உபயோகிப்பார்கள்.

"அவசியத்திற்கு ஏற்ப, நேரிடையாகவோ மறைமுகமாகவோ உன் விரோதியைக் கொல்லு. அவனுக்கும் அவனுடைய உடைமைக்கும் முடிந்த மட்டும் ஊறு செய்," என்று தான் அவர்கள் கூறுவார்கள். இதன் விளைவாகத் துவேஷம் அதிகரிக்கிறது. அதோடு, பதிலுக்குப் பதில் துவேஷத்தை வளர்க்கிறது. இரு பக்கமும் பழி வாங்கும் மனோபாவம் தலை தூக்குகிறது. சமீபத்தில் ஏற்பட்ட யுத்தத்தின் தீ இன்னும் முற்றும் அவிந்துவிட வில்லை. ஆனால், துவேஷத்தை வளர்ப்பது அறிவீனம் என்பதை யுத்தம் அறிவுறுத்தி விட்டது. வென்றவரென்று கருதப்படுபவர்கள் உண்மையில் வெற்றி யடைந்து விட்டனரா, அல்லது விரோதிகளைச் சிறுமைப்படுத்த விரும்பி, அம் முயற்சியி லீடுபட்டதால் தங்களையே சிறுமைப்படுத்திக் கொண்டனரா என்பது இனித் தான் தெரிய வேண்டும். விளைவு எப்படியானாலும், அந்த விஷயம் என்னவோ மோசமானது தான்.

நம் நாட்டில், சில காரிய வாதிகள் இந்தக் கொள்கையையே சிறிது மாற்றி விட்டு, "நம் விரோதியை நாம் என்றும் கொல்ல மாட்டோம். ஆனால், அவனுடைய சொத்தை அழித்து விடுவோம்," என்று கூறுகிறார்கள். "அவனுடைய சொத்து" என்று நான் சொல்வது தப்பிதமா யிருக்கலாம். ஏனென்றால், நம் விரோதி யென்று கருதப்படுபவன் தன்னுடைய சொந்தச் சொத்து எதையும் அவன் இங்கே வரும்போது கொண்டுவர வில்லை. அப்படி ஏதாவது கொண்டு வந்திருந்தாலும், அதற்காக நம்மிடமிருந்து பொருளைக் கறந்து கொண்டிருக்கிறான். ஆகவே, நாம் அழிக்கும் பொருள் உண்மையில் நம்முடையதே. அதில் பெரும் பாகம் — உழைப்போ, பொருள்களோ, எதுவானாலும் சரி,— அவன் இங்கு உற்பத்திசெய்தவைதான். அவனிடம் உள்ள

துவேஷம் துவேஷத்தையே வளர்க்கும், அன்பு முலாமிட்ட துவேஷம் நெடுநாள் செலாவணி யாகாது. அன்பு முறையாலன்றி உலகம் உய்ய வழி யில்லை என்று ஹரிஜனில் காந்திமகான் கூறுவதை நாம் அனைவரும் மேற்கொள்ள வேண்டும்.

தெல்லாம் அதனை வைத்துக் காக்கும் பொறுப்புத்தான். சேதம் ஏற்படும்போது அதற்கு ஈடுகட்ட நாம்தான் தண்டம் தொலைக்கவேண்டி யிருக்கிறது. அதிலும், ஒன்று மறியாத அப்பாவிகளே இந்தச் சுமையைத் தாங்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அபராதம் விதிப்பதன் நோக்கமும் அர்த்தமும் இது தான்.

வெறும் கொல்லாமையே அஹிம்சை என்று கொள்வது பலாத்கார தத்துவத்தினின்றுக் எந்த வகையிலும் சிறந்தது ஆகாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அது உயிரோடு கொல்லுவதாகும். நிதானம் பயனற்றுப் போகும்போது, நாம் உடனே கொலையில் இறங்குகிறோம். அணுக் குண்டைத் தேடுகிறோம். பலாத்காரத்தின் முழு வளர்ச்சியைத்தானே இன்று அணுக் குண்டு குறிக்கிறது?

துவேஷத்திற்கு ஒரு வடிகால் ஏற்படுத்தி அதனைச் சரியான பாதையில் செலுத்துவதற்கு, நான் 1920-ம் ஆண்டில் அஹிம்சையையும் அதன் தவிர்க்க முடியாத இணைத்துணையான உண்மையையும் கடைப்பிடிக்குமாறு கூறினேன். துவேஷிக்கவேண்டு மென்பதற்காக ஒருவன் துவேஷிப்ப தில்லை. தான் துவேஷிப்பவனை நாட்டை விட்டு விரட்டுவதே அவன் நோக்கமா யிருக்கும். பலாத்கார முறைகளைக் கொண்டு அவன் சாதிக்கக் கூடியதை அஹிம்சா பூர்வமாகவும் சுலபமாக அவன் அடையக் கூடும்.

சென்ற இருபத்து ஐந்து ஆண்டு களாக,—மனமிருந்தோ, இல்லாமலோ—இழந்த நம் சுதந்தரத்தை மீண்டும் பெற, பலாத்காரத்தைவிட அஹிம்சையே ஏற்றது என்று பொது மக்களிடையே காங்கிரஸ் கூறி வந்திருக்கிறது. மேலும், அஹிம்சா பிரயோகத்தின் மூலம் இதுவரை என்று மில்லாதபடி சீக்கிரமாகவும் மிகப் பரந்த அளவிலும் பொது மக்களின் மனத்தைத் தொட முடிந்திருக்கிறது. இதுவரை நாமடைந்துள்ள முன்னேற்றத்தி லிருந்து, இந்த உண்மையை அறிந்திருக்கிறோம். உண்மையை உள்ளபடியே சொன்னால், நாம் அனுஷ்டிக்கும் அஹிம்சை அரை மனதானதுதான். அனேகர், நெஞ்சில் பலாத்கார நினைவோடு, வாயால் அஹிம்சைப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். புறத் தீமைகளால் மாசுபடாத பாமர மனம் நம் உள்ளங்களில் புதைந்து கிடக்கும் ரகசியக் கருத்தை அறிந்து கொண்டிருக்கிறது. அதன் நினைவறியாத எதிர் உணர்வும், வேறு நிலையில் அது இருந்திருக்கக் கூடிய மாதிரியில் இருக்கவில்லை. கயவஞ்சகம் நற்குணத்தின் புகழ்க் கீதமாக விளங்குகிறதானாலும், நற்குணத்தின் ஸ்தானத்தை அது என்றும் அடைய முடியாது. அதனாலேயே நான் அஹிம்சை வேண்டும், மேலும் மேலும் அஹிம்சை வேண்டும், என்று கூறுகிறேன். விஷயந் தெரியாமல் நான் அப்படிச் சொல்லவில்லை. அறுபது வருஷ அனுபவத்தைக் கொண்டே அப்படிக் கூறுகிறேன். இதுதான் தக்க சமயம்.

ஊமைச் சனங்கள் இன்று உணவின்றித் தவிக்கின்றனர். தேசத்தின் இன்றையத் தேவைகளுக்கு ஏற்ப அஹிம்சைத் தத்துவத்தின் நீதிகளை எப்படி எப்

படிப் பிரயோகிப்பது என்பதைப் பற்றிய அனேக வழிகள் புத்தி சாலியான வாசகருக்குத் தோன்றலாம்.

இந்திய தேசிய ராணுவத்தின் மந்திர சக்தியில் நாம் எல்லாம் கட்டுண்டிருக்கிறோம். நேத்தாஜியின் பெயர் மந்திர உச்சாடனம் போல் விளங்குகிறது. தேச பக்தியில் அவர் யாருக்கும் இளைக்காதவராகவே இருக்கிறார். (நான் வேண்டுமென்றே "இருக்கிறார்" என்று நிகழ் காலமாய்ப் பேசுகிறேன்.) அவர் தீரம் அவருடைய எல்லாச் செயல்களின் மூலமும் பிரகாசிக்கிறது. அவருடைய லட்சியம் மகத்தானது. ஆனால், அவர் தோல்வியுற்று விட்டார். யார்தான் தோல்வியுற வில்லை? நம் லட்சியம் உயர்ந்ததா யிருக்க வேண்டும். சிறந்த முறையில் அதனை மேற்கொள்ள வேண்டும். வெற்றி என்பது எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதன்று. இதற்கு மேலே என்னால் புகழவும் போற்றவும் முடியாது. அவர் செய்கை தோல்வியுறு மென்று எனக்குத் தெரியும். அவர் வெற்றியுடன் இந்திய ராணுவத்தினரைக் கூட்டிக்கொண்டு இந்தியாவுக்கு வந்திருந்தால்கூட, அப்போதும் நான் இப்படியே சொல்லியிருப்பேன். ஏனென்றால், பாமர மக்கள் இந்த முறையினால் அதிகாரத்தை அடைய முடியாது. தியாகம், வகுப்பு, மதம் என்ற பேத மற்ற ஒற்றுமை, ஒழுக்கம்—இவை தான் நேத்தாஜியும் அவரது சேனையினரும் நமக்கு அறிவுறுத்தும் படிப்பினை. நம்முடைய போற்றுதல் புத்திசாலித்தனமாகவும் தரமறிந்தும் இருக்குமானால், நாம் மேலே கூறிய முக்குணங்களையும் உறுதியாகப் பின்பற்றலாம். ஆனால், அதே உறுதியோடு பலாத்காரத்தை நாம் ஒதுக்கிவிடுவோம்.

இ. தே. ரா. மனிதர் "நானும் என்னைச் சேர்ந்தவர்களுமே ஆயுத பலத்தின் மூலம் இந்திய மக்களின் அடிமைத் தளையை அறுத் தெறியப் போகிறோம்" என்று எண்ணும்படியாகவோ, சொல்லும்படியாகவோ நான் விடமாட்டேன். அவர் நேத்தாஜியிடம் உண்மை யுள்ளவர் என்றால்—அதைவிடத் தேசத்திடம் உண்மை அன்பு பூண்டிருந்தால்—மக்களிடையே, ஆண் பெண் குழந்தைகளனைவரிடையேயும்—அவர்களைத் தீரராகவும், தியாகிகளாகவும், ஒற்றுமை யுடையோராகவும் வாழும்படி போதிப்பதில் அவர் ஈடுபட வேண்டும். அப்போது, உலகத்தின் முன்னிலையில் நாம் தலை நிமிர்ந்து நிற்க முடியும். ஆனால், அவர் ஒரு சிப்பாயாக மட்டும் இருந்தால், மக்களை அடக்கி யாளவே எண்ணுவார். அவர் ஒரு தொண்டர்தான் என்பதால் அதிகப் பலன் ஏதும் ஏற்படாது. ஆகவே, "நேத்தாஜிக்கு உண்மை யானவனா யிருக்க, இந்தியா சேர்ந்து விட்ட நான், காங்கிரஸ் கொடிக்கீழ் ஓர் எளிய அஹிம்சா வீரனாகவே விளங்குவேன்" என்று கேப்டன் ஷா நவாஸ் விடுத்த அறிக்கையை நான் வரவேற்கிறேன்.

✲

உணரும் பெண்கள்: பெண்களிடம் உள்ளந்தான் பேசுகிறது; அறிவல்ல.

— மேத்யூ ஆர்னல்ட்

அவள் முகம்

"நவீனன்"

அவன் :

விண்ணெளிர் மீன்களின் வெண்பொடி—பூசி
விண்பனித் தேனினை உண்டிடும்—அந்தத்
தண்மதிப் பேரொளி காணுவார்—நெஞ்சில்
எண்ணுவார் எண்ணுவார் உன்னையே

அவள் :

விண்பனித் தேனைநான் கண்டிலேன்—மக்கள்
உண்ணுநெற் சோறுதான் வேண்டுவேன்—மற்றுப்
பெண்முகம் இன்முகம் ஆக்கிடும்—அந்த
நன்முகத் தூளதே வேண்டுவேன்

அவன் :

விண்மதி வேண்டிலேன் கண்மணி—உனது
இன்முகம் இன்மொழி வேண்டுவேன்

✲

பஞ்சத்தைப் போக்க வழி

ஜே. ஸி. குமரப்பா

நம் முன் நிற்கும் பஞ்சப் பேயுடன் மல்லிடுவது குறித்த உடனடியான செயல் முறையைப் பற்றி, வேண்டிய அளவு பேசியாயிற்று, எழுதியாயிற்று. இது சரிதான். அதே சமயத்தில், இன்னொரு காரியத்தையும் நாம் செய்தாக வேண்டும். இந்த மாதிரி நிலைமை மீண்டும் வருவது சுலபமாகாதபடி, நீண்ட காலத்துக்கு உதவுபடியாகிற முயற்சிகளை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நோக்கத்துடன், இப்போது வந்துள்ள பஞ்சத்துக்குக் காரணங்கள் யாவை என்று ஆராய்ந்து பார்த்து, இது மீண்டும் நிகழாதபடி தடுக்கவேண்டிய வழி துறைகளைக் கண்டுபிடிப்பது பயன் தரும்.

பொதுப்படையான காரணங்கள் சில உண்டு. இவை எல்லாக் காலத்துக்கும் பொருந்தும். தனிக் காரணங்களாக உள்ளவை, இந்தப் பஞ்சத்தின்போதுதான் ஏற்பட்டவை. பொதுக் காரணங்களில் எல்லாம் மிக்க பலமான காரணம் எது? சமீப வருஷங்களில், பணத்தையும், விலைவாசிகளை நிர்ணயிக்கிற இயந்திரத்தையே ஒரு வழி காட்டிச் சக்தியாகக் கொண்டு செல்லுகிற போக்கையும் மிக முக்கியமாகக் கருதத் தொடங்கியது தான் அந்தக் காரணம்.

பணம்: பரிவர்த்தனைக் கருவி என்ற அளவில் நம்முடைய பொருளாதார வாழ்க்கையில் பணத்துக்கு முக்கியமான ஓர் இடம் உண்டு. ஆனால், இந்தக் காரியத்துக்குக் கூட அது பரிபூரணமான ஒரு சாதனம் அல்ல. அழியும் பண்டங்களோடு ஒப்பிடும்போது, பணம் அழிந்து போகாத பொருள்தான். பழம் விற்கிறவன் பணம் படைத்தவனுடைய தயவில் பிழைக்க வேண்டியிருக்கிறது. ஏன்? பழம் அழியக்கூடிய வஸ்து. அதை அவன் விற்கமாட்டேன் என்று சொல்லிக் கொண்டே இருக்க முடியாது. இருக்க இருக்க, அது அழுகிப்போய்விடும். வாங்குகிறவனோ அப்படியல்ல. அவன் தன்னுடைய சௌகரியப்படி நடந்துகொள்ளலாம். பணத்துக்கு உள்ள இந்தத் தன்மையால், சுரண்டுவதற்குப் பணத்தை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்ள வழி ஏற்படுகிறது. இதனால் பணத்தின் கவர்ச்சி அதிகமாகிவிடுகிறது. தங்கள் தங்கள் அண்டைப் புறத்தை மட்டும் பார்த்துக்கொண்டு வாழ்கிற பண்ணைக்காரர்கள் தங்கள் தானியங்களை விற்று, உயிர்வாழப் போதிய வசதி தராத பணத்தைப் பெறுவதன் மூலம் தங்களுடைய உயிரையே விற்றுவிடுகிறார்கள். ஆகவே, நம்முடைய நாட்டைப் போன்ற விவசாய நாட்டில்,

இந்தப் பஞ்சம் தெய்வ சங்கல்பத்தால் மட்டும் வந்ததல்ல. சர்க்காரின் சுரண்டல் முறைதான் இதற்கு முக்கியமான காரணம். இந்த நிமிஷமே சுறுசுறுப்பான நடவடிக்கை எடுக்காவிட்டால் இனி அடிக்கடி பஞ்சம் வரும். கிராம உத்யோக் பத்திரிகையில் வெளியான இந்தக் கட்டுரை உருவான வழி காட்டுகிறது.

பணத்தின் உபயோகத்தை நாம் கட்டுப்படுத்தி, பண்ட மாற்று முறையை ஆதரிக்க வேண்டும்.

வலை வீசும் பணம்: ரொக்க மதிப்பற்று, பரிவர்த்தனைப் புழக்கத்திற்காக உபயோகமாகி, தனக்குத் தானே இயற்கை மதிப்பு எதுவும் இல்லாமல் இருக்கிற பணம் சம்பந்தப்பட்ட வரையில், நிலைமை இன்னும் மோசமாகிவிடுகிறது. பண ஆசை என்கிற தூண்டியைப் போட்டுத் தான் பணம் படைத்தவர்கள் தம்முடைய கட்டளைகளைக் கிராம மக்கள் நிறைவேற்றும்படி செய்கிறார்கள். பண்ணைக்காரர்களுக்கு வேண்டிய தானிய தவசங்களை விட, ஆலைக்காரருக்கு வேண்டிய கரும்பைத்தான் பண்ணைக்காரர்கள் பயிரிட வேண்டும், என்று கரும்பு ஆலைச் சொந்தக்காரர் விரும்பினால், கரும்புக்கு அவர் நல்ல விலை கொடுக்கிறார். ஏராளமாய்ப் பணம் கிடைப்பதால், தமக்குள்ளே போட்டி போட்டுக் கொண்டு பண்ணைக்காரர்கள் கரும்பையே பயிர்செய்கிறார்கள். இப்படியாக, முடிவில், ஆலைச் சொந்தக்காரருடைய தேவைக்கு அதிகமாகவே இவர்கள் பயிர் செய்து விடுகிறார்கள். பிறகு, கரும்பாலைக்காரர் சடக்கென்று விலையைக் குறைத்து விடுகிறார். இந்த வழியாகப் பணம் படைத்தவர் ஏகபோக அதிகாரத்துடன் நடந்து கொள்ளுகிறார். பண்ட உற்பத்திக்காரர்கள் அவருடைய கைப்பொம்மையாகி, அவர் சொற்படி ஆடுகிறார்கள். சூது வாது தெரியாத அப்பாவிப் பண்ணைக்காரர்களை வலை வீசிப் பிடிப்பதற்குப் பணம் உபயோகிக்கப்பட்டுவருகிறது. பணப் புழக்கத்தை அதிகரிப்பதன் மூலம் பெருமானம் அதிகம் வாய்ந்த உணவுத் தானியங்களைச் சர்க்காரானது நாட்டிலிருந்து வெளியேற்றி, உணவுத் தட்டை அதிகரித்து விட்டது. யுத்தம் என்கிற சாக்குப்போக்கு மறைந்து விட்ட பிறகுகூடப் பணத்தைப் பெருக்குகிற கொள்கையைச் சர்க்கார் இன்னும் பின்பற்றியே வருகிறது. போன வருஷம் பணப் புழக்கத்தின் அளவு இருநூறு கோடி அதிகரித்திருக்கிறது. கள்ளச் சந்தையும் பண வீக்கத்தால் உண்டான ஒன்றுதான். பஞ்சம் வந்ததற்கு நேரடியான காரணம், சாமான் சரக்குகள் அதிகப்படாமல், பணம் மட்டும் இப்படி விரிந்து கொண்டே போனதுதான். ஐக்கிய தேச சபைக் கூட்டத்தில் பேசும்போது, சர். ஏ. ராமசாமி முதலியார் வெட்கமில்லாமல் சொல்லி இருக்கிறபடி, கல்கத்தாத் தெருக்களில் மக்கள் பட்டினியால் மடிந்துகொண்டிருந்த போது, சர்க்காரானது ருஷ்யாவுக்கும் இதர நாடுகளுக்கும் உணவுத் தானியங்களை ஏற்றுமதி செய்துகொண்டிருந்தது. பண வீக்கக் கருவியின் துணை கொண்டு இதை அவர்கள் சாதிக்க முடிந்தது. உற்பத்தியாளர்களுக்குக் கேடு சூழாத முறைகளைக் கொண்டு நம்முடைய செலாவணியை நாம் சுருக்கிக்கொள்ள வேண்டும்.

மூலப்பொருள் ஏற்றுமதி: தொலை தூரங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகள், பணத்தின் ஆதாரத்தைக் கொண்டு, உலகத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் மூலப் பொருள்களைப் பெற முடிகிறது. மூலப் பொருள்களை உற்பத்தி செய்கிற மக்களின் வறுமையை அதிகப்படுத்திய

பொறுப்பு இந்த ஏற்பாட்டையே சாரும். உதாரணத்துக்குப் பாருங்கள்: முழுவதும் பதனிட்ட தோலையோ, செய்து முடித்த தோல் சாமான்களையோ விற்பதற்குப் பதிலாக, பதனிடாத தோலை நாம் ஏற்றுமதி செய்வதால், தொகை பூராவும் கிடைத்தால் நமக்கு எவ்வளவு பணம் வருமோ, அதில் ஓர் அணு அளவு கூட நாம் பெறுவதில்லை. நம்முடைய வாங்கும் சக்தி இப்படிக் குறைந்து போவதால், உயிர் வாழப் போதுமான வசதிகூட இல்லாமல் இருக்கிறோம். அதற்கும் கீழான நிலையில் வாழும் பாமர ஜனங்கள் அன்றாடம் நிச்சய மற்ற வாழ்க்கை நடத்திக் கொண்டு வந்து, உணவுத் தட்டு ஏற்பட்ட அந்தக் கணமே நிலைமையை எதிர்த்து நிற்கமுடியாமல் தடுமாறி விழும்படி நேருகிறது.

இதற்குப் பரிகாரம் என்ன? மூலப் பொருள் எதுவும் ஏற்றுமதியாகக்கூடா தென்று தடை விதிக்க வேண்டும். மூலப் பொருள்களை நம் நாட்டிலேயே, நம்முடைய கிராம மக்களைக் கொண்டே பண்டங்களாகச் செய்து முடிக்க வேண்டும்.

விவசாயம்: நீண்ட காலப் பருத்திப் பயிர், பண் படுத்திய கரும்பு, புகையிலைப் பயிர் ஆகிய தொழில் முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களுக்கு நல்ல விலை கொடுத்துப் பண்ணைக்காரர்களை வசப்படுத்திக்கொண்டு, உணவுப் பயிர்களுக்குப் பதில் இவற்றையே உற்பத்தி செய்ய ஆலைச் சொந்தக்காரர்கள் முயல்கிறார்கள் என்பதைக் கண்டோம். மிக முக்கியமான உணவுத் தானியங்களைப் பயிரிடுவதற்குள்ள வளமான நிலங்கள் பயிர்க் காரியங்களுக்குக் கிட்டாதபடி இந்த முயற்சி செய்து விடுகிறது. நாட்டில் உணவுக் குறை இருந்து வரும் மட்டும், இந்த மாதிரி வியாபாரப் பயிர்களை உற்பத்தி செய்யக் கூடாது என்று நாம் தடை விதிக்க வேண்டும்.

தொழில்: மூலப் பொருள்கள் அனைத்தையும் ஏற்றுமதி செய்யாமல் தடுத்து விட்டாலும் கூட, உணவுப் பண்டங்கள் எதையும் உணவு அல்லாத பொருளாக மாற்றி விடாதபடி நாம் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். உதாரணமாக, பாலைத் திரிந்துபோன பால் ஏடை ஆகவும், கோதுமை, அரிசி இவற்றை மாவுப் பொருளாகவும் மாற்ற விடக் கூடாது. துணி வெளுப்பதில் மாப் பொருளைக் கஞ்சிப் பசையாக உபயோகிப்பதைத் தடுக்க வேண்டும்.

யுத்தத்தின்போது, சொந்தத்தில் உற்பத்தியாளராய் இருக்கக் கூடிய பெரும்பாலரை அழிவு ஸ்தாபனமாகிய ராணுவத்தில் சம்பளம் கொடுத்து வைத்திருந்தார்கள். இதன் மூலம் நாட்டின் சேமிப்பில் இருந்து ஏராளமாகப் பொருள் பறிபோயிற்று. இந்த மனிதர்களை ராணுவத்தில் சம்பளம் கொடுத்து வைத்திருந்தார்கள் என்பதோடு மட்டுமல்ல; இவர்களுடைய வாழ்க்கைத் தரமும் ஒரே அடியாய் உயர்ந்து போய்விட்டது. ஏன்? இவர்களுடைய வாழ்க்கை முறையில் அதிகமான உடல் உழைப்பு இருந்தாகவேண்டி யாகிறது. அதனால், அதிகப்படியான உடல் உழைப்புக்குத் தகுந்தபடி இவர்கள் போதுமான உணவு உட்கொள்ளவேண்டி யிருக்கிறது. ஆகவே, நாட்டின் உணவு இருப்பிலிருந்து இந்த ராணுவ மனிதர்கள் இரண்டு மடங்கு உணவைத்

தின்று விடுகிறார்கள். அதோடு, லட்சக் கணக்கான அன்னியத் துருப்புக்களை நம் நாட்டுக்குள்ளே கொண்டு வருகிறார்கள்.

இதற்குப் பரிகாரம் காண்பது எளிதுதான். அன்னியர்கள், அவர்களுக் கென்று இறக்குமதி செய்யப்படும் உணவைக் கொண்டுதான் வாழவேண்டும். நம்மவர்கள், நிலத்தில் வேலை செய்து, தங்களுக்கு வேண்டியதை உற்பத்தி செய்துகொள்ளும்படி செய்யவேண்டும். எந்த விதமான உணவுப் பொருளையும் ஏற்றுமதி செய்யாமல் தடுக்க வேண்டும். சொல்லப் போனால், எல்லாவிதமான ஆரம்பத் தேவைகளைப் பொறுத்த மட்டில், அயல் நாட்டு வர்த்தகத்தின் மீது தடை விதிக்க வேண்டும். நம்முடைய தேவைபோக இருக்கும் மிச்சந்தான் இவை என்று நிரூபிக்கக் கூடிய பொருள்களை வேண்டுமானால் ஏற்றுமதி வியாபாரத்துக்கு உபயோகித்துக் கொள்ளலாம்.

நீர் வசதி: ராணுவத் தேவைகளுக்காகக் கண் மண் தெரியாமல் மரங்களை வெட்டிச் சாய்த்து விட்டதனால், காடுகளில் மரங்கள் அருகிவிட்டன. மீண்டும் மரங்களை உண்டாக்கி, நிலைமையைச் சீர் செய்வதற்கு எத்தனையோ வருஷங்கள் ஆகும். இதன் அர்த்தம் என்ன? பருவ மழையும் சாதாரண மழையும் இன்றுதான் பொய்த்து விட்டன என்பது மட்டுமல்ல; இன்னும் பல வருஷங்களுக்குச் சரியான மழையே இராமல் போய்விடும். இந்தக் கேட்டுக்கு நாம் பரிகாரம் தேடுவதானால், மரம் நடுவதற்கு நாம் தீவிரமான முயற்சிகளை யெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும். முடிந்த இடங்களிலெல்லாம்,—கிராமங்களிலும் சரி, சாலை ஓரங்களிலும் சரி, பிற இடங்களிலும் சரி, வேப்ப மரம், புளிய மரம், மாமரம், உபயோககரமான இதர மரங்கள் எல்லாவற்றையும் ஜனங்கள் நடவேண்டும்.

கிணறு வெட்டவும், குளம் வெட்டவும், வாய்க்கால் தோண்டவும் நாம் ஒரு செயல் — திட்டத்தை வகுத்துக் கொண்டு காரியம் நடத்த வேண்டும். காடுகள் நலிந்து போவதால், மண் அரித்துக்கொண்டு போய், நிலத்தின் வளம் குன்றும். நிலத்தை நல்ல படியாய் வைத்திருப்பதன் பொருட்டு, வரப்பு முதலிய பாத்திகளை எழுப்பி, அறுத்தோடி உண்டாகாமல் தடுக்க வேண்டும்.

இவை அனைத்தையும் செய்வதற்கு உடனே நாம் நடவடிக்கை எடுததுக் கொள்ளா விட்டால், வருஷாவருஷம் இந்த மாதிரிப் பஞ்சங்கள் வந்தே தீரும். சர்க்காரை நம்பி இருப்பதால் நமக்கு ஒன்றும் ஆகிவிடாது என்பதை நாம் அறிவோம். ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் சர்க்காருக்கு இருந்திருக்குமானல், இந்தப் பஞ்ச நிலை ஒருநாளும் ஏற்பட்டிருக்காது. நிலைமையைச் சமாளித்துக் கொள்ளப் பொதுமக்கள் செயலில் இறங்கவேண்டும். அதுவும், இன்றே இறங்க வேண்டும்.

*

கருத்துப் போர்: கப்பல்களின்றி எப்படிக் கடல்-போரில் வெல்ல முடியாதோ அதே போல் புத்தகங்களின்றிக் கருத்துப் போரில் வெல்வதும் முடியாது.

—ரூஸ்வெல்ட்

M211,N.365 N46·12·1

அடித்துத் துவைப்பதாலேற்படும் வீண் நாசத்தைப் போக்குங்கள்—இம்மாதிரி உடைகளைச் சலவை செய்யுங்கள்



பழைய முறையில் அடித்துத் துவைத்துச் சலவை செய்வதால் உடைகள் அநாவசியமாய் நைந்தும், கிழிந்தும் போகின்றன — இந்தப் பாழுந் தோற்றத்தால் நீங்களும் உங்கள் நண்பர்களும் அடிக்கடிக் கவலைக்குள்ளாகிறீர்கள்.

4

எண்களிடப்பட்ட இந்தப் படங்களில் காட்டப்படும் முறையைப் பின்பற்றுங்கள். கீழே தரப்படும் புத்திமதிகளைக் கையாளுங்கள். உங்கள் உடைகள் யாதொரு தீங்குமின்றி உண்மையில் சுத்தமாய்ச் சலவை செய்யப்படுமென்பதைப்பற்றி நீங்கள் உறுதியாய் நம்பியிருக்கக்கூடும்.

(1) சலவை செய்யவேண்டிய உடையை தண்ணீரில் நன்ருக நனையுங்கள்.

(2) ஸன்லைட் சோப்பை நனைந்த உடையின்மீது தேயுங்கள். அழுக்குப்படிந்த இடத்தில் சோப்பைத் தாராளமாகத் தடவவேண்டும்.

(3) சோப் தோய்ந்த உடையை மெதுவாக, ஆனல் நன்ருக, கசக்கி நுரை உடையின் இழைகளில் படும்படியாகச் செய்யவேண்டும். துணிகளை முரட்டுத்தனமாக அடித்துத் துவைக்கவோ, அமுத்திக் கசக்கவோ செய்யாதீர்கள். ஸன்லைட்டின் சக்தியுள்ள நுரை பட்டமாத்திரத்திலேயே அழுக்கு துணியைவிட்டு நகர்ந்துவிடுகிறது.

(4) உடையை அழுக்குப் படிந்துள்ள நுரையிலிருந்து அலசிச் சுத்தம் செய்து. அது இப்பொழுது எப்படி அப்பழுக்கற்று தூய்மையாக விளங்குகிறது என்பதைப் பாருங்கள்.

இந்த மிருதுவான ஸன்லைட் முறைப்படி துணிகளைச் சலவை செய்தால் அவை வெகுநாட்கள் நீடித்துவரும்.

ஸன்லைட் சோப்

துணிகளைப் பாதுகாக்கிறது

S. 76-50-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

வணக்காப்பக
8885
600 008

கோடிக்கணக்கான
உடல் நலமற்ற மக்க
ளுக்கு புத்துயிரளித்து
நரம்புகளுக்கு வலிவை
யூட்டி திடகாத்திரர்க
ளாக்கி வரும் டானிக்
ஜீவாம்ருதம் இன்
னும் இரண்டு வருடங்
களில் பொன் விழா
கொண்டாடும்

ஆயுர்வேதாஸ்ரமம், மதராஸ்.

EASTERNS 362.

Your Favourite — in a New Cover

KERALA SOAP INSTITUTE, CALICUT

FAS-191

கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்
கள்ளிக்கோட்டை

ஸிரியா, லெபனான் போராட்டம்

ஆர். எச். நாதன்

இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்த பின்பு, தோற்றுப் போன இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சொந்தமான அடிமை நாடுகளை, பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் பங்கு போடாமல் ஸோவியத் யூனியன் தடுத்தது. ஸான் பிரான்ஸிஸ்கோ மகா நாட்டில், இந்த நாடுகளுக்கு உடனே பூரண சுதந்தர மளிக்க வேண்டுமென்று ஸோவியத் யூனியன் போராடிற்று. ஆனால், ஏகாதிபத்திய வாதிகள் எதிர்த்தனர். ஆயினும், தர்ம கர்த்தா ஸ்தாபனத்தின் நிர்வாகத்தின்கீழ் இந்த நாடுகள் இருக்க வேண்டுமென்றும், விரைவில் இவைகளுக்குச் சுதந்தர மளிப்பதே இந்த ஸ்தாபனத்தின் லட்சியமென்றும் தீர்மானிக்கப்பட்டது. சுருங்கக் கூறின், இந்த நாடுகள் விரைவில் சுதந்தர மடைவதற்கு வேண்டிய வழி வகைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இது, ஸோவியத் தலைமையின்கீழ் பாஸிஸ்டு எதிர்ப்புப் போராட்டம் நடந்ததன் விளைவு.

ஆனால், முதல் உலக மகா யுத்தம், ஏகாதிபத்தியங்களின் தலைமையில் நடந்தது. ஜெர்மனியும், அதன் நேச நாடுகளும் தோற்றுப் போன பின்பு, அவைகளுக்குச் சொந்தமான அடிமை நாடுகளை வெற்றி பெற்ற ஏகாதிபத்தியங்கள், தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டன.

பாவம், ஏகாதிபத்தியங்களுக்கு இது ஒரு சோதனைக் காலம்! ஸிரியா, லெபனானை, மக்களைப் பிரான்ஸும் பிரிட்டனும் இனி நெடு நாள் சுரண்ட முடியாது. நிலைமை அவ்வளவு தூரம் முற்றிவிட்டது. பக்க பலமும் சேர்ந்துவிட்டது.

மத்தியக் கிழக்குப் பிரதேசத்திலுள்ள அராபிய நாடுகள் துருக்கியின் ஆதிக்கத்திலிருந்தன. "லெவான்ட் நாடுகள்" என்று அழைக்கப்படும் ஸிரியாவும், லெபனானும் 1920-ம் வருடம் நடந்த "ஸான்ரெமோ" மகா நாட்டு ஒப்பந்தப்படி, பிரான்ஸுக்குச் சொந்தமாயின.

பிரெஞ்சு முதலாளிகள் 350 கோடி பிராங்கு மூல தனத்தை (80 பிராங்கு ஒரு பவுன்) லெவான்ட் நாடுகளில் போட்டிருந்தார்கள். பல தொழிற்சாலைகளும் சகல பாங்குகளும், பிரெஞ்சு முதலாளிகளுக்கே சொந்தம்.

லெவான்ட் நாடுகளில் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். பிரெஞ்சு ஏகாதிபத்தியம் ஜாதி, சமயச் சண்டைகளைக் கிளப்பி, பிளவை உண்டு பண்ணப் பெரு முயற்சி செய்தது. ஆனால், படு தோல்வி யுற்றது.

அராபிய நாடுகளில், லெவான்ட் நாடுகள்தான் சுதந்தர இயக்கத்திற்கு நடு நாயகமாகத் திகழ்ந்தன. ஆதி முதல், போர்க் கொடியை உயர்த்தி விட்டார்கள். பல போராட்டங்களின் பலனாக, 1940-ம் வருடம் லெவான்ட் நாடுகளுக்குச் சுதந்தரமளிப்பதாகப் பிரெஞ்சு ஏகாதி

பத்தியம் வாக்குறுதி கொடுத்தது.

ஆனால், இதற்கிடையில் இரண்டாவது உலக மகா யுத்தம் வெடித்தது. லெவான்ட் நாடுகளிலிருந்த பிரெஞ்சு உத்தியோகஸ்தர்களில் பெரும்பான்மையோர் பாஸிஸ்டு விஷி சர்க்காரை ஆதரிப்பவர்கள். முக்கியமாகப் பிரெஞ்சுப் பிரதிநிதியாக இருந்த ஜெனரல் டென்ட்ஸ் ஒரு பழுத்த பாஸிஸ்ட். விஷி சர்க்காரின் உத்தரவுப்படி ஜெர்மானிய பாஸிஸ்டுகளை வரவேற்க, அவன் ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தான். பிரிட்டிஷ் படைகளும், சுதந்தரப் பிரெஞ்சுப் படைகளும், ஸிரியா, லெபனன் ஆகிய இரு நாடுகளுக்குள் புகுந்து பாஸிஸ்டுகளைத் துரத்தின.

லெவான்ட் நாடுகளின் கோரிக்கைக்குச் சுதந்தரப் பிரெஞ்சுத் தற்காலிக சர்க்கார் அடிபணிந்ததும், 1941-ம் வருடம் திரும்பவும் லெவான்ட் நாடுகளின் சுதந்தரத்தை ஊர்ஜிதம் செய்தது. பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்கள் இதை எதிர்த்தன. பிரான்ஸ், தனது ஏகாதிபத்தியத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று இவை வற்புறுத்தின.

1942-ம் வருடம் ரோமலின் படைகள் எல் அலமீனில் படுதோல்வியுற்றன. மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில் பாஸிஸ்டுகளின் அபாயம் அறவே ஒழிந்தது. பிரிட்டிஷ் படைகளோ, பிரெஞ்சுப் படைகளோ, லெவான்ட் நாடுகளில் இருக்க வேண்டிய அவசியமே கிடையாது. பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகளை உடனே வாபஸ் வாங்க வேண்டுமென்ற கிளர்ச்சி வலுத்தது. 1943-ம் வருட இறுதியில் இந்தப் போராட்டம் உச்ச நிலையை அடைந்தது. நவம்பர் மாதத்தில் மாஜி விஷி கவர்னர் ஜெனரல் எம். ஹெலியூ, லெபனன் குடியரசின் தலைவரையும் ஏனைய உத்தியோகஸ்தர்களையும் திடீரெனக் கைது செய்து, சட்ட சபையைக் கலைத்துவிட்டான். நாடெங்கும் பொது வேலை நிறுத்தங்களும், கை கலந்த போராட்டங்களும் நடந்தன.

ஆல்ஜியர்ஸிலிருந்த சுதந்தரப் பிரெஞ்சு இடைக்கால சர்க்கார் ஜெனரல் காத்ரூவை அனுப்பிற்று. ஜெனரல் காத்ரூ ஹெலியூவையும், ஏனைய பாஸிஸடுகளையும் அதிகாரத்திலிருந்து விலக்கி, கைதுசெய்யப்பட்டிருந்தவர்கள் அனைவரையும் விடுதலை செய்தார். லெபனன், ஸிரியாவோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு, பல சலுகைகளை அளித்தார். பூரண சுதந்தரமளிப்பதாகத் திரும்பவும் உறுதி கூறிய போதிலும், பிரெஞ்சு, பிரிட்டிஷ் படைகளை வாபஸ் வாங்குவது பற்றிச் சமரசமேற்படவில்லை.

ஹிட்லர் ஜெர்மனி தோற்றுப் போன பின்பு, முன்னைவிடப் பன்மடங்கு சக்தியோடு, திரும்பவும் சுதந்தரப் போராட்டம் 1945-ம் வருடம் மே மாதத்தில் வெடித்தது. ஆர்ப்பாட்டங்களும், பொது வேலை நிறுத்தங்களும் நடந்தன. பல இடங்களில் கை கலந்த போராட்டங்கள் நடந்தன.

இந்தோ சீனாவில், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட இன்று பிரான்ஸுக்குப் படைகளைக் கொடுத்து உதவி வரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், லெவான்ட் நாடுகளின் சுதந்தரத்

திற்காக முதலைக் கண்ணீர் வடித்தது. ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதை நமக்குத் தெரியும். "பிரெஞ்சுப் படைகள் போராட்டத்தை உடனே நிறுத்த வேண்டும்" என்று சர்ச்சில் உறுமினர். எதற்காக?

நீலிக் கண்ணீர் வடித்து, லெவான்ட் நாடுகளின் நண்பனைக நடித்து, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைத் துரத்திய பின்பு, லெவான்ட் நாடுகளில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் நுழையச் சூழ்ச்சி செய்தார்கள். அதாவது, பிரான்ஸுக்குச் சொந்தமான மொஸீல் எண்ணெய்க் கிணறுகளையும், டிரிபோலியிலுள்ள எண்ணெயைச் சுத்தம் செய்யும் தொழிற்சாலைகளையும், ஹைபா-டிரிபோலி ரெயில்வேயையும் பிரிட்டிஷ் முதலாளிகள் விழுங்கச் சதி செய்தார்கள்.

இந்தப் போராட்டத்தின் விளைவாக, லெபனனும், ஸிரியாவும் பல சலுகைகளைப் பெற்றன. பிரெஞ்சு ஏகாதிபத்தியம் சுதேசப் படைகளை வைத்திருந்தது. (நமது நாட்டு இந்திய ராணுவத்தைப் போன்றவை.) இவைகள், பிரெஞ்சு அதிகாரிகளின் தலைமையில் இருந்தன. இப்பொழுது, இவைகள் லெவான்ட் சர்க்காரின் தலைமையில் இருக்கின்றன. ஆயினும், பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகளை வாபஸ் வாங்க மறுத்தன. லெவான்ட் நாடுகளில் நடந்த போராட்டத்தை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மேலும் மேலும் படைகளைக் கொண்டு வந்து குவித்தது.

லெபனனும், ஸிரியாவும் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கின்றன. ஒரு சுதந்தர நாடென்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆயினும், படைகளை உடனே வாபஸ் வாங்காமல், 1945-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் பிரிட்டனும், பிரான்ஸும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன. அதாவது, லெவான்ட் நாடுகளைத் தர்மகர்த்தா ஸ்தாபனத்தின் நிர்வாகத்தில் சேர்த்துக்கொள்வது என்று ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் முடிவு செய்கிற வரையிலும், பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகள் லெவான்ட் நாடுகளில் இருக்குமாம்! எப்பொழுது துருப்புகள் வாபஸ் வாங்கப்படும் என்பது பற்றி, கால வரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. இந்த ஒப்பந்தத்தில் ஸிரியாவும், லெபனனும் கலந்துகொள்ளவே யில்லை.

இதில், இன்னொரு வேடிக்கையென்னவென்ருல், இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் பிரசுரிக்கப்பட்டதுதான் தாமதம், உடனே, பிரிட்டனுக்கும், பிரான்ஸுக்குமிடையே தகராறு தலைதூக்கி யிருப்பதாகப் பத்திரிகைகள் பத்தி பத்தியாக எழுதின. டிசம்பர் மாத இறுதியில் "மோண்டி" என்ற பிரெஞ்சுப் பத்திரிகை, பிரிட்டிஷ் படைகள் பாலஸ்தீனத்திற்குள் வாபஸாகா வென்றும், ஸிரியாவிலிருந்து, லெபனனுக்குத்தான் வாபஸாகுமென்றும் எழுதிற்று.

சமீபத்தில் நடந்த பாதுகாப்பு ஸ்தாபனத்தின் கூட்டத்தில் பிரிட்டிஷ் பிரெஞ்சுப் படைகளை ஒரே காலத்தில் உடனே வாபஸ் வாங்க வேண்டுமென்று ஸிரியா லெபனன் பிரதிநிதிகள் கோரினர்கள். ஸோவியத் யூனியனின் பிரதிநிதி ஆண்ட்ரே விஷின்ஸ்கி இந்தப் பிரேரபணையை ஆதரித்

தார். "ஸிரியாவும், லெபனனும் விடுத்திருக்கும் கோரிக்கைகளை ஸோவியத் யூனியன் பரிபூரண மாக ஆதரிக்கிறது. பாதுகாப்பு ஸ்தாபனம் நிர்ணயிக்கும் குறிப் பிட்ட கால வரையறைக்குள் பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகளை ஒரே காலத்தில் வாபஸ் வாங்க வேண்டும். இந்தப் படைகள் லெவான்ட் நாடுகளில் இருப்ப தற்கு யாதொரு காரணமும் கிடையாது," என்று ஸோவியத் பிரதிநிதி விஷின்ஸ்கி பாதுகாப்பு ஸ்தாபனத்தின் கூட்டத்தில் இடி முழக்கம் செய்தார்.

ஏனைய நாடுகள் லெவான்ட் நாடு களின் கோரிக்கையை ஆத ரிக்கவில்லை. எனவே, பாதுகாப்பு ஸ்தாபனம் லெவான்ட் நாடுக ளின் கோரிக்கையை நிராகரித்து விட்டது. பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியங்கள், லெவான்ட் நாடுகளிலிருந்து சில பிரத்தியேக உரிமைகளைப் பெற்ற பின்புதான் துருப்புகளை வாபஸ் வாங்குவோ மென்று வறட்டுப் பிடிவாதம் செய்கின்றன. பழைய சுரண்டு தலைத் தொடர்ந்து நடத்தலாம் என்று கனவு காண்கிறார்கள். ஏகாதிபத்தியங்களின் இந்தப் போக்கு, பகற் கனவு தான்.

ஆனால், புதிய உலகம் மலர்ந் திருக்கிறது. இந்தோ சீனாவி லிருந்து கெய்ரோ வரையிலும் பிரம்மாண்டமான சுதந்தரப் போராட்டம் நடக்கிறது. ஏன், அராபிய நாடுகளிலேயே, சுதந் தர எரிமலைகள் வெடித்திருக் கின்றன. ஏகாதிபத்தியங்களுக்கு இறுதி விடையளிக்கும் நாள் வெகு தூரத்திலில்லை. லெபனன், ஸிரியா மக்கள் ஏனைய முற் போக்குச் சக்திகளின் ஆதர வோடு, விரைவில் சுதந்தரத்தைப் பெறத்தான் போகிறார்கள் என் பதில் சந்தேகமே யில்லை.

*

இன்ப தத்துவம்

பழங்காலத் தத்துவ ஞானிகள், இன்பத்தைப் புறப்பொருள் எல்லா வற்றினின்றும் அறவே பிரிந்து தனித்து நிற்கும்படி செய்ய முயன்றார்கள். இது சாத்திய மல்ல. ஆனால், புத்திசாலியான மனிதன் தன்னைச் சார்ந்து நிற்கும் பொருள்களிலேயே இன்பத்தைக் காண முயல்வான். மனித உணர்ச்சி மூலமாக அல்லாமல் வேறு எந்த வகையாலும் இது சாத்திய மல்ல.

—டேவிட் ஹ்யூம்

உயர்ந்த மதிப்பு

உபயோகமா யிருப்பதை விட அருமையா யிருப்பதாலேயே ஒன் றின் மதிப்பு பெரும்பாலும் உயர்கிறது. சாதாரணமாக அலட்சியம் செய்யப்படும் பொருளே, அளவில் குறைந்து விடும்போது மதிப்பில் உயர்ந்து விடுகிறது. 'இதற்கு மேல் கிடைக்காது' என்ற நிலை வரும் வரை நம்மிடம் உள்ளவற்றின் உண்மை மதிப்பை நாம் அறிவதில்லை.

— சாமுவேல் ஜான்சன்

மேதையின் ஆரம்பம் : நாகரிகத்தால் பண்பட்ட காலத்தில் கல்வி இன்றியமையாததுதான். என்றாலும், மேதை என்று சொல்லக்கூடிய எதையும் அந்தக் கல்வி வளர்ப்ப தில்லை. கல்வியின் முடிவே அனேக மாக மேதையின் ஆரம்பமாக இருக்கிறது.

— ஐசக் டிஸ்ரேலி

திட்டமும் செயல் அமைப்பும்

நீலா மஜும்தார்

ஒரு திட்டம் என்றால், எப்போதும் அதற்கு இரண்டு பக்கங்கள் இருக்கும். அவை, முறையே திட்டம் பற்றிய கொள்கை விவரிப்பு என்றும், அத் திட்டத்தைச் செயல் நடத்தும் நிர்வாக இயந்திரத்தின் அமைப்புப் பற்றிய விவரங்கள் என்றும் கூறலாம். ஒரு நல்ல திட்டம் குறிப்பிட்ட கால வரையறைக்குள் நிறைவேறுவதே திட்டமிடும் திறமையின் சாரமாகும். ஒரு திட்டம் மிகச் சிறந்ததாக இருக்கலாம். ஆனால், உருவான முறையில் அதனை நிறைவேற்றத் தக்க குறிப்பிட்ட அமைப்பு முறை இல்லையானால், அத் திட்டத்தால் பயன் ஏதும் விளையாதென்பது திண்ணம்.

பல்வேறு திட்டங்களை நிறைவேற்றும் விஷயமாக நிர்வாக அமைப்பு முறைகளைப் பற்றிப் பொதுவாகக் கவனிக்கலாம். அதனால், நல்ல பயன் உண்டாகும். திட்டங்களைச் செயல் நடத்துவது பற்றிச் சில தலைவர்கள் சிந்தித்து வருகிறார்கள். ஆனால், திட்டத்தைப் பற்றிக் கவனிக்கிறார்களே தவிர, திட்டமிடுவதைப் பற்றியே அவர்கள் யோசிப்பதில்லை. திட்டம், திட்டமிடுதல் இவற்றிடையே நுண்ணிய வித்தியாசம் இருக்கிறது. திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட பொருள் சம்பந்தப்பட்ட விஷயப் பரிசீலனை யாகும். ஆனால், திட்டமிடுதல் என்பது திட்டம், அதன் நிர்வாக அமைப்பு முறை இரண்டையுமே பின்பற்றி நிற்கும் ஒரே பொருளின் இரண்டு அம்சங்களாகப் பார்ப்பதாகும்.

பிரிட்டிஷார், இந்தியாவில் அவர்கள் போட்ட திட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள். நம் முடைய திட்டங்களை நாம் நிறைவேற்றுவது எப்படி? கன்கார்ட் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையில், ஆசிரியர் இதற்கு வழி கூறுகிறார். இது அதன் சாரம்.

அமைப்பு முறை என்பது ஒரு சாஸ்திரம் மட்டு மல்ல. அது ஒரு கலையுமாகும். உருப்படியான அமைப்பு முறையை ஸ்தாபிப்பதில் சில குறிப்பிட்ட கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். இவை எந்தத் தேச முன்னேற்ற திட்டத்திற்கும் அத்தியாவசியமானவை என்று நான் கருதுகிறேன். தேச நலன்களில் பற்றுக் கொண்ட தலைவர்கள் இந்த விஷயத்தைப் பற்றி ஊன்றிச் சிந்திக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

பிரிட்டிஷார் 150 வருஷ ஆட்சிக் காலத்தில் தங்களுக்கென ஓர் ஆட்சி முறையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். வரி வசூலித்தலும், சட்டம், அமைதியை நிலை நாட்டுவதுமே அவர்கள் ஆட்சி முறையின் பிரதான நோக்கங்கள். உண்மையில், பிரிட்டிஷ் ஆட்சி ஒரு போலிஸ் மனப்பான்மை கொண்ட ஆட்சி முறைதான். அதிகார அமுல்தான் அதன் குறி. அதில் சமூக நலன்களுக்கோ, மக்களின் முன்னேற்றத்திற்கோ இடம் இல்லை. இத்தகைய ஆட்சி முறையில் சில தனிப்பட்ட அம்சங்களைக் காணலாம். அதிகாரம், அடக்கு முறை

இவற்றின் அடிச் சுவட்டில் இயங்கிய பிரிட்டிஷ் ஆட்சி முறையின் விசேஷ அம்சங்களும் அத்தகைய ஆட்சிக்கு அனுசரணை யாகவே அமைந்தன. ஆடம்பரம், அதிகச் சம்பளம், அளவற்ற அதி காரங்கள் இவற்றால் மக்களி டையே பிரமாதச் செல்வாக்கை அனுபவித்து வந்த ஓர் உரிமை பெற்ற வகுப்பை இது சிருஷ் டித்து விட்டது. அளவு கடந்த அதிகாரங்கள் இருக்கும் வரை தான் ஒரு போலிஸ் அரசாங்கம் இயங்க முடியும்.

பிரிட்டிஷ் ஆட்சி முறையின் தனிச் சிறப்பியல்புகள் எட் டாகும்:

1. ஒரு சிலரிடமே ஏராளமான அதிகாரம் தங்கி யிருப்பது.

2. அதிகார ஏணியின் முதற் படிக்கும் கடைசிப் படிக்கும் இடையே வேற்றுமை காட்டும் கணக்கற்ற படிகள் இருப்பது.

3. உயர்ந்த உத்தியோகம் வகிப்பவர்கள், எளிய உத்தியோ கம் வகிப்பவர்கள், இவர்களுக் கிடையே சம்பள விஷயத்தில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் காணப்படுவது.

4. மேலேயும் சரி, மத்தியிலும் சரி, நிர்வாகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு இடையே சரி யான ஒத்துழைப்பு இல்லாமை.

5. எதற்கும் வளைந்து கொடுக் காத, சிறிதும் விட்டுக்கொடாத, முரட்டுப் பிடிவாதம்.

6. எதிலும் ஒருமை உணர் வில்லாமை.

7. ஆள்வோருக்கும் ஆளப்படு வோருக்கும் இடையே உள்ள நீண்ட பிளவு; உயர்தர அதிகாரி கள் மக்களோடு நெருங்கிப் பழ காமல், எட்ட நின்று தம் அதிகா ரங்களை அமுல் நடத்துகிறார்கள்.

8. எல்லாவற்றுக்கும் மேலாக, வெள்ளையர் சொல்வதே வேதம், பிறர் சொல்வதெல்லாம் பேத்தல் என்ற மனோபாவம்.

பிரிட்டிஷ் ஆட்சி முறையின் எந்தப் பகுதியை ஆராய்ந்தாலும், ரயில்வே, தபால் இலாக்கா, போலிஸ், நீதி மன்றம் போன்ற எந்த இலாக்காவை எடுத்துக் கொண்டாலும், மேலே கூறிய எல்லா அம்சங்களும் அப்படியே பொருந்தி யிருப்பதைக் காண லாம். மனித முன்னேற்றத்திற் காக—சமூக நன்மைக்காக— அவை சாதித்ததென்ன என் பதை என்னால் கூற முடியாது. ஆனால், எந்த நோக்கங்களோடு ஆட்சி முறை ஆரம்பிக்கப்பட் டதோ, அவ்வித நோக்கங்கள் பூரணமாக நிறைவேறியுள்ளன.

சமீப காலமாக நாட்டில் ஏற் பட்டு வரும் புது மாதிரியான நிலைமைகளைச் சரிவரச் சமாளிக்க இந்த ஆட்சி முறைக்குத் திறமை போதாது என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது. வங்கப் பஞ்சத்தை எடுத்துக் கொள்ளுங் களேன். சர்க்கார் இவ் விஷயத் தில் நடந்துகொண்ட விதம் எல் லாருக்கும் தெரியும். உணவுப் பொருள்கள் வினியோகத்திலும் ஊழல்தான்!

நிர்மாணத் திட்டங்களை அமுல் நடத்த மக்கள் நன்மையைக் கோரும் பொதுஜன அரசாங்கத் தால்தான் இயலும். அத் தகைய அரசாங்கத்திற்கு இருக்க வேண்டிய சிறப்பான அம்சங் கள் எவை என்பதை இனிப் பார்ப்போம்.

ஆக்க முறையில் இயங்கும் நிர்வாகம் ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டுமோ, குறிப்பிட்ட ஒரு சிலவற்றைப் பற்றி மட்டுமோ தான் சிரத்தை கொள்ளவேண்டும் என்பது சரியல்ல. இக் காலத்திய அரசாங்கம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் மிகப் பலவாகும். அரசாங்கத்தின் தன்மைக்கும், அதன் தொழில் முறைத் தேவைகளுக்கும் தக, கூடுமானவரை அதிகமான இலாக்காக்களை ஏற்படுத்துதல் எப்போதுமே நல்லது. இலாக்காக்களின் நிர்வாகிகள் அனைவருக்கும் ஒரே மாதிரியான காரியப் பற்றும், செயல் ஊக்கமும் இருத்தல் அவசியம். ஒருமுகப் பட்ட நிலையை விட, நெருங்கிய ஒத்துழைப்பே அத்தியாவசியமாகும். இன்னின்ன இலாக்கா இன்னின்ன விஷயங்களைக் கவனிக்க வேண்டும் என்று, இலாக்காக்களையும் அவற்றின் வேலையையும் தெளிவாக வரையறுத்து விடவேண்டும். பல்வேறு இலாக்காக்களிடையேயும் நிலையான தொடர்பு இருக்க வேண்டும். சாதனங்களிலும், உத்தியோகஸ்தரிடமும் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.

திறமை ஒன்றே நிர்வாகத்தின் குறிக்கோளாயிருக்க வேண்டும். அதற்கு வசதி செய்வதாயிருந்தால் ஒழிய, அதற்கு உண்மையிலேயே தேவையாயிருந்தால் அல்லாமல், நிர்வாகத்தில் அனாவசியமாகத் தாராதரங்களைச் சிருஷ்டிப்பது விரும்பத்தக்கதல்ல. ஒரேமாதிரிக் காரியங்களைக் கவனிப்பதற்காகப் பலவித உதவி அதிகாரிகளை ஏற்படுத்துவதைவிட, பலவிதக் காரியங்களைக் கவனிக்க ஒரேவித அதிகாரம் படைத்த நிர்வாகிகள் இருப்பது நல்லது.

ஒரே அளவு அதிகாரம் உள்ளவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, அந்த நிர்வாகத்தின் திறமையும் அதிகரிக்கிறது.

ஓர் உயர்ந்த அதிகாரிக்கும் எளிய உத்தியோகஸ்தனுக்கும் சம்பள விஷயமாக நிலவும் வித்தியாசம் எவனையும் மலைக்கச் செய்வதாயிருக்கிறது. கணித பூர்வமாக அவர்களின் சம்பள வித்தியாசம் 4000 : 1 என்ற விகிதத்தில் நிற்கிறது!

இத்தகைய சம்பள விகிதம் அறிவுக்குச் சற்றும் ஒவ்வாதது—முற்றும் அநீதியானது. வாழ்க்கைக்குப் போதிய வருவாய் இல்லாது போனால், உத்தியோகஸ்தரிடையே மனக் கசப்பும், வேலையில் வெறுப்பும் உண்டாகிறது. அதனால், அவர்களின், ஏன், நிர்வாகத்தின் பொதுத் திறமையும், பாதிக்கப்படுகிறது. இதைத் தவிர, வருவாய் ஜீவனத்திற்கும் போதாமல் போகும்போது, உத்தியோகஸ்தரிடையே லஞ்சப் பழக்கம் தலை விரித்தாட ஆரம்பிக்கிறது.

எத்தகைய எளிய உத்தியோகஸ்தன் என்றாலும், அவனுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் அவனுடைய குடும்ப ஜீவனத்திற்குப் போதுமானதாய் இருக்கவேண்டும். எக் காரணங் கொண்டும், எந்த மிக உயர்ந்த அதிகாரியின் சம்பளமும், மிக எளிய உத்தியோகஸ்தனின் சம்பளத்தைப் போல் பத்துப் பங்கிற்கு மேல் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடில், அனாவசியமாக மனக் கசப்பும் துவேஷமுமே அதிகரிக்கும். சம்பள நிர்ணய விஷ

யத்தில், ஒரு பதவியின் தகுதியையும் அதன் முழுப் பொறுப்புக்களையுமே அடிப்படையாகக் கொள்ள வேண்டும். ஜாதி, மத, நிற பேதங்கள் இவ் விஷயத்தில் தலை காட்டக் கூடாது. திறமையை—யாரிட மிருப்பினும், அதை எங்கே கண்டாலும்—உள்ளபடி உணர்ந்து போற்றுவதோடு, உருவான முறையில் ஆக்கமும் ஊக்கமும் அளித்து, அது பூரணமாகச் செயலில் பயன்படும்படி செய்வது மிக முக்கியமாகும். குறைந்த காலத்தில் சிறந்த காரியங்களைச் சாதிக்க வேண்டுமாயின், இனி ஏற்படப் போகும் எல்லாவித நிர்வாக அமைப்பு முறைகளிலும் மேற்கூறிய அம்சங்கள் பூரணமாக அமைந்திருக்க வேண்டும்.

ஒன்றோடொன்று தொடர்புள்ள எல்லா இலாக்காக்களும் ஒரே தொகுப்பாக ஆக்கப்பட வேண்டும். இத்தகைய தொகுப்புக்கள்பின்னும் உயர்ந்த தொகுப்புக்களாக ஒன்று சேர்க்கப்பட வேண்டும். போலிஸ் இலாக்காவிலும் அதிகாரிகள் தனித் தனி நிலைமையில் வேலை செய்வதை விடக் கூட்டுறவு முறையில் சேர்ந்து உழைப்பது நல்லது. இந்தக் காலத்திய நிர்வாக முறைக்கு இரகசிய இலாக்காக்களும் தனித்து இயங்கும் இலாக்காக்களும் ஒத்து வரா.

உயிருள்ள எல்லா நிர்வாகங்களிலும், பதவியி லிருப்போர் விரிந்த மனமும், விஷயங்களை அறிந்து அதற்குத் தக நடக்கும் சக்தியும், சரியான முடிவுக்கு வரும் திறமையும் கொண்டவர்களா யிருக்கவேண்டும். தாங்கள் செய்யும் முடிவுகள் நிர்வாகத்தின் முயற்சிகளின் நிறையையும் தரத்தையும் உயர்த்துவனவாய் இருக்குமா என்பதை அதிகாரிகள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். நிர்வாகத்தின் எந்த விஷயத்தையும் முடிவு செய்வதில் அந்த நிர்வாகத்தின் மொத்தச் சக்தியை—பலத்தை—அதிகரிப்பது ஒன்றே நோக்கமா யிருக்கவேண்டும்.

தேச நலன்களை வளர்க்கும் கழகங்களுக்கும் மக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். தங்கள் செய்கையில் உயிரும் வேகமும் குன்றுதிருக்க, நிர்வாகங்கள் பொதுஜன ஆதரவுகொண்ட கழகங்களின் ஒத்துழைப்பையும் ஆலோசனையையும் நாடுவது நல்லது.

*

பணியாரக் குண்டு

புகழ்பெற்ற ஜெர்மன் விஞ்ஞானி ருடால்ப் விர்க்கோ, ஜெர்மன் சான்சலர் பிஸ்மார்க்கின் திறமையைப் பற்றிப் பழித்தார். கோபமடைந்த பிஸ்மார்க் விஞ்ஞானியைச் சண்டைக்கு அழைத்தார்.

"நீங்கள் தான் சண்டைக்கு அழைக்கிறீர்கள். அதனால், ஆயுதந் தேர்ந்தெடுக்க எனக்குத்தான் உரிமையுண்டு. இதோ, என் ஆயுதங்கள்!" என்று கூறி, மேஜைமேலிருந்த ஒரே மாதிரிப் பணியாரங்கள் இரண்டை அவர் முன்னால் எடுத்து வைத்துவிட்டு, "ஒன்று விஷமிட்டது. மற்றது நல்லது. மாட்சிமை தங்கிய சான்சலர் அவர்கள் எதை வேண்டுமானாலும் உண்ணலாம். எஞ்சியதை நான் தின்கிறேன்" என்றார்.

ஒரு மணி நேரத்தில், இரும்பு மனம் படைத்த பிஸ்மார்க் சமாதானமாய் விட்டார்.

—எவ்ரிபடீஸ் வீக்லி.



களைப்பை போக்குகிறது!

உத்ஸாகத்தை அளிக்கிறது!

வினோலியா உபயோகித்து ஸ்நானம் செய்தால் குளிர்ச்சி உண்டாகும் போது நீங்கள் ஏன் வெப்பத்தினால் கஷ்டப்பட வேண்டும். இந்த சோப்பின் வெண்ணிரம் வாய்ந்த நுரை உங்களை சுத்தமாக்கும் பொழுது ஏன் வியர்வையுடன் இருக்கவேண்டும். வினோலியா சோப்பின் வாசனை சுறுசுறுப்பையும், உத்ஸாகத்தையும் உண்டுபண்ணி, மனதிற்கு சுகத்தையும் அளிக்கிறது.

வினோலியா ஒயிட் ரோஸ் ஸோப்பு

VWR. 17-50 TM — VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND

சோஞல்	பயோ-சரசா
	IODISED SARASAPARILLA ரத்த சுத்தி திராவகம்
படை, சொறி சிரங்கு, முகப் பரு, சேற்றுப்புண், கரப்பான், வேனல் கட்டி, தீப்பட்ட ரணம் முதலிய சர்ம ரோகங் களுக்கும் சிறந்த களிம்பு.	துர்நீர் சம்மந்தமான சொறி சிரங்கு, கட்டி, மேகப்பத்து, கரப்பான் முதலியவைகளுக் கும், வெட்டை சம்மந்தத்தால் ஏற்படும் கை, கால், இடுப்பு வலி கள், பிடிப்பு, பக்ஷவாதம், மொழி சூலை முதலிய சகல வியாதி களுக்கும் சிறந்த மருந்து. பாட்டில் 1-க்கு விலை 2-8-0

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

ஏஜண்டுகள்

T. N. C. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ்

மருந்து ஷாப் : : மதுரை

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

சாரதி

கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

வெகுமதி

பிரேம் சந்த்

துக்கீ, ஜாதியில் சக்கிலியன். தன் வீட்டு வாசலை அவன் பெருக்கிக்கொண்டிருந்தான். அவன் பெண்சாதி ஜுரியா வீட்டைச் சாணமிட்டு மெழுகிக்கொண்டிருந்தாள். கை வேலை முடிந்ததும், ஜுரியா தன் புருஷனருகில் சென்று, "அய்யா கிட்டே போய்ச் சொல்லி விட்டு வா. அவரு எங்கனாச்சும் வெளியே கிளம்பிப் போயிடப் போறாரு" என்று கூறினாள்.

"கூப்பிட்டாறது இருக்கட்டும். அவரு வந்தாருன்னா எங்கே குந்துவாருங்கறேன். சேரிக்கு வெளியே அவரு குந்திக்க எதினாச்சும் செய்ய வாண்டாமா?" என்று துக்கீ கேட்டான்.

"எங்கிருந்தாச்சும் ஒரு கவுத்துக் கட்டிலு வாங்கியாந்து போட்டாப் போச்சு. நம்ம எசமான் வூட்டிலேந்து வாங்கியாயேன்."

"நல்லாச் சொன்னியே! எசமான் கட்டிலுக் குடுப்பாரா? தீ கூட தரமாட்டேங்கறாங்களே! கட்டிலா குடுப்பாரு? கொல்லைக் கெணத்திலேந்து தாவத்துக்குத் தண்ணி எடுத்துக் கூடக் குடிக்கப்புடாதுங்கறாங்க.....கட்டிலு தரவே மாட்டாங்க. ஆமா... அய்யமாரெல்லாம் நம்ப வூட்டுலேந்து வருட்டி, உமி எல்லாம் வாங்கிக்கிறாங்களே! நம்ம வூட்டுக் கவுத்துக் கட்டிலே நனைச்சுப் போட்டுட்டா, வெய்யில் நாளு தானே, காஞ்சு போவுது! என்னா நான் சொல்றது?"

"அவுங்க எல்லாம் நம்ம வூட்டுக் கட்டில்லே குந்தவே மாட்டாங்க. அவுங்கல்லாம் தருமமா நடக்கறவங்க. நம்ம குந்தத்தான் சொல்லலாமா?"

துக்கீ, சிறிது யோசனையுடன், "நீ சொல்றது சரித்தான்...அதிருக்கட்டும்...ஆல எலை பறிச்சு எலை தச்சு வச்சிடுவோம். அதுக்குத் தீட்டுப் பாக்க மாட்டாங்க. அலக் கரிவாளை எடுத்தா," என்றான்.

"நான் எலை தச்சூடறேன். அவருக்கு அரிசி, பருப்புச் சாமான் எல்லாம் கொடுக்கணுமே. நம்ம மூங்கித் தட்டுலே வச்சூடலாமில்லே?" என்று ஜுரியா கேட்டாள்.

"அப்படி வைக்கக் கூடாது. கோவிச்சுக்குவாரு. அவரு கோவிச்சுக்கிட்டா நம்ம குடி கெட்டுடும். கோவம் வந்திச்சின்னா, அந்த அம்மா குளந்தையைக் கூட லச்சியம் செய்ய மாட்டேங்கறாரு. நானு சொல்றதைக் கேளு. நம்ம ஆண்டே மகனுக்கிட்டே சொல்லிச் சாமானை வாங்கி, எலையிலேயே வச்சிரு. நீ தொட்டுடாதே. என்னா! கால் ரூவாக் காசும் அதோடே வச்சீடு. நீ தொட்டுடாதே எதையும். ஆமா—சாக்கிரதை!"

கதை, பழைய கதைதான். ஆனால், இன்னும் கதைக்கோள் தொலைந்தபாடில்லையே. புரோகித பக்திக்குப் பலியான எண்ணற்றவர்களில் துக்கியும் ஒருவன். இந்தக் கதை, ஆசிரியரின் அனுமதியுடன் வெளியிடப் பெறுகிறது. ஸ்ரீ ரா. வீழிநாதன் மொழி பெயர்த்தது.

தன் பெண்சாதிக்கு இப்படி உபதேசித்து விட்டு, பஞ்சாங்கக்கார அய்யரைக் கூப்பிட்டு வருவதற்காக, தலையில் ஒரு பெரிய புல் கட்டுடன் கிளம்பினான் துக்கீ. ஐயர் வீட்டுக்கு வெறுங் கையோடு போகலாமா? அதனால் தான், பெரும் புல் கட்டுடன் சென்றான் அவன். ஒன்றும் கொண்டு போகாமல் போனால் ஐயரும் திட்டுவார்.

பண்டித காசிராம் மகா பக்தர். தூக்கம் கலைந்ததும் ஈச்வர பஜனைக்கு ஆரம்பிப்பார். பிறகு, காலைக் கடனைத் தீர்த்துக் கொண்டு, எட்டு மணி சுமாருக்குப் பூஜையறைக்குள் நுழைவார். முதல் அங்கமாக, வயிற்றுச் சாமியின் பசிக் கொடுமையைத் தீர்ப்பதற்காக ஒனறரைச் சேருக்கு அதிகமாய் நல்ல காப்பி அங்கே காத்து நிற்கும். அதை அருந்திய பின்னர், சந்தனம் அரைக்க ஆரம்பிப்பார். ஒரு சிறு ஈர்க்குச்சியையும் கண்ணாடியையும் எடுத்து வைத்துக் கொண்டு சந்தனம் இட்டுக் கொள்ள ஆரம்பித்தால், நேரம் போவது தெரியாமல் போய் விடும். நெற்றியில் அழகிய பிறைச் சந்திரன் பிரகாசிப்பான். அவனுக்கு மத்தியில் அழகிய குங்குமப் பொட்டு கண்ணைச் சிமிட்டும். கை, மார்பு, வயிறு இவைகளுக்குச் சந்தன அலங்காரம். இதற்கெல்லாம் கிட்டத்தட்ட ஒருமணி நேரம் பிடிக்கும். பிறகு, பூஜா விக்ரகங்களை எடுத்துத் தாம்பாளத்தில் வைத்தல், அவைகளுக்கு அபிஷேகம் செய்தல், சந்தனம் இடுதல், அர்ச்சனை, தீபாராதனை, நைவேத்தியம், மணியோசை முதலியவை வெகு பலமாக நடக்கும். அவருடைய பூஜை முடிவதற்குக் கிட்டத்தட்டப் பத்து மணி யாகி விடும். பூஜையை முடித்துக் கொண்டு வாசல் திண்ணைக்கு வந்தாராகில், அவரை அழைத்துப்போவதற் கென, யாராவது வந்து காத்திருப்பார்கள். பண்ணின பூஜைக்குப் பலன் கை மேல் கிட்டிவிடும். அவர் தொழிலும் இதுதான்.

இன்று பூஜை முடிந்ததும், ஒரு கட்டுப் புல்லுடன் வந்திருந்த துக்கீயைக் கண்டார். துக்கீ அவரைக் கண்டதும், எழுந்து சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட்டு, கை கட்டி வாய் புதைத்து நின்றான். கட்டையான பருத்த சரீரம்; வழுக்கைத் தலை; உப்பிய கன்னம்; குங்குமமும் சந்தனமும் சேர்ந்து பிரகாசிக்கும் நெற்றி; பிருமம தேஜஸ் நிரம்பிய கண்கள்; இப்படிப்பட்ட தேஜோ மயமான சிலையைக் கண்டதும், துக்கீயின் மனம் பக்தி பரவசத்தால் நெகிழ்ந்து விட்டது. ஸ்தம்பித்து நின்றான் அவன்.

"எங்கேடா வந்தே? என்ன விஷயம்?'' என்று பண்டித காசிராம் அவனைப் பார்த்துக் கேட்டார்.

துக்கீ, தலை குனிந்த வண்ணமே, "நம்ம பொண்ணுக்குக் கண்ணாலம் செய்யணுங்க. நாளுப் பார்த்தாத் தேவலீங்க. அதுக்காவத் தான் ஒங்களைக் கண்டுக்கிட்டுப் போவ வந்தேனுங்க'' என்றான்.

"இன்னிக்கி வேலை அதிகம். சரிப்படாது. இன்னொரு நாளைக்குப் பார்த்துக்கலாமடா.''

"இல்லீங்க. அப்படிச் சொல்லப்படாதுங்க. எல்லாம் எடுத்து வச்சிருக்கேனுங்க. நேரமாவு

துங்க......புல்லே எங்கே வைக்கட்டுங்க?''

"அதை அந்த மாட்டுக்கிட்டே போடு. மாட்டுக் கொட்டில் ரொம்ப நாளா மொழுகவே யில்லே. கொஞ்சம் சாணம் தெளிச்சு மொழுகி விடு. கொல்லே யையும் கொஞ்சம் சுத்தம் பண்ணிவிடு. அதுக்குள்ளே நான் சாப்பிட்டு விடுகிறேன். அப்புறம் போகலாம். அதோ கொஞ்சம் விறகு கிடக்குப் பாரு. அதையும் ஒடைச்சுப் போடு. இதோ வந்தூடறேன். களைப்பாறி விட்டு வந்தூடறேன். என்ன?'' என்ருர் காசிராம்.

"சரீங்க'' என்று கூறி, துக்கீ அவர் உத்தரவை நிறை வேற்ற முற்பட்டான். கொட்டிலே மெழுகிச் சுத்தம் செய்வதற் குள்ளாகவே மணி பன்னிரண்டடித்து விட்டது. புரோகிதர் போஜனத்திற்குச் சென்று விட்டார். துக்கீ காலையிலிருந்து இதுவரை சாப்பிட வில்லே. அவனுக்குப் பசி வயிற்றைக் கிண்டியது. அவன் எப்படிச் சாப்பிடப் போவது? சேரியோ, அக்கிரகாரத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் இருந்தது. சாப்பிடப் போனுல், புரோகிதர் கோபித்துக் கொள்வார். என்ன செய்வான், பாவம்! பசியைப் புறக்கணித்து விட்டு, விறகு உடைக்க ஆரம்பித்தான்.

விறகோ, முடிச்சு முடிச்சாய் இருந்தது. அதை உடைக்க எத்தனேயோ பேர் தங்கள் தங்கள் பலத்தைப் பிரயோகித்துப் பார்த்திருக்கிருர்கள். அது சிறிதும் அசைந்து கொடுக்கவில்லே. அது இன்னும் அவனே எதிர்த்துப் போராடக் காத்திருந்தது. துக்கீக்குப் புல் அறுத்துப் பழக்கமே தவிர, விறகு உடைத்துப் பழக்கமில்லே. முடிச்சில் குறி வைத்தால், தரையில் போய் விழும் கோடரி. தவறிப் போய் முடிச்சின் மீது கோடரி பட்டாலும், விறகு உடைய வில்லே. கோடரி முனே தான் மழுங்கிற்று. தேகம் வியர்வையால் நனேந்தது. மூச்சு வாங்க ஆரம்பித்தது. சிறிது நேரம் களேத்து உட்காருவான். பிறகு எழுந்து விறகு உடைக்க முற்படுவான். கை வலித்தது. கால் தடுமாறிற்று. இடுப்பு வலி தாங்கவில்லே. கண் இருட்டியது; பூச்சி பறந்தது. இருந்தாலும், தான் எடுத்த கருமத்தில் கண்ணுயிருந்தான். புகைப்பதற்கு ஒரு சுருட்டுக் கிடைத்தால், சிறிது பலமும் உற்சாகமும் ஏற்படும். "இதுவோ அக்கிரகாரம். இங்கே சுருட்டுக் கிடைக்குமா? பிராமணர்கள் தாழ்ந்த வகுப்பினர் களேப் போல் சுருட்டெல்லாம் குடிப்பார்களா, என்ன?'' என்று அவன் மனதில் எண்ணம் ஓடியது. கிராமத்தில் ஒரு கடை உண்டு. அங்கே போனுல் சுருட்டுக் கிடைக்காதா என்ற நம்பிக்கையில் புறப்பட்டான்.

நம்பிக்கை வீணுகவில்லே. சுருட்டுக் கிடைத்து விட்டது. பற்ற வைக்கத்தான் நெருப்புக் கிடைக்கவில்லே. "நெருப்பு இல்லாட்டி வாண்டாம். அய்யா வூட்டிலே வாங்கிக்கிறேன்'' என்று கூறி, புரோகிதர் வீட்டுக் கொல்லேப் புறத்தில் நின்று கொண்டு, "சாமி, கொஞ்சம் தீ இருந்திச் சின்னு குடுங்க'' என்று சத்தம் போட்டான். புரோகிதர் சாப்பிட்டுக்கொண் டிருந்தார். அவர் மனேவி, "யாரு, நெருப்புக்கேக்கிறது?'' என்று கேட்டாள்.

புரோகிதர், "அவன் தாண்டி துக்கீ. விறகு ஒடைக்கச் சொன்

னேன். நெருப்பு இருக்கோல்லியோ? இருந்தால் கொடேன்'' என்றார்.

புரோகிதர் மனைவி, கோபத்துடன், ''நன்னாருக்கு! உங்க புத்தி எங்கே போச்சு! இது பிராமணாள் ஆமா, சத்திரமா? உங்களுக்குப் பாவம் புண்ணியம் ஒண்ணும் கிடையாது. கண்ட கண்ட கீழ்ச் சாதியை வீட்டுக்குள்ளேயே வரச் சொல்லிப்பிடுவேள் போலிருக்கே'' என்று கடிந்து கொண்டாள்.

''போடி, பைத்தியம்! நான் உள்ளே வரச் சொல்லுவேனா! விறகை ஒடைக்கச்சொன்னேன். வேறே யாராவது வந்தான்னா கொறஞ்சது நாலணாவாவது கொடுக்கணும். இப்போ கூலியில்லாமலே நம்ம காரியம் ஆகிறது, தெரியுமா? நெருப்பிருந்தா அவனுக்குக் கொஞ்சங் கொடு'' என்று சமாதானப்படுத்தும் முறையில் புரோகிதர் பதிலளித்தார்.

''நல்ல ஆசாரம்! இந்தத் தடவை கொடுத்துடறேன். இனிமேல் இந்தமாதிரி யெல்லாம் ஆளைக் கொண்டு வந்து விடாதேயுங்கோ.''

துக்கீயின் காதில்அவர்கள் பேசுவது அரை குறையாக விழுந்தது. ''ஒசந்த சாதிக்கார ஊட்டுக்குத் தாழ்ந்த சாதியான நாம்ப எப்படி வரலாம்? அவங்கெல்லாம் புண்ணியஞ் செஞ்சவங்க. அதனாலதான் அவங்களை ஒலகமே மதிக்கிது, பூசிக்கிது. இந்த ஊருலேயே பொறந்து வளந்த எனக்குப் புத்தி எங்கே போச்சு! நானு தீ கேட்டது தப்புத்தானே!'' என்று அவன் மனமே அவனைக் குத்தியது.

புரோகிதரின் மனைவி ஒரு கரண்டியில் நெருப்புடன் கொல்லைப்புறம் வந்தாள். தான் சாக்ஷாத் பரதேவதை தான் என்ற நினைப்பு அவளுக்கு. ''சக்கிலிப் பயல்தானே நானு. புத்தி ஏதுங்க. அய்யமாரு ஊட்டிலே நெருப்பு கேக்கறது தப்புத்தானுங்களே'' என்று கை கூப்பிய வண்ணம் கூறினான். புரோகிதர் மனைவி எழெட்டுக் கஜ தூரத்திலிருந்தபடியே நெருப்புத் துண்டத்தை எட்டி வீசினாள். துக்கீயின் தலையில் போய் ஒரு துண்டு விழுந்தது. அவன் பின்னுக்கு நகர்ந்து சட்டெனத் தலையைத் தேய்த்து விட்டுக் கொண்டான். ''பரிசுத்தமான பிராமணக் குடும்பத்திற்கு இழைத்த அநீதியினால் கிட்டிய பலன் இது'' என்றது அவன்மனம். ''உலகம் பிராமணர்களிடம் பயப்படுகிறதே, ஏன்? அவர்கள் புண்ணியவான்கள்; அதனால்தான். அவர்கள் துரும்பைத் தொட்டால்கூட நம்முடைய குடும்பம் நாசமாகிவிடும்'' என்பதையும் அவன் மனம் ஒத்துக்கொண்டது.

துக்கீ, வெளியேவந்து சுருட்டுக் குடித்துவிட்டு, மறுபடியும் கோடரியை எடுத்து விறகு உடைக்க ஆரம்பித்தான். விறகு உடைக்கும் சப்தம் உள்ளேகேட்டுக் கொண்டேயிருந்தது. அவன் மேலே நெருப்பு விழுந்ததனால், புரோகிதர் மனைவிக்கு அவன் மீது சிறிது இரக்கம் ஏற்பட்டது. புரோகிதர் சாப்பிட்டு எழுந்திருந்ததும், ''அவனுக்கும் ஏதாவது தின்னக் கொடுக்கிறதுதானே! பாவம், காலமே இருந்து பட்டினியாய் வேலை செய்யறான்'' என்றாள்.

''சாதம் இருக்கோல்லியோ? கொடேன்'' என்றார் புரோகிதர்.

"நன்னுருக்கு, நீங்க சொல்றது! சாதத்தைக் கொடுக்கவாவது! சேஷமாப் போயிடாதோ?"

"அப்போ, நொய் இருந்தாக் கொஞ்சங் கொடு."

"நொய்க்கு எங்கே போறது? ஒண்ணும் வேண்டாம், போங்கோ" என்று முற்றுப் புள்ளி வைத்துவிட்டாள் அந்தத் தயாவதி அம்மையார்.

துக்கீ, கோடரியால் விறகு முடிச்சை உடைப்பதில் அரை மணி நேரம் ஈடுபட்டான். பிறகு, களைத்து உட்கார்ந்து விட்டான். அந்தச் சமயம், அவ்வழியே ஒரு பார்ப்பனன் அல்லாதான் போனான். கிழவன் விறகு உடைப்பதைக் கண்டு, "ஏன், கிழவா வீணுக் கஸ்டப்படறே? நீ ஒடைச்சா இது ஒடையப் போவுது?" என்று அவன் கேட்டான்.

துக்கீ, நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு, "கொல்லெயெ வேறே சுத்தம் செய்தாகணும்" என்றான்.

"அது கிடக்கட்டும். இம்மாந் நேரமா வேலே செய்யிறியே! ஏதாச்சும் திங்கக் குடுத்தாங்களா?" என்று அந்தக் குடியானவன் கேட்டான்.

"என்ன ஆண்டே இது, இப்படிக் கேக்கிறீங்க? அய்யா வூட்டுச் சோத்தைத் திங்கலாங்களா?"

"சாப்பிட்டா என்னப்பா! அவங்களும் மனுசன். நாம்பளும் மனுசன். அவுங்க மட்டும் என்ன ஆகாசத்திலேருந்து வந்து குதிச்சிட்டாங்களா? கேக்கிறேன்" என்று அந்தக் குடியானவன் ஆரம்பித்தான்.

"உரக்கச் சொல்லாதீங்க. அவுங்கோ காதுலே விளுந்துடப் போவுது......" என்று கூறிய வண்ணம், கோடரியை எடுத்தான் துக்கீ. கிழவன் துக்கீயின் மீது குடியானவனுக்கு இரக்கம் ஏற்பட்டது. கோடரியை வாங்கி அரை மணி நேரம் முடிச்சை உடைத்துப் பார்த்தான். கோடரி முனை மழுங்கியதே தவிர, முடிச்சு உடையவே இல்லை. கோடரியை விட்டெறிந்து "நீ உடைச்சா இது உடையப்போவுது! நீ உசிரைக் கொடுத்து உடைச்சாலும் இது அசையாது" என்று சொல்லிச் சென்றான் அந்தக் குடியானவன்.

"அய்யாவுக்கு இந்த முடிச்சு வெறகு எங்கேருந்துதான் கெடச்சிச்சோ! கோடாலி முடிச்சிலே புடிச்சாத்தானே! எம்மா நேரமாத்தான் ஒடைக்கிறது? ஊட்டிலே வேலே கெடக்கு. கண்ணுலம் வேறே ஆவணும். இவங்களுக்கு என்ன கவலே? சரி, அய்யரு வாரத்துக்குள்ளே கொல்லெயெச் சுத்தம் பண்ணிடுவோம். நாளேக்கி வந்து கண்டமா வெறகெ ஒடச்சுட்றேன்னு சொல்லி அய்யாவைச் சேரிப் பொறத்துக்கு அளெச்சுக்கிட்டுப் போவோம்" என்று துக்கீ எண்ணினன்.

கொல்லையைச் சுத்தம் செய்வதற்குள் மணி நான்கு அடித்து விட்டது. புரோகிதரும் எழுந்து, கை கால்களை அலம்பிக்கொண்டு, காப்பியருந்தி, தாம்பூலம் தரித்துக் கொண்டு நாலரை மணி சுமாருக்குக் கொல்லேப் புறம் வந்தார். துக்கீ, வாழைச் சருகுகளைத் தலைக்கு உயரமாக வைத்துக் கொண்டு தூங்கிக்கொண்டிருந்ததைக் கண்டார். "டேய்! துக்

கீயா? என்னடா தூக்கம்? வெறகு ஒடச்சபாடில்லே. அதுக் குள்ளே என்னடா தூக்கம்? கொல்லே சுத்தம் பண்றதுக்கே இவ்வளவு நாழியா? நன்னா யிருக்குப் போ. எடுடா கோடா லியை. கொஞ்சம் இருக்கிற வெறகை ஒடைக்கக் காணுமே. ஒடெடா சீக்கிரம்! இப்படி நீ வேலே செய்தேன்னு, நானும் அப் படித்தான் நாள் பார்த்துச் சொல்லுவேன், தெரியுமா? கீழ்ச் சாதிப் பயல்களுக்கு அதான் இடங் கொடுக்கப்படா துங்கறுங்க. இடங் கொடுத்தா, அதுகளுக்குத் தலே கால் புரிவ தில்லே" என்று காரமாகக் கூறி னார்.

துக்கீ, மறுபடியும் கோட ரியை எடுத்தான். அவன் கூற நினைத்திருந்த விஷயங்கள் அடி யோடு மறந்தே போயின. காலேயிலே இருந்து பச்சைத் தண்ணீர் கூடப் பல்லில் பட வில்லே. வயிற்றுப் பசி தாங்க வில்லே. முதுகும் வயிறும் ஒன் ருய் ஒட்டி விட்டன. என்ன செய்வான்? எழுந்திருக்கக் கூடச் சக்தியற்று விட்டான். கை கால்கள் அயர்ந்து விட்டன, மனம் சோர்ந்து விட்டது. கேட் டுக்கொண்டு சோறு தின்னச் செல்லவோ பயம்! அய்யர் நல்ல நாளாகப் பார்த்துச் சொல்லாம லிருந்து விட்டால்...குடிகெட்டு விடாதா! நாள் செய்வதை நல்ல வன் செய்யமாட்டான். உலகை ஆட்டி வைப்பதும் நாள் தானே! நன்ருக வைப்பதும் நாள்தான், கெடுப்பதும் நாள் தான். "அய் யர் நல்ல நாளாப்பார்த்துச்சொல் லணுமண்ணு, நாம்ப வெறகை ஒடச்சிப்பிடணும்" என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு எழுந்தான். புரோகிதர் விறகு முடிச்சை உடைக்கத் துக்கீக்கு ஊக்க மூட்ட ஆரம்பித்தார். "உம்-போடு! இன்னும் ஓங்கிப் போடு ... ஊஹூம் ... இன்னும் ஓங்கிப் போடணும்... உன் கை யிலே பலமே இல்லேடா...இன் னும் சித்தே ஓங்கிப் போடு... என்னடா யோசிக்கிறே... போடுடா ஓங்கி...அந்த இடத் திலேதான்...இன்னும் ஒண்ணு— ஊம்—போடு— அப்படித்தான்... ஒடைஞ்சுடும். போடு...இன்னும் ஒண்ணே ஒண்ணு..."

துக்கீ, தன் சுய அறிவையே இழந்து விட்டான். தென் படாமல், மறைவாய் நின்ற ஒரு சக்தி அவனுடைய கைகளுக்கு ஊக்கம் அளித்தது. களைப்பு, பசி, பலவீனம் எல்லாம் மாயமாய் மறைந்து விட்டன. அவன் கைப் பலத்தைக் காணக் காண அவ னுக்கே ஆச்சரியமா யிருந்தது. கோடரி, நறுக்கு நறுக் கென்று மரத்தில் பாய்ந்தது. அரை மணி நேரம் விறகின் மீது அது விழுந்த வண்ணம் இருந்தது. கோடரி யின் அரை மணி நேரத் தாக்கு தலேயும் விறகு எதிர்த்து நின்று போராடியது. ஆனுல், கடைசி யில் இரண்டாகப் பிளந்து விட் டது. துக்கீயின் கையி லிருந்த கோடரியும் நழுவிக் கீழே விழுந்து விட்டது. அவனும் மயங்கிக் கீழே விழுந்தான். பசி, தாகம், களைப்பு, இவை யெல் லாம் நிரம்பிய உடல் வேறென்ன செய்யும்!

"டே துக்கீ! எழுந்து, இன் னும் இரண்டு மூன்ருகப் பிளந்து விடு. இதோ நான் கிளம்பிவிட் டேன்" என்று புரோகிதர் கூறினர். ஆனல், துக்கீ எழுந் திருக்க வில்லே. "அவனே அதிக மாகத் திட்டி வேலே வாங்குவது

உசிதமில்லே'' என்று எண்ணிப் புரோகிதர் உள்ளே சென்று, அவருக்குரிய தொழில் உடையை அணிந்து கொண்டு, வெளியே வந்தார். துக்கீ அப்பொழுதும் படுத்தபடியே கிடந்தான்.

''டேய், துக்கீ! எழுந்திருடா! உன் வீட்டுக்குத்தான் கிளம்பறேன். எல்லாம் தயாராய் வச்சிருக்கேல்லே? கிளம்பு போவோம்'' என்று உரக்கக் கூவி அழைத்தார். ஆனல், துக்கீ எழுந்திருக்கவில்லே.

புரோகிதருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. சிறிது அருகில் போய்ப் பார்த்தார். துக்கீயின் உடலே விட்டு உயிர் பிரிந்திருந்தது. பொறி தெறிக்க, உள்ளே ஓடினர். மனேவியை அழைத்து, ''துக்கீ செத்து விட்டான் போலே இருக்கு'' என்று நடுக்கத்துடன் கூறினர்.

அவர் மனேவி, பிரமிப்புடன், ''இவ்வளவு நேரம் வெறகு ஒடைச்சிண்டிருந்தானே!'' என்று கேட்டாள்.

''வெறகு ஒடைச்சிண்டிருந்தவன் விழுந்து செத்துக்கிடக்கிருனே! என்ன செய்யறது?'' என்ருர் புரோகிதர்.

அவர் மனேவி, மிகவும் அமைதியாக, ''சேரிக்குச் சொல்லியனுப்பிப் பொணத்தை எடுத்துப் போகச் சொல்லுங்கோ'' என்ருள்.

இந்தச் செய்தி கிராமம் பூராவும் ஒருநொடியில் பரவி விட்டது. அதுவோ, அக்கிரமகாரம். அருகில், ஒரே ஒரு பார்ப்பனன் அல்லாதான் வீடு மட்டுந்தானிருந்தது. ஊர்ப் பொதுக் கிணறும், அவன் செத்துக் கிடந்த இடத்தைத் தாண்டித்தான் இருந்தது. சக்கிலியப் பிணம் கிடக்கும்பொழுது அவ் வழியே ஜலம் எடுத்துப்போவது எப்படி? ஒரு கிழவி ''சீக்கிரம் பொணத்தைக் கொண்டு போக ஏற்பாடு பண்ணுங்கோ. பொணம் கெடக்கிற போது ஜலம் குடிப்பது, கொண்டு போவது எல்லாம் ஆகாது. சீக்கிரம் இழுத்துக் கொண்டு போகச் சொல், பறையைக் கூப்பிட்டு'' என்று கூவினள்.

அதற்கு முன்பே, அந்தக் கிராமத்திலுள்ள பார்ப்பனன் அல்லாதான், சேரிக்குச் சென்று, ''சாக்கிரதை, பொணத்தைத் தூக்கிட்டு வந்திடாதீங்க. போலிசு வந்து விசாரிக்கட்டும். ஒரு ஏழையை இப்படியா வேலே வாங்கிச் சாவ அடிக்கிறது! நல்ல சாதி அது! பொணத்தை எடுத்து வந்தீங்களோ, போலிசு உங்களேயும் புடிச்சுக்கிட்டுப் போயிடும்'' என்று உபதேசம் செய்து விட்டு வந்தான்.

அதற்குப் பிறகு புரோகிதர் சேரிக்குச் சென்று பறையர்களே அழைத்தார். ஆனல், சேரியிலிருந்து எவனும் பிணத்தை எடுத்துப் போகச் சம்மதிக்கவில்லே. துக்கீயின் பெண்சாதியும் பெண்ணும், அடித்துக் கொண்டும் அழுது கொண்டும் புரோகிதர் வீட்டுக் கொல்லேப் புறத்தை அடைந்தார்கள். அவர்களுடன் இன்னும் சில சக்கிலியப் பெண்களும் இருந்தார்கள். புரோகிதர் சேரி மக்களே அதட்டி உருட்டிப் பயமுறுத்திப் பார்த்தார். வேண்டிக் கொண்டு பார்த்தார். அவர்கள் போலிசுக்குப் பயந்து ''வர முடியாது'' என்று சொல்லி

மறுத்து விட்டார்கள். என்ன செய்வார் புரோகிதர்! கடைசியில், நம்பிக்கை இழந்து வீடு திரும்பினர்.

அன்றிரவு பூராவும் புரோகிதர் வீட்டுப் புறக்கடையில் ஒரே அழுகையும் கூக்குரலுமாய் இருந்தது. அதனல், அன்று அக்கிரகாரத்தில் உள்ளவர்கள் தூங்கவே முடியவில்லை. பிணம் தூக்கிச் செல்ல ஒரு சக்கிலியனவது வரவில்லை. என்னசெய்வது? பிராமணர்கள் சக்கிலியப் பிணத்தைத் தூக்கலாமா? அது சாஸ்திர சம்மதமான தல்லவே! ஏதாவது புராணத்தில் எழுதி யிருந்தாலாவது தூக்கலாம்!

புரோகிதர் மனைவி, சிடுசிடுத்துக்கொண்டு, "அந்தப் பிசாசுகள் என்ன சொல்லியும் கேக்கலையே. மனசு கல்லுப் போலே இருக்கு. கொஞ்சமாவது கரைஞ்சாத்தானே! ஈவு இரக்கம் ஏதாவது இருந்தாத் தானே!" என்று வருத்தப் பட்டுக்கொண்டாள்.

"நன்னு அழட்டும் நாய்கள்! எத்தனை நாழிதான் அழும், பார்ப்போமே! அவன் உயிரோடே இருக்கிறப்போ ஒண்ணு எட்டிப் பாக்கல்லே. செத்ததும் எல்லாம் அழமட்டும் வந்தூடுத்துகள்—பீடைகள்" என்றுர் புரோகிதர்.

"இப்படிப் பறைகள் அழுவது கெட்ட சகுனமாமே!" என்றுள் மனைவி.

"ஆமா! பீடைகள் அழுகையை நிறுத்த மாட்டேங்கிறதுகளே."

"இப்பவே பொணம் நாற ஆரம்பிச்சுடுத்து."

"சக்கிலியப்பயதானே! எதைத் திங்கிறது, திங்கப்படாதுங்கறது தெரிஞ்சாத் தானே!"

"எப்படித்தான் நாத்தத்தைத் திங்கறதுகளோ!"

"கீழ்ச் சாதிதானே! இதெல்லாமா கண்டுது!"

பொழுது விடிய அதிக நேரமில்லை. பறைச்சிகள் அழுதுகொண்டே பிணத்தை விட்டு விட்டுச் சேரிக்குச் சென்று விட்டார்கள். ஒருவனவது பிணத்தை எடுத்துப்போக வரவில்லை. நாற்றம் வர வர அதிகரித்தது.

கடைசியில், புரோகிதர் ஒரு கயிறு கொண்டுபோய், சுருக்குப் போட்டுப் பிணத்தின் காலை இறுக்கினர். (நல்ல வேளை பிணத்தின்மேல் கை இடிக்க வில்லை!) இன்னும் இருட்டாகவே இருந்தது. கயிற்றைப் பிடித்து இழுத்துச் சென்றுர். கிராமத்திற்கு வெளியே கொண்டுபோய்ப் போட்டு விட்டுத் திரும்பினர். வந்தவுடன் ஸ்னனம் செய்துவிட்டு "துர்க்கா பாராயணம்" செய்தார். "புண்யாஹவசனம்" செய்து, வீடு பூராவும் தண்ணீரைத் தெளித்தார்.

அங்கே கிடந்த துக்கீயின் பிணத்தை நரி, கழுகு, நாய், காக்கை முதலியவைகள் கொத்திப் புசித்துக்கொண் டிருந்தன. இதுதான் அவனுடைய பக்திக்கும் சேவைக்கும் கிடைத்த வெகுமதி!

✲

காதலால் அல்ல!: மனிதர்கள் அவ்வப்போது மடிந்திருக்கிறர்கள். புழுக்களும் அவர்களைத் தின்றிருக்கின்றன. ஆனல், இதற்குக் காரணம் காதல் அல்ல.

— ஷேக்ஸ்பியர்

எந்த உணவுப் பொருள்களை நீ அதிகம் விரும்புகிருயோ அவற்றிஞல் அதிக பலத்தைத் திரட்ட முயற்சிக்கவும்!

விருப்பத்துடன் நீங்கள் சாப்பிடும் உணவுப் பொருள்களை அதிக ஊக்கந் தரக்கூடியவைகளாகச் செய்யுங்கள். நமக்குப் பிரியப்பட்ட சில உணவுப் பொருள்கள் அதிக நன்மை அளிப்பதில்லை என்று உங்களுக்குத் தெரியுமா? அவைகள் பசியைத் தணிக்கின்றன. ஆனுல் சிறிது ஊக்க மட்டும் அளிக்கின்றன — தேவையான அளவு ஊக்கத்தைக் கொடுப்பதில்லை. எல்லா உணவுப் பொருள்களும் சிறிதளவு ஊக்கத்தை அளிக்கின்றன. ஆனுல் தினசரி சாப்பிடும் சில உணவு பதார்த்தங்கள் சொல்ப ஊக்கமளிக்கக் கூடியவை. இம்மாதிரியான சாப்பாட்டுக்கு ஊக்கத்தைக் கொடுக்கவேண்டுமானுல் அதிக ஊக்கமளிக்கக்கூடிய பதார்த்தங்களைச் சேர்க்கவேண்டும். வைடமின் நிறைந்தடால்டாவினுல் சமைப்பது அனுகூலத்தைக் கொடுக்கிறது. இயற்கையளிக்கும் ஊக்கத்தைக் கொடுக்கக்கூடிய சத்துப் பொருள்களை டால்டா கொடுக்கிறது. எல்லா உணவுப் பதார்த்தங்களையும் டால்டாவினுல் சமையல் செய்வது நலம்.

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்கவேண்டும். டால்டா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியுள்ளது) உணவுப் பொருள்களின் தாராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. உங்களிடம் ஒரு பிரதி இருக்கவேண்டியதவசியம் Dept. C160 P.O. Box No. 353. Bombay என்ற விலாசத்திற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.



வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HVM. 34-50-40 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

பர்னிச்சர்களுக்கு பெயர் பெற்றது

ரென் கம்பெனியே



சென்னையிலுள்ள எங்கள் வாடிக்கைக்
காரர்களில் ஒருவருடைய வீட்டின்
உட்பக்கம், சில நாட்களுக்கு முன்
எங்களால் அலங்கரிக்கப்பட்டது

ரென் பென்னட் அண்ட் கம்பெனி
(இந்தியா) லிமிடெட்

பர்னிச்சர்கள் தயாரிப்பவர்கள்

34, மவுண்ட் ரோடு - சென்னை

முதலாளிகள் பட்ஜெட்

பெரி. சோமசுந்தரம்

'இந்தியாவில், ஒரு பிரிட்டிஷ் நிதி மெம்பர் சமர்ப்பிக்கும் கடைசி பட்ஜெட் இதுதான்' என்ற பூர்வ பீடிகையுடன், சென்ற பிப்ரவரி மாதம் 28-ம் தேதி சர் ஆர்ச்சிபால்ட் ரோலண்ட்ஸ் இந்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை மத்திய சட்டசபையில் வெளியிட்டார்.

இப்பொழுது இருக்கும் வரித் திட்டப்படி, 1946—47 வருஷங்களில் ரூ. 307 கோடி வரவாகும், ரூ. 355 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கிறார்கள். வரையாமல் வழங்கிவந்த வருமான ஊற்றுக்கள் இரண்டு. இவற்றில் ஒன்றை அறவே நீக்கியதாலும், மற்றொன்றில் வரியைக் குறைத்ததாலும், இந்த வருஷ வருமானத்தைவிட வருகிற வருஷ வருமானம் 55 கோடி ரூபாய் குறையும். நிதி மெம்பரின் புது வரித் திட்டப்படி, வருமானத்தில் ரூ. 21·50 கோடி பாதிக்கப்படு மென்றும், அதை நிவர்த்தி செய்ய யுத்த அபாய இன்ஷ்யூரன்ஸ் நிதியிலுள்ள ரூ. 26·10 கோடியைப் பொது ரெவின்யூவுக்கு மாற்றப் போவதாகவும் சொல்லி யிருக்கிறார். இதனால், ஏற்கெனவே துண்டு விழுந்த ரூ. 48 கோடி, ரூ. 44 கோடி ஆகக் குறைந்திருக்கிறது.

பொதுவாக, இந்தப் பட்ஜெட் பணக்காரர்களுக்குச் சாதகமா யிருக்கிறதே ஒழிய, ஏழைகளுக்கு, யுத்தம் முடிந்த பிறகுங்கூட, எவ்வித நன்மையையும் பயக்கத் தக்கதா யில்லை.

இனி, ஒவ்வொரு புது அம்சத்தையும் கவனிப்போம். பட்ஜெட் திட்டம் வெளியானதும் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்த விஷயம் அமிதலாப வரியை ரத்துச் செய்ததே. அமிதலாப வரி நீக்கப்பட்டதால் வருமானத்தில் ரூ. 75 கோடி குறையுமென்று நிதி மெம்பர் ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த வரியைத் திடீரென்று நீக்கியிருக்கவேண்டாம். அதற்கு எவ்வித அவசரமும் ஏற்படவில்லை. பிரிட்டனில் செய்ததுபோல், சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டு வந்திருக்கலாம். பெரும் பணக்காரர்களுக்குச் சலுகை காண்பிக்கவும், அவர்கள் யுத்த காலத்தில் இந்திய அரசாங்கத்துக்கும், அதன்மூலம் பிரிட்டனுக்கும், செய்த உதவிக்கு நன்றியறிதல் தெரிவிப்பது போலவும், நிதி மெம்பர் அமிதலாப வரியை ரத்துச் செய்திருக்கிறார்.

அடுத்தபடியாக, கம்பெனிகளின் பேரில் விதிக்கப்படும் வருமான வரியையும் அதி வரியையும் ஒன்று சேர்த்து, ரூபாய்க்கு ஏழேமுக்காலணாவாக இருந்ததை ரூபாய்க்கு ஆறணாவாகக் குறைத்திருக்கிறார். இதன் மூலம் தொழில்அபிவிருத்திக்கு ஊக்கம் கொடுப்பதாகவும், இந்தியப் புனருத்தாரணத் திட்டத்தைத் தங்கு தடையின்றி இந்திய முதலாளிகள் செய்கையிற் கொண்டுவர முற்படுவார்களென்றும் சர் ஆர்ச்சிபால்ட் கருதுகிறார். புதுத் தொழில் ஸ்தாபனங்களுக்கு இது

பெரிதும் உபயோகமாக விருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கெனவே உள்ள தொழிற்சாலை முதலாளிகள் இச் சலுகைகளினல் ஏற்படும் லாபங்களைத் தங்களுடைய சொந்த நன்மைக்கே பயன்படுத்திக் கொள்வார்களே யானல், அவர்கள் நிதி மெம்பரின் நல்லெண்ணத்துக்கு அருகதை யற்றவர்களாகி விடுவார்கள். முதலாளிகள், அவர்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களை உபயோகிக்கும் பொது மக்களுக்குப்பயன்படும்படி விலைவாசிகளைக் குறைப்பார்களென்று எதிர்பார்க்கிறேன்.

புதுக் கட்டிடங்கள் கட்டுபவர், இயந்திரங்களைப் புதிதாக மாற்றிக்கொள்வோர், சம்பளம் வாங்கும் தனி நபர்கள், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் ஆகியவர்களுக்கு வரி விதிப்பில் சில செளகர்யங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

மண்ணெண்ணெய் வரி குறைக்கப்பட்டிருப்பது தவிர, வேறு எந்த விதத்திலும், இந்த பட்ஜெட்டினல் சாதாரண மனிதனுக்குச் சாதகம் இல்லை. உப்பு வரியை நீக்கிவிட வேண்டுமென்றும், அதனல் மொத்த வருமானம் பாதிக்கக்கூடிய அளவு குறைந்துவிடாது என்றும் ராஜாங்க சபையில் சர் கோபால சாமி அய்யங்கார் கூறியிருக்கிறார். மொத்த வருமானத்தில், உப்பு வரி 2·75 சதவிகிதம்தான் ஆகும். உப்பு வரியை நீக்குவதனல், ஏழைகளிடம் ஒரு பெரிய மனமாறுதல் ஏற்படும். அவர்களுக்கு இது திருப்தியு மளிக்கும். தபால், ரயில்வே கட்டணங்கள், பாக்கு வரி, தீப்பெட்டி வரி இவைகளைக் குறைத்திருந்தால், சாதாரண மனிதனுக்கு மிகவும் செளகரியமாக இருந்திருக்கும்.

பொதுவாக, இந்த பட்ஜெட் பணக்காரர்களுக்குச் சாதகமா யிருக்கிறதே ஒழிய, ஏழைகளுக்கு, யுத்தம் முடிந்த பிறகுங்கூட எவ்வித நன்மையையும் பயக்கத் தக்கதா யில்லை. சர் ஆர்ச்சிபால்ட், நேரடியான வரிகளைக் குறைப்பதும் மறைமுகமான வரிகளை அதிகரிப்பதுமாகிய கிளாட்ஸ்டனின் மூதுரையை அடிப்படையாகக் கொண்டே இந்த பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிருரெனத் தெரிகிறது. இந்த பட்ஜெட் வெளிவந்தவுடன், பங்கு மார்க்கெட்டில் விலைவாசிகள் திடீரென்று ஏறிவிட்டன. இதிலிருந்து இந்த பட்ஜெட் பணப் பெருக்கத்திற்கு வழிகோலுகிற தென்பது தெளிவாக விளங்கும். வரும் வருஷத்தில் (1946-47) இந்தியாவின் ஸ்டெர்லிங் நிதி மேலும் அதிகரிக்கா தென்றும், அதற்கு மாருக அது குறைந்துகொண்டு வருவதற்கு மார்க்க மிருப்பதாகவும் தமது பிரசங்கத்தில் நிதி மெம்பர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிருர். காகித நாணயப் பெருக்கத்தைத் தடுப்பதற்கோ, ஸ்டெர்லிங் கடனைத் திரும்பப் பெறுவதற்கோ என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிருர் என்று அவர் சொல்லவில்லை. ஸ்டெர்லிங் பாக்கிபற்றி இரு தேசப் பிரதிநிதிகளும் கூடிய சீக்கிரம் சந்தித்துப் பேசுவார்களென்று சொன்னரே தவிர, மேல் விவரம் எதுவும் அவர் கொடுக்கவில்லை. சர் ஆர்ச்சிபால்ட் இங்கே மௌனம் சாதித்து விட்டார்.

இந்தியா தனது, ஸ்டெர்லிங் கடனை வேறு தேச நாணயங்களாக மாற்ற முடிந்தாலன்றி, இந்திய அரசாங்கத்தின் புனருத்தாரணத் திட்டங்களோ, தனிப்பட்ட முதலாளிகளின் தொழிலபிவிருத்தித் திட்டங்களோ கைகூடா. இந்திய அரசாங்கத்தின் புதுத் திட்டங்களை வகுக்கும் இலாக்காவுக்கும், நிதி இலாக்காவுக்கும் சரியான தொடர்பும், சேர்ந்து நடவடிக்கை செய்யும் ஒற்றுமையும் இல்லாவிட்டால், சர்க்காருடைய புனருத்தாரணத் திட்டங்கள் பயன்பெற மாட்டா. தனிப்பட்டவர்களுடைய தொழிலபிவிருத்தித் திட்டமானாலும் சரி, அரசாங்கத்தின் சீர்திருத்த திட்டமானாலும் சரி, அது வெற்றியடைவதற்குச் சரியான பொருளாதார அஸ்திவாரம் அவசியம். முதலாவதாக, பிற நாடுகளிலிருந்து பெரிய கனரக இயந்திரங்களையும் தளவாடச் சாமான்களையும், வெளி நாடுகளிலிருந்து நாம் வாங்க வேண்டும். அதற்கு ஸ்டெர்லிங் நிதியை மற்றத் தேச நாணயமாக, முக்கியமாய் டாலராக, மாற்றினாலன்றி, வேறு தேசங்களிலிருந்து இயந்திரங்கள் வாங்க முடியாது. இல்லாவிட்டால், நாம் நம்முடைய தேவைப் பொருள்களை யெல்லாம் பிரிட்டனிடமிருந்தே வாங்கவேண்டிய நிர்ப்பந்த மேற்படும். பிரிட்டன் நம் தேவை பூராவையும் பூர்த்தி செய்ய முடியாது. மற்றத் தேசங்களிடம் நாம் வாங்கும் குறைந்த விலைக்குப் பிரிட்டன் நமக்கு விற்க முடியாது. ஆகையால், நமக்கு இரண்டுவிதக் கஷ்டங்கள் இருக்கின்றன. இந்தியாவின் வருங்காலச் சுபிட்சம் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்குமிடையே ஸ்டெர்லிங் நிதி சம்பந்தமாக நடக்கப் போகும் பேச்சு வார்த்தைகளைப் பெரிதும் பொறுத்திருக்கிறது என்று சொல்லலாம்.

ஸ்டெர்லிங் நிதியைப்பற்றி, நமக்குப் பாதகம் விளைக்கக் கூடிய முறையில் பிரிட்டனிலே கெட்ட அபிப்பிராயம் பரப்பப்பட்டு வருகிறது. இந்தத் தப்புப் பிரசாரகர்கள், இந்தியாவுக்குக் கொடுபட வேண்டிய ஸ்டெர்லிங் கடனில் ஒரு பகுதியைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்தியா இவ்வளவு பெரிய ஸ்டெர்லிங் நிதியையும் பல லட்ச மக்களைப் பலியிட்டு, கோடிக் கணக்கான மக்களை வாழ்க்கைத் துன்பங்கள் அனைத்தையும் வலுக் கட்டாயமாக அனுபவிக்கச் செய்து, சேர்த்திருக்கிறது. இதில் ஒரு பவுன் கூடக் குறைத்து வாங்கிக் கொள்ள இந்தியா சம்மதிக்கக் கூடாது. யுத்தம் ஆரம்பமான சமயத்தில், இந்தியா பிரிட்டனுக்கு ,ரூ. 445 கோடி பெறுமான ஸ்டெர்லிங் கடன்பட்டிருந்தது. இது, இந்தியாவின் நன்மைக்காகவோ, வருவாய் தரும் திட்டங்களுக்காகவோ வாங்கிய கடன் அல்ல. பிரிட்டனின் ஏகாதிபத்திய யுத்தங்கள் போன்ற இந்தியாவுக்குப் பிரயோஜனமற்ற ராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட கடன்தான் இவ்வளவும். இந்தியா இதை ஓர் இம்மி குறையாமல், வட்டியும் முதலுமாகச் சேர்த்துத் திருப்பிக் கொடுத்திருக்கிறது. அப்படி யிருக்க, இந்தியா கொடுத்திருக்கும் கடனில் ஒரு பகுதியை ரத்துச் செய்வதென்பது பெரும் அயோக்கியத்தனமாகும். பிரிட்டனில் இக்கும்பல் செய்யும் கிளர்ச்சி ஓங்காமல்

தடுக்க இந்திய அரசியல் வாதிகள் இவ்விஷயத்தில் பிரிட்டிஷ் மக்கள் உண்மை யறியும் வண்ணம் எடுத்துச்சொல்ல வேண்டும்.

கடைசியாக, தங்கம், வெள்ளி, இவைகளின் மேல் விதித்திருக்கும் இறக்குமதி வரியைப்பற்றிக் கவனிப்போம். ஒவ்வொரு தேசமும் தனது தங்க ஆஸ்தியை அதிகப்படுத்த முயலுகிறது. ஆனல், இந்திய அரசாங்கமோ, நாம் தங்கத்தை அதிகமாக இறக்குமதி செய்யவொட்டாமல் பண்ணுவதற்காக இந்தியாவில் இறக்குமதியாகும் ஒவ்வொரு தோலா எடை தங்கத்துக்கும் ரூ. 25 வரி விதித்திருக்கிறது. இறக்குமதியாகும் ஒவ்வொரு அவுன்ஸ் எடை வெள்ளிக்கும் முன்பு 3 அணு 7 தம்பிடியா யிருந்த வரியை, இப்போது 8 அணுவாக உயர்த்தியிருக்கிருர்கள். நிதி மெம்பர், தங்கம், வெள்ளி மார்க்கட்டில் சூதாடுபவர்களின் விஷமத்தைத் தடுப்பதற்காக இவ்வரி போடுவதாகச் சொல்வது வெறும் சப்பைக்கட்டே தவிர, இதில் நியாயமான காரணம் துளிக்கூட இல்லை. 1931—32-ம் வருஷங்களில் நம் நாட்டிலிருந்து ஏராளமான தங்கம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. மறுபடியும், இந்தியா தன்னுடைய பழைய தங்க இருப்பு நிலைக்கு வந்துவிடவேண்டும். அதற்கு வெளி நாடுகளிலிருந்து தங்கம் வாங்கவேண்டியது அவசியம். தங்க இறக்குமதி வரி விதிப்பது இறக்குமதி செய்யவொட்டாமல் தடுப்பதே யாகும்.

*

ஒப்புப் பேச்சு

நம்முடைய வாழ்வெல்லாம் இன்னும் ஒரு சில நாளைக்குத்தானே, என்று நாம் சதா குறைகூறிக்கொண் டிருக்கிறேமே தவிர, உண்மையில் நாம் வாழப்போகும் காலத்திற்கு ஓர் அளவே யில்லை என்கிற மாதிரிதான் நாம் காரியம் நடத்துகிறேம்.

— செனெக்கா

ஷாவியம்

தன் பக்தர்களுடைய தொல்லை தாங்க முடியாமல் ஷா அவஸ்தைப் பட்டுக்கொண் டிருந்த காலம் அது. ஒருநாள், ஓர் அமெரிக்கர் அவரை நடுத்தெருவில் தடுத்து நிறுத்தி, "ஏது, நீங்கள்தான் ஷாவோ?" என்று கேட்டார். "ஐயமற!" என்று கூறிவிட்டு மேலே நடந்தார் ஷா.

— ஃபிரான்க் ஹேரிஸ்

மாபெரும் தலைவர்

மௌலானு அபுல் கலாம் ஆஜாத் இந்தியாவில் இதுவரை தோன்றியுள்ள மிகச் சிறந்த தலைவர்களுள் ஒருவர். நிதானமும் உறுதியும் நிறைந்த அவருடைய அறிக்கைகளுக்கும் பிற தலைவர்களின் ஆரவாரப் பாஷைக்கும், எண்ணங்களுக்கும் மகத்தான வேற்றுமை இருக்கிறது.

— சர் சி. ஆர். ரெட்டி

இதுவா கலை?

க. விற்பன்னன்

இயற்கைத் தோற்றங்களின் தனிக் கூறுகளை, அவற்றின் சிறப்பியல்புகளை விமரிசனம் செய்து, அழகுறப் படம் வரைகிற முயற்சியைக் கலை என்கிறோம். கண்ணும் கருத்தும் இயற்கையினிடத்துத்தென்படும் அழகினைக் கண்டு இன்புற, கலை நம்மைப் பயிற்றுவிக்கிறது. அழகும் கவர்ச்சியும் இல்லாத இடத்தில் கலைப் பண்பு இருக்க முடியாது.

இலக்கியம், சிற்பம் போன்ற இதர துறைகளில் புதுமைப் போக்கு இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் சித்திரக் கலைக்கும் இருக்கத்தான் இருக்கிறது. அதற்காக, வரம்பு மீறிக் காடு மேடு தெரியாமல் புதுமைப் பித்துப் பிடித்து விடுவதா, என்ன?

இந்தக் கட்டுரையோடு ஒரு படம் போட்டிருக்கிறது. இதை வரைந்தவர் பிக்காஸோ என்பவர். இவர் ஸ்பானிஷ்காரர் என்று சொல்லுகிறார்கள். ஆனால், இவர் எந்தத் தேசத்தைச் சேர்ந்தவர் என்று நிச்சயமாய்த் தெரியவில்லை. சமீபத்தில் ஜெர்மானியர் ஆக்கிரமிப்பிற்குள் இருந்த பாரிஸ் நகரத்தில், இதையும் இதைப் போன்ற இன்னும் பல படங்களையும் இவர் வரைந்திருக்கிறார். இதே தோரணையில் இவர் தீட்டிய பல படங்களும், மாட்டிஸே என்ற இன்னொரு சித்திரக்காரர் இந்தப் பாணியில் தீட்டிய பல படங்களும் சமீபத்தில் இங்கிலாந்தில் கிளாஸ்கோ நகரத்திலும் மாஞ்செஸ்டர் நகரத்திலும், பொது மக்கள் கண்டு மகிழ்வதற்காகக் காட்சிச் சாலைகளில் வைக்கப்பெற்றன.

ராட்சசக் கற்பனை கொண்ட இந்த வெறி முயற்சிகளை நல்ல கலை முயற்சிகள் என்று யாராவது சொல்லக் கூடுமா? சித்திரக்காரர்களில், அதீதப் போக்கினர் என்று ஒருவகை. சதுர வடிவப் போக்கினர் என்று ஒரு வகை. இப்படிப் பலவகைப் போக்கினர் உண்டு. எந்தப் போக்கினராயினும் சரி, இந்த மாதிரி அவலட்சணமாகப் படம் வரைவது மனித வடிவத்தின் ஒழுங்கையும், மனித அறிவையும் கீழ் நிலைக்கு இழுத்துச் சென்று, அவைகளை அவமானப் படுத்துகிற முயற்சியே ஆகும். புனிதமான கலையின் பெயரைச் சொல்லிக்கொண்டு இவற்றைக் கலைப் பண்பாடுகள் என்று புகழ்வது நவீன காலத்தின் மிக மோசமான போக்கு. இது, பண்பாடு என்ற சொல்லுக்குச் செய்யும் மகத்தான அபசாரம். கலை வளர்ச்சிக்குச் சேவை செய்வதில் பிரசித்தி பெற்ற கலைக்கூடங்களில் இத்தகைய தகுதியற்ற முயற்சிகளை மக்களுக்குக் கண்காட்சியாக

அழகு முக்கியம். கோர வடிவங்களில் அழகைப்பார்க்கிறவர்கள், அவற்றின் பாவங்களைப் பற்றி அளக்கிறார்கள். இந்தப் பாவ ரசிகர்கள், பாவம், விஷயம் தெரியாதவர்கள்! — என்று தி கன்வீசர் (கலா விற்பன்னன்) பத்திரிகை ஆசிரியர் எச். கிரான்வில் ஃபெல் எழுதிய ஒரு கட்டுரையின் சாரம் இங்கே தரப்பெற்றிருக்கிறது.

வைப்பது மிக மிக வருந்தத் தக்கது.

இந்தப் படத்தில், சித்திரக்காரர் தம்முடைய உள்ளக் கிடக்கையைப் புலப்படுத்தி இருக்கிறார். இப்படிப் பேய்க் குணம் நிறைந்த உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த விட்டுவிடுவது, கலைக்கும் மக்களுக்கும் மகத்தான தீமை இழைக்கும்படி இந்தப் பேய்ச் சிருஷ்டி கர்த்தாக்களைத் தங்குதடையின்றி விட்டு விடுவதாகவே ஆகும்.

"பார்ப்பதற்கு இந்தப் படம் ஒரே கந்தல் கூளமாய்த் தோன்றலாம். ஆனால், அதன் உட்பொருளைக் கவனித்தீர்களா? வாழ்க்கையில் ஒரு புரட்சிப் போக்கை அமைக்க, இதில் எவ்வளவு துடி துடிப்பு இருக்கிறது! இதுதான் சரியான போக்கு. படத்தின் மொத்த அமைப்புக்கும் அதன் தனித் தனிக் கூறுகட்கும் இணைவு இல்லை, தொடர்பு இல்லை என்று சொல்வது சரியல்ல. பார்வைக்குத் தான் அப்படித் தோன்றுகிறது. ஆழத்தில் உள்ள உட்பொருளை நோக்குதல் வேண்டும்" என்று இந்தப் படங்களைப் பற்றிக் கிறிஸ்தியன் ஜெர்வாஸ் என்பவர் உள்ளம் பூரித்துப் புகழ்கிறார். "ஆழத்தில்" என்னதான் இருக்கிறதென்று நீங்களே பார்த்துச் சொல்லுங்கள்! எவ்வளவுதான் ஆழத்தில் போனாலும், எந்த விதமான ஒழுங்கும் இங்கே இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு பொருள் இருக்கத்தான் செய்கிறதென்ற குருட்டு நம்பிக்கைதான் இது. நம்முடைய புத்திக்கு எட்டிய மட்டில், இந்தப் படத்தில் என்ன பொருள்தான் இருந்து தொலைக்கிறதோ, தெரியவில்லை. ஆனால், இதில் உட்பொருள் இருக்கத்தான் செய்கிறதென்று இதைப் புகழ்ந்து துதி பாடுகிறவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, அவர்கள் சொல்லுவதற்காகவாவது நாம் தலை அசைத்துத்தான் ஆகவேண்டும் போலும்! இல்லையா?

"பச்சை உடைச் சீமாட்டி". இவள் "இந்தக் காலத்தின் போக்கைப் பிரதிபலிக்கிறாள்" என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

இப்படிப் பட்ட மூடத்தனமான வாதங்களின் தன்மை இன்னதென்று நமக்குத் தெரியாமலில்லை. "உண்மை நிலைகளை வியாக்கியானம் செய்வதில் பிக்காஸோ வல்லவர். அன்றாடம் உண்டாகும் வாழ்க்கை வேதனைகளைத் தணிக்க வல்ல சக்தியை இந்த உருவங்கள் உணர்த்துகின்றன" என்று மேலே சொன்ன ஜெர்வாஸ் புகழுகிறார். எங்கே, பன்றி முகம் படைத்த அந்தக்

கோர சொரூபத்தை ஒரு முறை பாருங்கள். அப்புறம், அவர் சொல்வது சரிதானு வென்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

உருவங்களையும் இயற்கைத் தோற்றங்களையும் அவை இயற்கையாக உள்ளபடியே வரையுங்கள், இலக்கியக் கற்பனைகள் வேண்டாம், உள் அர்த்தங்கள் வேண்டாம் என்று எத்தனையோ முறை சொல்லியாயிற்று. அப்படி இருக்க, குண்டோதர ரூபத்தில், டாம்பீக முறையில் அமைந்துள்ள இந்த விரிவுரைகள் எதற்கு?

உருவத்தைக் கால் வேறு கை வேருகப் பிய்த்துப் போட்டு, இசைகேடு பண்ணுவதிலே ஒரு தனி ஒழுங்கு முறைகூட இருக்கிறதாம். அப்படி ஏதாவது ஒழுங்கு முறை இருந்தால், அது "கெட்ட நோக்கத்"துடன்தான் இருக்கவேண்டும். சாதாரணப் பிறவிகளாகிய நமக்கு இந்த ரீதியில் அமைந்த படங்களில் தென்படுவது என்ன? ஒரே அவலட்சணம்தான். மூளை குழம்பிப் போய், மக்கள் தொகுதியை வெறுக்கிற ஒருவன், கட்டுப்பாடில்லாமல், எங்கெல்லாமோ சுற்றித் திரிகிற வெறியாட்டமாகத் தான் இது நமக்குப் படுகிறது. இந்த மாதிரிச் சுட்டித்தனத்தை இதர கலைத் துறை எதிலும் பார்க்க முடியாது. க்ஷேத்திரக் கணிதம் வெகு ஆழ்ந்த ரீதியில் இதில் கையாளப்பட் டிருப்பதாகச் சில அனுதாபிகள் வாதாடுகிருர்கள். இது சுத்த விதண்டாவாதம். இது க்ஷேத்திரக் கணிதமே அல்ல. க்ஷேத்திரக் கணிதம் திட்டமான எல்லைகளைக் கொண்ட ஒரு சாஸ்திரம். அதிலிருந்து, திட்டமற்ற சில சங்கதிகளை இது நகல் செய்து, கோவையற்ற ஒரே கும்பலாக அள்ளிப் போட்டுக் குவித்திருக்கிறது. இயற்கையின் நுண்ணிய வனப்புக்களை வண்ணமுறத் தீட்டுவதைவிட இப்படிக் கோடு கிறுவது நிரம்பச் சுலபம். அழகான பொருள் எத்தனை எத்தனையோ இருக்க, வாழ்க்கையின் துயரத்தைத் தணிக்க உதவுகிற எத்தனை எத்தனையோ இனிய காட்சிகள் இருக்க, அவைகளை வரைவதை விடுத்து, இப்படிப் பேய்ச் சிருஷ்டிகளை வரைந்து தள்ளுவதால் மக்கள் குலத்துக்கு என்ன லாபம்?

சித்திரக்காரன், சர்வ சுதந்தரத்துடன், தன் மனப் போக்குப் படி, சுயமாகச் சிருஷ்டி செய்வதற்கு எவ்விதமான தடையும் உதவாது என்று சிலர் வாதிக்கிருர்கள். அதற்காக, இயற்கையை அவமதித்து, சிருஷ்டியின் மகத்தான பெருமைக்கு இழுக்குத் தேடும்படி அவனை விட்டு வைப்பதா, என்ன? இந்த மாதிரி மட்டச் சரக்கில் எவ்வித மான பண்பு நலமோ, வேகமோ, கற்பனை நயமோ இல்லை.

இந்த மாதிரியான கலை முயற்சிகள் அதி தீவிரப் போக்கில் செல்வதால், இவற்றின் நுணுக்கங்களை உணரத் திறமை இல்லாதவர்கள், இவற்றில் காணப்படும் புதுமையைக் கண்டு மலைத்து, குற்றம் காண்பதாகக் கூறுகிருர்கள். இந்தக் காலத்தின் தப்பான போக்கையே இவை எடுத்துக் காட்டுகின்றன என்பது தெளிவு. பரிபூரணமான கலைச் செறிவு இவற்றில் படிந்திருக்கிறது, மேதையின் மிக உன்னதமான வெளிப்பாட்டை இவற்றில் காண

லாம் என்று சொல்வதெல்லாம் உண்மையைத் திரித்துக் கூறும் கூற்றேயாகும். இப்படிப்பட்ட அபத்தங்கள் யாதொரு நல்ல பயனையும் தர முடியா. இந்த மாதிரியான கலைப் போக்கு, ஒரு தொத்து நோயைப் போல், எங்கும் பரவத் தொடங்கி விட்டது. இல்லாத நயங்களை இருப்பனவாக ஒரு கோஷ்டி கற்பித்துக் கொண்டே வருவதால், பலர் இந்த மாதிரிச் சித்திரம் வரைய முற்பட்டுவிட்டார்கள். இதற்குக் கலை நுணுக்கம் வேண்டியதில்லை. சுமாரான திறமையுள்ள எவனும் இப்படிக் கோடு கீற முடியும். கடவுள் நமக்குத் தந்த இயற்கையறிவு இந்தக் கோமாளிப் படங்களை ரசிக்க மறுப்பது ரசனைக் குறைவு என்று சொன்னால், அடுத்த இருபது வருஷங்களில் மனித நாகரிகம் அதன் கடைசிக் கட்டத்தை எட்டி, அஸ்தமித்துப் போய்விடும் என்று எச். ஜி. வெல்ஸ் தீர்க்க தரிசனம் கூறுவது சரியென்றே படும். "கடந்த காலத்தோடு தொடர்பு அறுத்துக்கொள்ளாத முயற்சிதான் முற்போக்கு முயற்சி" என்று ருஷ்யப் பேரறிஞரும் சிறந்த சிந்தனையாளருமான அலெக்ஸிஸ் ஹோமியாக்கவ் கூறுவது கூர்ந்து நோக்கத்தக்கது.

அழகு நிரந்தரமானது, அழியாதது. லௌகீக வாழ்வுக்கும் சரி, ஆத்மீக வாழ்வுக்கும் சரி, அழகு இன்றியமையாதது. அழகுத் தெய்வத்திற்கு ஊறு செய்கிற கோடு முயற்சிகளை நாம் ஆதரிக்க முடியாது. அழகை நாம் அசையாத நம்பிக்கையுடன் வழிபடுவோமாக.

✲

தர்மத்தால் சங்கடம்

பாதிரிப் பிரமுகர் ஒருவர், துருப்புக்களுக்காக ஏற்பட்ட ஒரு விடுதியின் வெளி வாயிலில் நின்றுகொண்டு, ராணுவஉடை தரித்துச் சென்றவர்களை உள்ளே வந்து சிற்றுண்டி அருந்திச் செல்லுமாறு அழைத்துக் கொண்டிருந்தார். ஓர் இளம் அதிகாரி அங்கே வரவே, அவரை நோக்கி, "கொஞ்சம் காப்பி சாப்பிடலாமே" என்றார்.

உடனே அந்த அதிகாரி தம் பைக்குள் கையிட்டு, கொஞ்சம் சில்லறைக் காசை வெளியில் எடுத்துப் பாதிரியிடம் கொடுத்து விட்டு, பிரமித்துப்போய் நின்ற அந்த மனிதர் விஷயத்தை விளக்கிக் கூறு முன்பாகவே விரைவாக நடையைக் கட்டினார்.

பஸ் மரியாதை!

வழக்கமாகத் தன் வண்டியில் போகும் ஒரு பிரயாணியைப் பார்த்து "சார்! நேற்றிரவு பத்திரமாக வீடு சேர்ந்தீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம்! ஏன் இப்படிக் கேட்கிறாய்?"

"இல்லை, நேற்றிரவு நீங்கள் எழுந்து நின்றுகொண்டு, அந்தப் பெண்மணிக்கு உட்கார இடம் அளித்தீர்களே, அப்போது, வண்டியில் உங்களிருவரைத் தவிர வேறு ஆளே கிடையாது. அதனால்தான் கேட்டேன்" என்றான் அந்தக் கண்டக்டர்!

குடும்பத்தில் அழகைப்பாதுகாத்தல்

"நீ பார்க்கிற படத்தைப் போலவே அவ்வளவு அழகாக இருந்தாள் என் தாய். ஆனால், அவள் சருமம் எவ்வளவு மிருதுவாயும் அழகாயுமிருந்ததென்பதைப் படம் காட்டமுடியாது" என்று தாய் கூறுகிறாள். தாய் தன் சருமத்தை அதிக ஆச்சரியகரமாகக் காப்பாற்றியிருக்கிறாள். தன் மகளும் அவ்வாறே செய்யவேண்டுமென்று விரும்புகிறாள். சுத்த நீரில் பியர்ஸ் சோப்பை உபயோகித்து அழகைப் பாதுகாத்துக் கொள்ளும் ரகசியத்தை அவள் தன் மகளுக்குக் கற்பித்திருக்கிறாள். இந்த புத்திமதி அழகைத் தலைமுறை தத்துவமாக நிலைத்திருக்கச் செய்யும்.

பியர்ஸ் சோப்

TG. 40-50 TM   A. & F. PEARS, ISLEWORTH, ENGLAND

சிராசரம் ஜனார்தன	HT. 121
நந்த பாலா ஹே ஹரே தயாளா	HT. 122
எனது உள்ளமே பிருந்தாவனத்தில்	N. 18253
எங்கும் நிறைந்தாயே அரங்கா-யதுநந்தன	N. 18254
கிரிதர கோபாலா உடல்உருக (விருத்தம்)	N. 18255
காற்றினிலே மறைந்த கூண்டு	N. 18256
மறவேனே லீலைகள் செய்வானே	N. 18257

ஸ்ரீமதி

எம். எஸ். சுப்புலக்ஷ்மி

நடிக்கும்

மீரா

பாட்டுக்கள்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரிகார்டுகள்

எல்லா கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்., டம்-டம், பம்பாய், மதராஸ், டில்லி, லாகூர்

ஆஸ்த்மா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோகித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல. "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின், (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனபஜார்.
2. அமிருத் ரத்னாகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &,
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.

புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

சக்தி

சந்தா விபரம்

தனிப்பிரதி 'தபால்'	0	8
ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0
2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்ப வேண்டும்

பர்மா

தனிப்பிரதி	0	9
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0
2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப்பிரதி	0	10
ஆறு மாதம்	4	4
ஒரு வருஷம்	8	0
2 வருஷம்	15	0

SHAKTI KARYALAYAM
KOYAPETTAH, : : MADRAS

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

கும்பகோணம்

டி.எஸ். ஆர். & கம்பெனியின்

கோகுல் கூந்தல் தைலத்தை
கூந்தல் வளர்ச்சிக்கும்

சிரசின் குளிர்ச்சிக்கும்
சந்தனாதி, அரைக்கீரை விதைத் தைலங்களையும்
உபயோகியுங்கள்

மதராஸ் ஸிட்டி ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி
மதராஸ்

ஸ்டாக்கிஸ்ட்:
B. பால பட்டாபி
வைஸ்யாள் தெரு
கோயம்புத்தூர்

இருமல், ஜலதோஷத்திற்கு
சாஸ்திரரீதிப்படி தயாரித்த
ஓர் உன்னதமான மருந்து!

ஸிரோலின்

'ரோச்'

புத்தக உலகம்

செந்தாமரை: ஆசிரியர்: பேராசிரியர் மு. வரதராஜன், பி. ஓ. எல்., எம். ஓ. எல். வெளியிட்டோர்: மதராஸ் பிரீமியர் கம்பெனி. விற்பனை உரிமை: பவானி புக் டிபோ, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. கிரௌன் 1×8. 148 பக்கம். விலை ரூ. 2—8—0.

படிப்பாளி மருதப்பருக்குப் படிப்பில்லாத தம் மனைவிமேல் முதலில் அதிருப்திதான். இருந்தாலும், போகப் போகக் காதல் வளர்ந்து இருவரையும் இன்புறுத்துகிறது. கலை புணர்ச்சி பொங்கிக் காதலில் அலைப்புண்டு, இளங்கோவிடம் அமைதி காண்கிறாள் செந்தாமரை. வேதாந்தி திருநாதனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவியாகிறாள் திலகம்.—இந்த ஒப்பற்ற நாவல், உண்மையான தமிழ் மறுமலர்ச்சியின் தலைவாயிலுள் நம்மை இட்டுச் செல்லுகிறது. படிக்கும் போது, எழுத்துத் தெரியவில்லை. கலை மெருகேறி, கவிதை நலம்பெற்ற கருத்துப் படங்கள்தான் நம் உள்ளத்திலும் அறிவிலும் தென்பட்டு, அவற்றை இன்புறுத்துகின்றன. ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்கத்தான் செய்வர். இதற்குச் சிபாரிசு தேவை யில்லை.

ரஜபுத்திர ஆதிக்கத்தின் அஸ்தமனம்: ஆசிரியர்: ரமேச சந்திர தத்தர், ஐ. சி. எஸ். அ. கி. ஜயராமன் மொழிபெயர்த்தது. வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், காரைக்குடி. கிரௌன் 1×8. 248 பக்கம். விலை ரூ. 4—8—0.

நம் நாட்டு வரலாறுகளைச் சுவைபட நாவலாக எழுதும் நல்ல நூல்கள் அரிது. அப்படி அரிதா யுள்ள நல்ல நாவல்களில் இது ஒன்று. நல்ல மொழிபெயர்ப்பு.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்பவேண்டும்

முல்லை (மூன்று வெளியீடுகள்): ஆதரவாளர்: கவியரசர் பாரதிதாசன் அவர்கள். தொகுப்பாளர்: ப. முத்தையா. வெளியிட்டோர்: கமலா பிரசுராலயம், 59, பிராட்வே, சென்னை. கிரௌன் 1×8. ஒவ்வொன்றும் 32 பக்கம், விலை 4 அணா.

சிறந்த எழுத்தாளர்களின் இலக்கியக் கட்டுரைகளைத் தாங்கி, நல்ல தமிழை வளர்க்கும் சிறந்த மாதப் புத்தகம்.

கலைமலர் (மாதவெளியீடு): பதிப்பாசிரியர்: கலைப்பித்தன். வெளியிட்டோர்: கலைமலர் காரியாலயம், புதுக்கோட்டை (ஸ்டேட்). கிரௌன் 1×8. 62 பக்கம். விலை 8 அணா.

"வாழும் வகையைத் தமிழருக்கு எடுத்துக் காட்டி, மறுக்களையோட்டி, கடமையைத் தீட்டி"க் கலையை வளர்க்க முயலும் மாதப் புத்தகம்.

காதற் கனி (இலக்கியச் சிறு கதைகள்): ஆசிரியர்: தி. சி. குழந்தைவேலன். வெளியிட்டோர்: மணிமன்றம், தமிழ் நூல் வெளியீட்டகம், மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி. கிரௌன் 1×8. 94 பக்கம். விலைரூ. 1-4-0.

நல்ல தமிழ். நல்ல புத்தகம்.

அழகு ராணி: ஆசிரியை: ஜயலட்சுமி ஆர். ஸ்ரீனிவாசன். 154 பக்கம். விலை ரூ. 2. (2) ஒளி உதயம்: ஆசிரியை: கு. ப. சேது அம்மாள். 156 பக்கம். விலை ரூ. 2. (3) யுத்த கால இலக்கியம்: ஆசிரியர்: "சுகி". 116 பக்கம். விலை ரூ. 1-8-0. மூன்றும் கிரௌன் 1×8 அளவு. வெளியிட்டோர்: புதுமலர் நிலையம், கோயமுத்தூர். விற்பனை உரிமை: காசிநாத் அண்டு கோ., பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

முதல் இரண்டு புத்தகங்களும் அருமையான சிறு கதைப் புத்தகங்கள். மூன்றாவது, உயர்தரமான நகைச் சுவை ததும்பும் கட்டுரைப் புத்தகம். மூன்றும், எழுதியவர், அச்சிட்டவர், வெளியிட்டவர் மூவருக்கும் சிறப்பும் பெருமையும் தரத் தக்கன. விற்பனை உரிமைக்காரரும் வாசகரும் மூவரோடு ஐவரர்வது சிறப்பின் இயல்பு.

•

ராஷ்ட்ரபதி சுபாஷ் சந்திர போஸ்: அரு. காந்தி அண்ணாமலை இயற்றியது. வெளியிட்டோர்: சிதம்பரநாதன் கம்பெனி, 325, சிகே மவுந்தாலே வீதி, இரங்கூன். கிரௌன் 1×8. 156 பக்கம். விலை தெரியவில்லை.

நேத்தாஜி ராஷ்டிரபதியா யிருந்த போது முதல் முதலாக வெளி வந்த இந்த நல்ல வரலாற்று நூல் இப்போது மூன்றும் பதிப்பாக வெளி வருகிறது. இந்திய சுதந்தரத் தலைமைக் காரியாலய வெளியீடுகளிலிருந்து நேத்தாஜியின் பேச்சுகள், போர்ப் பிரகடனம் முதலிய விஷயங்கள் இதில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அரிய படங்கள் பத்துக்கு மேல் இருக்கின்றன.

'60' வருஷ காங்கிரஸ்: ஆசிரியர்: டாக்டர் பட்டாபி சீதாராமய்யா. கா. திரவியம் மொழி பெயர்ப்பு. கதம்பம் வெளியீடு. கிரௌன் 1×8. 58 பக்கம். விலை 12 அணா.

சென்ற அறுபது வருஷங்களில் காங்கிரஸ் எப்படி வளர்ந்து வந்திருக்கிறது என்பதைச் சுருக்கமாக எடுத்துரைக்கிறது. நல்ல புத்தகம். நல்ல மொழிபெயர்ப்பு.

பேடன் பவல்: தொகுத்தவர்: ஜே. டி. ராஜ், மாகாண சாரண ஆசிரியர், நாகர்கோவில். கிரௌன் 1×8. 38 பக்கம். விலை 5 அணா.

உலகத்தில் சாரணிய இயக்கத்தைப் பரப்பிய பேடன் பவல் பிரபுவைப் பற்றியும், அவருடைய சிறந்த சேவையைப் பற்றியும் சுருக்கமாய்க் கூறும் நல்ல புத்தகம்.

கற்றாழை நாரினால் பிரஷ்கள் செய்தல்: ஆசிரியர்: மே. சக்கரவர்த்தி, குடிசைத் தொழில் பதிப்பகம், குழப்பலூர், ஆரணி வழி. கிரௌன் 1×8. 32 பக்கம். விலை 6 அணா.

குடிசைத் தொழில் வளர்ச்சிக்கு ஆக்கம் தேட முயன்று வரும் இந்தக் காலத்தில், நம்முடைய கிராமங்களில், நம்முடைய மக்களைக் கொண்டே, இயந்திரத் தொந்தரை யின்றி எத்தனையோ உபயோகமான காரியங்கள் செய்யலாம். கற்றாழை நாரைக் கொண்டு பல விதமான பிரஷ்களை லகுவில் செய்ய இந்தச் சிறு வெளியீடு பெரிய அளவில் உதவும். விளக்கப் படங்கள் உள்ளன.

காந்தி–ஜோஷி கடிதப் போக்கு வரத்து: (இந்தியக் கம்யூனிஸ்டுகளைப் பற்றிய கேள்விகளுக்குப் பதில்.) பி. ராமமூர்த்தி மொழி பெயர்ப்பு. கிடைக்குமிடம்: ஜன சக்தி பிரசுராலயம், 1-6, டேவிட்சன் தெரு., ஜி. டி., சென்னை.

கம்யூனிஸ்டுகளின் அரசியல் ஒழுக்கத்தைச் சந்தேகிக்கிறார்கள். ருஷ்யாவிடம் பண உதவி பெற்று, மாஸ்கோவின் கட்டளையை நிறைவேற்றுகிறார்கள்—என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள், காந்திஜியும் இப்படித்தான் சந்தேகப்பட்டார். இந்தக் கடிதப் போக்கு வரத்து அவநம்பிக்கைகளை ஆதார பூர்வமாய்ப் போக்க முயலுகிறது. காந்திஜியின் மனத்தைப் பெரிதும் மாற்றியிருக்கிறது. தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள்.

ஆங்கிலம்

Inside Bengal 1941-1944, Forward Bloc and Its Allies Versus Communists. ஆசிரியர்கள்: அருண் போஸ், கோக்கா ராய். கிரௌன்

1×8. 65 பக்கம். (2) Forgotten Warriors: ஆசிரியர்: நிரஞ்சன் சென். கிரௌன் 1×8. 108 பக்கம். வெளியிட்டோர்: பீப்பிள்ஸ் பப்ளி ஷிங் ஹவுஸ், பம்பாய். கிடைக்கு மிடம்: ஜன சக்தி பிரசுராலயம், 1—6, டேவிட்ஸன் தெரு, ஜி. டி., சென்னை. விலை ரூ. 1-4-0.

முதல் புத்தகத்தில், கம்யூனிஸ்டு களைத் தாக்கிய சரத் போசுக்கும் அவர் சார்பினருக்கும் விளக்கமான, தீவிரமான போக்கில் அமைந்த, பதில் தரப் பெறுகிறது. 1942-ல் கம்யூனிஸ்டுகள் தேசத்தைக் காட்டிக் கொடுத்தார்கள் என்று சொல்வது தவறு என்பதை ஆராய்ச்சியுடன், ஆதாரம் காட்டி, மேற்கோள்க ளுடன் விளக்கிக் கூறுகிறது. இரண் டாவது புத்தகம், வங்காளத்தில் அருந்தொண்டாற்றி, சிறைப்பட்டு வாடும் வீரத் தொண்டர்களின் செயல்களைப் பற்றியும், அவர்களை விடுதலை செய்து, பயனுன பணி யாற்ற அவர்களுக்குச் சந்தர்ப்ப மளிக்க வேண்டியதன் அவசியத் தைப் பற்றியும் உருக்கமாக எடுத் துரைக்கிறது. கம்யூனிஸ்டு அனுதாபி கள் மட்டுமன்றி, பொது ஜன நன்மை கோரும் எவரும் இவற்றைப் படிப்பது அவசியம்.

—க. சு. அறிவோன்

வரப்பெற்ரும்

(1) திருக்காவூர்த் திருப்பதிகங்கள், (2) திருக்கோலக்காத் திருப்பதிகங் கள், (3) திருநெல்வேலித் திருப்பதி கம், (4) திருக்கலிக்காமூர்த் திருப்பதி கம், (5) திருப்பாவை: தருமபுர ஆதீன வெளியீடுகள். விலை தெரிய வில்லை.

✻

உண்டா, இல்லையா?

... ஆவணக்காப்பக ... 88857 ... சென்னை ...

பாரிஸ்டர்: குறிப்பிட்ட தேதியிலோ, அல்லது அதற்கு முந்தியோ, வேறு எந்தச் சமயத்திலோ, பிரதிவாதியிடமோ, வேறு எவரிடமோ, தனித்தோ, பிறருடன் இருந்துகொண்டோ—அவின் நண்பராயினும் சரி, சாதாரணமாக அறிமுகமானவராயினும் சரி,— செல்வராயினும் அன்னியராயினும் சரி,— நியாய மாகவோ, நியாய மல்லாமலோ, நீங்கள் கூறியதாகக் கூறப்பட்டு, வாதியால் நியாயமல்லாத தென்று மறுத விக்கப்படும் வாக்கியத்தை முக்கியமானதல்ல வென்றோ, அல்லது வேறு விதமாகவோ, நீங்கள் சொன்னீர்களா, சொல்ல வில்லையா, ஐயா? கேள்விக்கு, "உண்டு" "இல்லை" என்று பதில் சொல்லும்.

சாட்சி: என்ன "உண்டு" "இல்லை"?

—தொங்கவே

அற்புத வித்தை

பத்திரிகாசிரியர் ஒருவருடைய ஆபீஸ் அறைக்குள்ளே, குடல் தெறிக்க ஒரு சின்னப் பையன் ஓடிவந்து, "சார்! சார்! வெளியிலே ஓர் ஆள் வந்து நிற்கிறுன், சார்! பத்து நாளாக அவன் சாப்பிடவே இல்லை யாம்" என்ருன்.

ஆசிரியருடைய முகம் மலர்ந்தது:

"டேய்! ஓடிப்போய், சாப்பிடாமல் வாழும் வித்தையை அவன் எப்படிக் கற்றுக்கொண்டான் என்று கேட்டு வா. அது தெரிந்தால், இன்னும் ஒரு வாரத்துக்கு இந்தப் பத்திரிகையை மயங்காமல் நடத்த முடியும்" என்று ஆசிரியர் சொன்னுர்.

— எடிட்டர் அண் பப்ளிஷர்

பரீட்சை

பள்ளிக்கூட மல்ல; நன்றாகப்
படித்தீர்களா என்று நீங்களே
பார்த்துக் கொள்ளுங்கள்

"ஏழை மக்களுக்கு இது (கிழங்கு) அரிசி போலுள்ள சாதாரண உணவாகவே இருக்கிறது."—ஏன்? —பக்கம் 22

"ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதை நமக்குத் தெரியும்"—ஏகாதிபத்தியம் லெவாண்ட் நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதற்கும் ஓநாய் அழுகைக்கும் என்ன சம்பந்தம்? —ப. 55

"எந்த நோக்கங்களோடு (பிரிட்டிஷ்) ஆட்சி முறை ஆரம்பிக்கப்பட்டதோ, அவ்வித நோக்கங்கள் பூரணமாக நிறைவேறி யுள்ளன"—பிரிட்டிஷாரின் ஆட்சி முறை அமைந்துக்கொண்ட திட்டம் என்ன? நமக்குச் சாதகமான திட்டம் அவ்வாறுதான் அமைய வேண்டுமா? —ப. 58-60

செல்வம் முதலானவை நிலைத்திருப்பவை அல்ல; நிலையாமை உலகியற்கை—என்ற உண்மையை உணர்ந்த இந்தியர்கள் பாரமார்த்திகத்தில் மனத்தைச் செலுத்தி ஆன்ம நெறியை வளர்த்தனர். கிரேக்க நாட்டில் இதே உண்மை வேறு பயனை விளைத்தது. அது என்ன? —ப. 5

நிலையாமை உணர்ச்சி, நிலைத்த இன்ப வேட்கை—இவைதான் மதத்தின் தோற்றத்துக்குக் காரணங்கள். ஆனால், குடி கெடுக்கும் மதம் என்கிறார் ஒருவர்; உயிர் வளர்க்கும் மதம் என்கிறார் மற்றொருவர். மதம் வேண்டுமா, வேண்டாமா? —ப. 32 - 33

"நம்மவர்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பும் ருசியும் இல்லை என்பது உலகப் பிரசித்தமான விஷயம்."—நமக்குக் கிடைத்த இந்த அகில உலகப் புகழ் நம்மை என்ன நிலையில் வைத்திருக்கிறது? இந்தப் புகழைப் பரம்பரைச் சொத்தாக அளித்த முன்னோர்களைப் பற்றி வ.ரா. என்ன சொல்லுகிறார்? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? —ப. 7 - 9

செழிப்புக்குக் காரணம் பணம் என்று நினைக்கிறோம். பஞ்சத்துக்கும் அதன் பெருக்கந்தான் காரணம் என்கிறார் குமரப்பா. இந்தப் புதிருக்கு விடை கண்டீர்களா? —ப. 49 - 50

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன் றறியேன்" என்கிறார் தாயுமானார். "தனக்குப் போகத் தானம்" என்கிறது பழமொழி. இரண்டு மொழிகளுக்கும் ஒரு பொருள்தான் என்று இந்த இதழில் ஒரு கட்டுரை சொல்லுகிறது. பார்த்தீர்களா? —ப. 10 - 12

தீண்டாதார் பிரச்சினை தீர வேண்டுமா? அதற்கும் முதலாளித்துவ அடிப்படையில் இயங்கும் இன்றைய சமூக அமைப்பைத்தான் மாற்றியமைக்க வேண்டும் என்று ராஜாஜி கூறுகிறார். பணத்தின் சக்தி எவ்வளவு தூரம் செல்லுகிறது, பார்த்தீர்களா? —ப. 4

"...லேசிலே புதுமைப் போக்கை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் பழமை விரும்பிகள்.... நாட்டை யார் ஆண்டாலும் சரிதான். நாட்டின் செல்வத்தை யார் சுரண்டினாலும் அக்கறை யில்லை"—நமது முன்னோர்களைப் பற்றிய விளக்கம் போல இருக்கும் இந்தச் சித்திரம் யாரை விளக்க எழுந்தது? —ப. 14

"...மலேயாத் தோட்ட முதலாளிகளுக்குத் தமிழர்கள் மேல்தான் பிரியம். ஏன்?" —ப. 16

"தமிழனுடைய கூலியை அதிகப் படுத்தினால், அவன் சோம்பேறியாகி விடுவானாம்"—இந்த ஞானச் சுடர் எங்கே ஒளிர்கிறது? —ப. 16

கோரத்தை அழகு என்றால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? ஆனால் இப்படிப்பட்ட ஒரு பெரும்பொய் சித்திர உலகிலே நிலவி வந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமோ? —ப. 74 - 75

போ. குருசாமி

அவள் இப்பொழுது தாயாருக்கு உதவி செய்துகொண்டு, தன் வாழ்க்கைக்கு அறிய வேண்டுவனவற்றைப் படிப் படியாக அறிந்து வருகிறாள். நாள்தோறும் லைப்பாய் சோப்பை உபயோகிக்க தாயும் அவளுக்குக் கற்பிக்கிறாள். ஒவ்வொரு குடும்ப ஆரோக்கியத்திற்கும் சந்தோஷத்திற் கும் ஆபத்தான அழுக்கு அபாயத்திலிருந்து தப்பித் துக்கொள்ள அவளுக்கு பாதுகாப்பை அளித்திருக்கிறாள்.

லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது. அது ஒரு நல்ல பழக்கம்

L. 79-50 TM — LEVER BROTHERS (INDIA) LIMITED

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் தேயிலை பெண் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.



லிப்டன்ஸ் தேயிலை பெண்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTE 84 G



P.A.R.

பி. எ. ராஜு செட்டியார் & பிரதர்

வைரம், நகை வியாபாரம், கோயமுத்தூர்.



நிர்வாக ஆசிரியர் : வை. கோவிந்தன் ஆசிரியர் : சுப. நாராயணன்
Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115 - E, Mowbrays Road, Royapettah, Madras